Registered as a news paper.
பக்கங்கள்: பன்னிரண்டு
விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

பருத்தித்துறை வீதியுடன் யாழ்ப்பாணத்தில்
FedEx. Express
விரைவானது பாதுகாப்பானது நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திற்கும்
விரைவாக பொதிகள், கடிதங்களை
அனுப்பிட நீங்கள் நாடவேண்டிய
ஒரே ஸ்தாபனம்
THIRUMURUGAN COM NET
Opposite Diolag phone shop
259,கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 7835
Fax:021 222 7836 E.mail:thirumurugan5@lycosmail.com
பலநோக்கு கூ. ச. முன்பாக
46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
T.P: 021 222 7560
Fax:021 222 7310

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆவணி 11 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ரஜப் 10 (27.08.2004) வெள்ளிக்கிழமை இதழ் :329

## கண்காணிப்புக்குழுவும், நோர்வே அரசும்

# பக்கச்சார்புடன் செயற்படுகின்றனவா?

# அரசுக்குச் சந்தேகம் எழுந்துள்ளதாம்!



(கொழும்பு)

**இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் நடவடிக்கைக ளும், சமாதான முயற்சிகளில் மத்தியஸ்தத்தில் ஈடுபட்டிருக்கும் நோர்வே அரசாங்கமும் பக்கச்சார்புடன் செயற்படுகின்றனவா என்ற சந்தேகம் எழுந் திருப்பதாக அமைச்சரவைப் பேச்சாளர் மங்கள சமரவீர தெரிவித்தார்.**

**கொழும்பில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இந்தச் சந்தேகத்தினை எழுப்பி னார்.**

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர் -

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் நடவடிக்கை களும் நோர்வேயின் மத்தியஸ்தமும் ஒரு பக்கத்தைச் சார்ந்திராமல் இருக்குமானால் - அது தற்போதைய நிலையில் மிக விரும்பத்தக்கது.

மீண்டும் யுத்தமொன்று தோன்றுவதற்கான வாய்ப்புகள் எவையும் தற்போது தோன்றவில்லை. கிழக்கிலும் கொழும்பி லும் இடம்பெற்றுவரும் மனிதப் படுகொலைகளை நாம் கண்டிக்கின்றோம்.

இவை போர்நிறுத்த ஒப்பந்தத்தையும் மனித உரிமை களையும் மீறும் செயலாகும்.

சமாதானப் பேச்சுக்களை மீளவும் ஆரம்பிப்பதற்கு அரசிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இருக்கும் நம்பகத் தன்மையை வாய் வார்த்தைகளால் மாத்திரமன்றி செயற்பாட்டாலும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## போர்நிறுத்த ஒப்பந்தத்தால் நாடு பிளவுபட்டுள்ளதா?

### ஐ.தே.க. பலத்த கண்டனம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடனான போர்நிறுத்த ஒப்பந்தம் காரணமாக நாடு இரண்டாகப் பிளவுபட்டிருப்பதாக அரசாங்க அமைச்சர் ஒருவர் தெரிவித்த கருத்தை ஐக்கிய தேசியக் கட்சி வன்மையாகக் கண்டித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு பேசும்போதே கட்சியின் பிரதிச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இவ்வாறு கண்டனம் வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

போர் நிறுத்த ஒப்பந்தத்தின் காரணமாக ஜனாதிபதி உட்பட சகலருக்கும் சுதந்திரமாக (12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் - படைத்தரப்பு சந்திப்புக்கு கண்காணிப்புக்குழு தீவிர முயற்சி!

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளையும் அரசபடை அதிகாரிகளையும் மீளவும் சந்தித்துப் பேச்சுக் களை நடத்துவதற்கான முயற்சிகளில் இலங்கை போர்நிறுத் தக் கண்காணிப்புக் குழுவினர் ஈடுபட்டிருப்பதாகக் கொழும் புத் தகவல்கள் தெரிவித்தன.

கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் மீது இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங் களில் நடைபெற்ற தாக்குதல் சம்பவங்களை அடுத்து - விடுதலைப் புலிகள் படைத் தரப்புடனான சந்திப்புக்களை மேற்கொள்வதில்லையென தீர்மானித்தனர்.

இத்தகைய சந்திப்புக்கள் மூலம் கடந்த காலத்தில் கள நிலைமைகளை நேரே பேசித் தீர்வு காண்பதற்கும் யுத்தநிறுத்த மீறல்கள் அல்லது சந்தேகத்திற்கிடமான அசம் பாவிதங்கள் நிகழ்ந்தால் அதற்கான விளக்கங்கள் போன் றவற்றை இரு தரப்பும் நேரில் பரிமாறிக்கொள்ளவும் மிகவும் உதவியாக அமைந்தன.

தற்போது, நிலைமைகள் மோசமடைந்து வருவதால் - இரு தரப்பையும் சந்திக்கவைத்து பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்குப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு நடவ டிக்கை எடுத்துவருகிறது.

இத்தகைய பேச்சுக்களை இருதரப்புப் படையினரும் அவ்வப்போது நடாத்த ஒழுங்குகளை மேற்கொள்ளும் முகமாக, யுத்த நிறுத்தக் கண் (12 ஆம் பக்கம் பார்க்க)



நல்லைக்கந்தன் உற்சவ 6 ஆம் நாள் திரு வீதியுலாக் காட்சி

## பொதுமக்கள் பிரச்சினைகளுக்கு பேச்சு மூலமே நிரந்தரத் தீர்வு!

### குடாநாட்டுப் படைத் தளபதி கூறுகிறார்

(யாழ்ப்பாணம்)

பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச் சினைகளுக்கு பேச்சுவார்த்தை மூலம் தான் நிரந்தரத்தீர்வை எட்டமுடியும் என யாழ்.குடாநாட்டுக்கான இரா ணுவ கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் தெரிவித்தார்.



நேற்றையதினம் யாழ்.அரச செய லகத்தில், மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடை பெற்ற சந்திப்பின்போதே அவர் இவ் வாறு தெரிவித்தார். யாழ்.மாவட்ட அரச திணைக்கள நிலைய தலைவர்களும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் -

யாழ்.குடாநாட்டில் மக்கள் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றார்கள். இவ்வாறான பிரச் சினை ஓர் நீண்டகாலப் பிரச்சினையாகும்.

இந்தப் பிரச்சினையைக் குறுகிய காலத்தில் தீர்ப்பதென்பது ஓர் கடினமான விடயம். நாம் பேச்சுக்களை நடத்தவேண்டும். பேச்சுக்களின் மூலமாகவே தீர்வு ஒன்றை எட்டமுடியும்.

யாழ்.குடாநாட்டு மக்களுக்கு உதவுவதே தனது நோக்கம் (12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் உள்ளக பிரச்சினைகளை அவர்களே தீர்த்துக்கொள்ள வேண்டும்!

### பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கூறுகிறார்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கிடையிலான உள் ளக பிரச்சினைகளை அவர்களே தீர்த்துக் கொள்ளவேண்டுமென்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்க தெரி வித்தார்.

இது குறித்து அவர் மேலும் தகவல் தெரிவிக்கையில் -

புலிகளின் உள்ளக விவகாரங்களில் அர சாங்கமோ, படையினரோ தலையிடமாட் டார்கள். விடுதலைப் புலிகளுக்கும் - பிரிந்து சென்ற குழுவினருக்கும் இடையில் இருந்து வரும் கொலைகளுக்கும், வன்செயல்களுக் கும் அரசாங்கம் அல்லது படைகள் பொறுப் பேற்கவேண்டும் என்று விடுதலைப் புலிகள் குற்றம் சாட்டக்கூடாது.

அந்த வன்செயல்களுக்கு எந்த விதத் திலும் அரசாங்கப்படைகள் சம்பந்தப்பட வில்லை. இருந்தபோதிலும் அரசாங்க கட் டுப்பாட்டுப் பகுதிகளில் விடுதலைப் புலி களின் வன்செயல்கள் தேசிய பந்தோபஸ் துக்குப் பெரும் அச்சுறுத்தலாக உள்ளது.

பொதுமக்களின் பாதுகாப்புக்கு உத்தர வாதமளிப்பது அரசாங்கத்தின் தலையாய கடமை. சமாதான முயற்சிகளில் சம்பந்தப் (12 ஆம் பக்கம் பார்க்க)

## நிமால் கொலைச் சந்தேகநபர் பிரித்தானியாவில் தஞ்சம்!

### இலங்கைக்கு திருப்பி அனுப்புமாறு கோரிக்கை

(கொழும்பு)

யாழ்.ஊடகவியலாளர் நிமலராஜனை படு கொலைசெய்த குற்றச்சாட்டில் வழக்குத் தொடரப்பட்டிருக்கும் நெப்போலியன் அல் லது பூபாலன் ராஜ் என்று அழைக்கப்படும் செபஸ்தியான் ரமேஷ் என்ற சந்தேகநபர் பிரித்தானியாவில் அரசியல் அடைக்கலம் (12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ எயார் வான்வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
Your friend in the skies...

# சங்கானை பஸ் நிலையத்தில் கட்டாக்காலி நாய்கள் அதிகரிப்பு

சங்கானை பஸ்நிலையப் பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்து வருகிறது. சங்கானை பொதுச் சந்தை, மீன்சந்தை மற்றும் அதனை அண்டியுள்ள பகுதிகளில் அதிகளவு கட்டாக்காலி நாய்கள் அலைந்து திரிகின்றன.

கட்டாக்காலி நாய்கள் மீன் சந்தையில் காணப்படும் கழிவுகளை கொண்டு வந்து, மீன்சந்தைக்கு அருகில் காணப்படும் நிகரை ஞான வைரவர் ஆலய சூழலில் போடுகின்றன. இதனால் ஆலயத்துக்கு செல்லும் பக்தர்கள் பெரும் சிரமங்களை எதிநோக்கி வருகின்றனர்.

மற்றும் கட்டாக்காலி நாய்கள் இந்தப் பகுதிகளில் இறந்து கிடக்கின்றன. இதனால், துர்நாற்றம் வீசுவதுடன் சுகாதார சீர்கேடுகளையும் எதிர்நோக்க வேண்டியுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (47)

## கூட்டம்

(தென்மராட்சி)

தென்மராட்சி தனியார் கல்வி நிறுவனங்களுக்கான கூட்டம் இன்று மாலை 3 மணிக்கு தென்மராட்சி அரசியற்துறை அலுவலகத்தில் நடைபெறவுள்ளதாக தென்மராட்சி கோட்டப் பொறுப்பாளர் தெரிவித்தார்.(34)

## இருள் இனி விலகும் நூல் வெளியீடு

(கிளிநொச்சி)

தமிழ்க்கவி எழுதிய இருள் இனி விலகும் நூல் வெளியீட்டு விழா நாளை பிற்பகல் 3.30 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## "தேர்த் திருவிழா"

கோண்டாவில் குமரகோட்டம் சித்தி வைரவர் அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தின் தேர்த்திருவிழா இன்று காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது. மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (82)

## இலவசக் கண் பரிசோதனை முகாம்

(கொக்குவில்)

லயன்ஸ் கழகத்தின் மாவட்ட ஆளுநர் வருகையை முன்னிட்டு இன்று மாலை இலவச கண்பரிசோதனை முகாம் காலை 8 மணிமுதல் 11 மணி வரை கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கொக்குவில் லயன்ஸ் கழகம் ஏற்பாடு செய்துள்ள இந்த நிகழ்வில் கண் பார்வை குறைந்தவர்களுக்கு மூக்குக் கண்ணாடி வழங்கவுள்ளதாக, லயன்ஸ் கழகத்தலைவர் தெரிவித்தார்.

## பொது நூலகருக்கு பயிற்சி

(யாழ்ப்பாணம்)

பொது நூலகங்களுக்கான பயிற்சி நெறி இன்று முதல் எதிர்வரும் 30ஆம் திகதிவரை யாழ். நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

இந்தப் பயிற்சி நெறியில் நகர சபை, பிரதேச சபை, மாநகர சபை போன்றவற்றின் கீழ் இயங்கும் நூலகங்களில் பணிபுரியும் நூலகர்களை கலந்துகொள்ளுமாறு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க. இராசையா அறிவித்துள்ளார். (29)

## பரீட்சை முடிவுகள் அனுப்பிவைப்பு

(கொழும்பு)

வட இலங்கை சங்கீத சபையினால் நடாத்தப்பட்ட பரீட்சைகளின் பெறுபேறுகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இதில் ஆசிரியர் தரம் தவிர்ந்த ஏனைய முதலாம் தரம் முதல் 5ஆம் தரம் வரையான தரங்களுக்கான பெறுபேறுகளே கடந்த வாரம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக சங்கீத சபைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## இளைஞர் யுவதிகளுக்கான விளையாட்டுப் பயிற்சி!

யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைமன்றத்தினால் இளைஞர்கள் யுவதிகளுக்கான விளையாட்டுப் பயிற்சிகள் இன்று முதல் 29ஆம் திகதி வரை மூன்று தினங்கள் யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆரம்ப பாடசாலையில் யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைமன்ற உதவிப் பணிப்பாளர் சி.சிவதட்சணாமூர்த்தி தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதில் மெய்வல்லுனர் விளையாட்டுக்கள் கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம் ஆகியவற்றுக்கான பயிற்சி வகுப்புக்கள் நடைபெறும்.

வேகத்துக்கும், சிக்கனத்துக்கும், நீடித்த பாவனைக்கும் மீனவர்களுக்கு உதவும் உற்ற நண்பர்கள்
SUZUKI OUTBOARDS
SUZUKI MOTOR CORPORATION
300 Takatsuka, Hamamatsu, Japan
TOHATSU outboards
வெளி இணைப்பு இயந்திரங்கள்
27, 28, 29ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும் வர்த்தகக் கண்காட்சியில் அறை இல. 38இல் எங்களைச் சந்திக்கவும்.
யாழ். மாவட்ட ஏக விநியோகஸ்தர்கள் -
நியு லங்கா ரேடர்ஸ் (Pvt) Ltd
222, 226, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
Tel & Fax - 021 - 2222062, Tel - 021 222 2838
(C/3009)

# பணிநிலை வேண்டுகை

## ஆயப்பகுதியிற் கீழ்வரும் பணிநிலைகளுக்கு வேண்டுகைகள் கோரப்படுகின்றன

| | பணிநிலை | தகைமை | சம்பள அளவுத் திட்டம் |
|---|---|---|---|
| 01 | கணக்கு எழுதுநர் | க.பொ.த. உயர்தரத்தில் வணிகப் பிரிவில் சித்தியடைந்திருத்தல் | $\frac{3300 - 4300}{10 \times 100} + 2000$ |
| 02 | விலை மதிப்பீட்டாளர் (புடவை, இலத்திரனியல், ஊர்தி உதிரிகள்) ஒப்பந்த அடிப்படையில் | i) ஆண்டு 08 ii) குறிப்பிட்ட துறையில் 05 ஆண்டுகள் பட்டறிவு | நேரில் பேசித் தீர்மானிக்கப்படும் |
| 03 | ஆய அலுவலர் *(ஆண்கள்)* | க.பொ.த உயர்தரத்தில் 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் | $\frac{3630 - 4730}{10 \times 110} + 2000$ |
| 04 | ஆய உதவியாளர் *(ஆண்கள்)* | க.பொ.த சாதாரண தரத்தில் 04 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் | $\frac{3080 - 4180}{10 \times 110} + 2000$ |
| 05 | அலுவலக உதவியாளர் | ஆண்டு 08 | நேரில் பேசித் தீர்மானிக்கப்படும் |
| 06 | சமையலாளர் | குறிப்பிட்ட பணியில் பட்டறிவு இருத்தல் வேண்டும் | $\frac{4210 - 5410}{10 \times 120} + 2000$ |
| 07 | சமையல் உதவியாளர் | குறிப்பிட்ட பணியில் பட்டறிவு இருத்தல் வேண்டும் | $\frac{2830 - 3930}{10 \times 110} + 2000$ |

தகுதியுடையவர்கள் 2004.09.07 ஆம் நாள் காலை 10.00 மணிக்குத் தன் வரலாற்றுச் சான்றிதழ்களுடன் நடுவப் பணியகம், ஆயப்பகுதி, கிளிநொச்சி என்னும் முகவரிக்கு வருக.

மனிதவள மேலாளர்,
ஆயப்பகுதி, நிதித்துறை

2004.08.26

(C/2807)

# போருக்கான ஆயத்தத்தில் அரசாங்கம்; திடீரென தாக்குதல்களை ஆரம்பிக்குமா?

## இணையத்தளமொன்று கேள்வி எழுப்புகிறது

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா வெளிநாடு சென்றுள்ள சமயம் இடம்பெற்றுவரும் சம்பவங்கள், அரசு போரை நாடிச்செல்வதான செய்தியை வெளிப்படுத்தி நிற்கிறது. அத்தோடு அரசு ஏதாவதொரு காரணத்தை வைத்து திடீரென போரை ஆரம்பிக்கலாம் எனவும் நம்பகமாகத் தெரியவருகிறது எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

சந்திரிகா தான் நேரடியாகவே இவ்வாறான காரியங்களில் ஈடுபடாமல் தனது அமைச்சர்களையும், படை அதிகாரிகளையும் போர் பற்றிய செயற்பாட்டில் ஈடுபட வைப்பதே கடந்த காலத்தில் அவரது செயற்பாடாக இருந்தது. அது போன்றதொரு நடைமுறை அவரது தனிப்பட்ட விஜயத்தின்போதும் தற்போது ஏற்பட்டிருக்கிறது.

போருக்கான தயாரிப்புக்களில் அரசு ஈடுபடுகிறது என்பதற்கான சாண்றாக மூன்று காரணங்களை ஒப்புநோக்கலாம்.

முதலாவதாக, காயங்கேணிப் பிரதேசத்தில் படைகள் மேல் இரண்டு சிறு தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இவை பற்றிய விசாரணைகளை மேற்கொண்டு இந்தத் தாக்குதல்கள் பற்றிய நம்பகத்தனமையை அறிவதை விடுத்து இராணுவத்தளபதி 'யாராவது தாக்கினால் திருப்பித் தாக்குங்கள்' என்ற அறிவிப்பை விடுத்திருக்கிறார்.

போர்நிறுத்த உடன்படிக்கையானது அமுலில் இருக்கும் ஒரு கட்டத்தில் பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதியோ அவரில்லாதபோது பதில் பாதுகாப்பமைச்சரோ தான் இதுபற்றி முடிவுகளை அமைச்சரவையைக் கலந்தாலோசித்து எடுக்கவேண்டும். இந்தவகையில் இந்த நடைமுறையைமீறி இராணுவத்தளபதி உத்தரவு பிறப்பித்துள்ளதானது ஒரு குழப்பான நிலையை ஏற்படுத்தியுள்ளது.

தேசநலனை முன்னிட்ட நடவடிக்கைகளை இராணுவத்தினர் எடுக்கலாம் என்று ஒப்புநோக்கினாலும், அதேபோன்றதொரு நிலையை விடுதலைப்புலிகளும் எய்த, தமது உறுப்பினர்கள் யாராவது தாக்கப்பட்டால் அவர்களும் திருப்பித் தாக்க இந்த அறிவிப்பு வழியேற்படுத்தி நிற்கிறது.

குறிப்பாக இராணுவ முகாம்களில் தங்கியிருக்கும் ஆயுததாரிகள், புலனாய்வாளர்களால் மேற்கொள்ளப்படும் தாக்குதலுக்குப் பதிலடி கொடுப்பதானால் புலிகள் இராணுவ முகாமையே தாக்கவேண்டியதொரு நிலைக்கே இது வழிவகுத்துச் செல்லும்.

இரண்டாவதாக, இதுவரை காலமும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவைத் தமது தேவைகளுக்குப் பயன்படுத்த முனைந்த அரசு - இப்போது கண்காணிப்புக் குழுவுடன் நேரடியாகப் பொருதும் நிலைகுச் சென்றுள்ளது. கண்காணிப்புக் குழு ஒழுங்காகச் செயலாற்றவில்லை என்ற காரணத்தைக் காட்டி அதனைப் பற்றிய தரக்குறைவான பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகிறது.

இரு தரப்பாலும் விரும்பியேற்கப்பட்ட கண்காணிப்பாளர்களுக்கு நெருக்குதல் கொடுக்குமுகமான கருத்துக்களை அப்பட்டமாகப் பிரதிப் பாதுகாப்பமைச்சரே தெரிவித்து வருவதானது, அதன் சுயாதீனச் செயற்பாட்டை முடக்கி தாம் விரும்பும் பாணியில் அதனைச் செயற்பட வைப்பதற்கான வழியாகப் பயன்படுத்தப்படுகிறது.

கண்காணிப்புக் குழுவானது இரண்டு தரப்பையும் விசாரித்து நடவடிக்கை எடுக்கவேண்டுமே தவிர, சும்மா குறை கண்டுபிடித்துக் கொண்டிருக்கக்கூடாது என்ற ரீதியில் கூறப்பட்ட கருத்தானது, அது பக்கநிலை சார்ந்த .அமைப்பு என்பது போன்ற குற்றச்சாட்டாக அமைந்துள்ளது.

மூன்றாவதாகப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ திடீரென மணலாறு மாவட்டத்தின் முன்னணி நிலைகளுக்குச் சென்று பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பார்வையிட்டுள்ளார்.

அரசு போரை ஆரம்பிக்கும் மையமாக கிழக்கே இருந்தாலும், தாங்கள் மீண்டும் போரை ஆரம்பிக்கும்போது, விடுதலைப்புலிகள் மறுபுறமாக மணலாற்றை விடுவித்து மதவாச்சி, அநுராதபுர மாவட்டங்களின் பெரும்பகுதிகளைச் சூனியப் பிரதேசமாக்கி -

அப்பகுதிகளை சண்டைக்கான மையப் பிரதேசமாக மாற்றலாம் என்ற காரணத்தாலேயே இப்பகுதியின் பாதுகாப்பு ஏற்பாடு பலப்படுத்தப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் 2000 ஆம் ஆண்டு மணலாறுப் பிரதேசத்தின் பெரும்பகுதியை மீட்டபோது -மதவாச்சி, அநுராதபுர மாவட்டங்களின் எல்லைப்புற மக்கள் ஆயிரக்கணக்கில் அகதிகளாக வெளியேறியதும், இப்போதும் அதே மனநிலையில் இருப்பதுமே இவ்வாறான சம்பவம் மீண்டும் இடம்பெற்றால் பல்லாயிரக்கணக்கான மக்கள் வெளியேறுவார்கள் என்ற எதிர்பார்பிற்குக் காரணமாகும்.

மேற்குறிப்பிட்ட மூன்று காரணங்களும், இலங்கை அரசு போரை நோக்கி நகர்கிறது என்ற எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான ஜீ.எல்.பீரிஸின் குற்றச்சாட்டைத் தெளிவாக உறுதிப்படுத்தி நிற்கிறது.

## குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க ஆழமற்ற கிணறுகள் அமைக்கப்படும்

நகர அபிவிருத்தி நீர்வழங்கல் அமைச்சின் உதவியுடன் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் நிலவும் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ஆழமற்ற கிணறுகள் அமைக்கப்படவுள்ளதாகத் .தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் தினேஷ் குணவர்த்தன நேற்றுமுன்தினம் இந்த அறிவித்தலை விடுத்துள்ளார். முதற்கட்டமாக திருமலை, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் கிணறுகளை அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் நூறு கிணறுகள் அமைக்கப்படவுள்ளன. யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் கிழக்குப் பகுதிகளிலும் விரைவாகப் பல கிணறுகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள அவர் - மன்னார் மாவட்டத்தில் கிணறுகள் அமைப்பது தொடர்பாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பேச்சு நடத்திவருவதாகவும் தெரிவித்தார்.

## ஜனநாயக உரிமைகளை மதித்து நடக்குமாறு மாலைதீவு ஜனாதிபதிக்கு சந்திரிகா ஆலோசனை



(கொழும்பு)

நாடாளுமன்ற ஜனநாயகத்தையும், மனித உரிமையையும் மதித்து நடக்குமாறு மாலைதீவு அதிபர் அப்துல் கையுமுக்கு ஜனாதிபதி சந்திரிகா அறிவுரை கூறிய சம்பவமொன்று பலருக்கும் ஆச்சரியத்தை அளித்துள்ளது.

அண்மைக் காலத்தில் மாலைதீவில் இடம்பெற்றுவரும் மக்கள் போராட்டம், கலவரம் மற்றும் அசம்பாவிதங்கள் காரணமாக, மாலைதீவு ஜனாதிபதியான அப்துல் கையூம், தனது பாதுகாப்புப் படையினர் மூலம் சில பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டார். இதுதவிர, மாலைதீவு நாடாளுமன்றத்திலும் சில அசம்பாவிதங்கள் இடம்பெற்றமை தெரிந்ததே.

இதுகுறித்து மாலைதீவு ஜனாதிபதிக்கு, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எழுதியுள்ள கடிதத்தில், மாலைதீவு நாடாளுமன்றத்தில் ஜனநாயக நடைமுறைகளுக்கு மதிப்பளிக்கும்படியும், மனித உரிமைகளுக்கு எப்போதும் மதிப்புக் கொடுத்து, மக்கள் ஆணையை ஏற்று நடக்கும்படியும் சந்திரிகா ஆலோசனை வழங்கியுள்ளார்.

இந்த ஆலோசனை குறித்து கொழும்பு நாளிதழ்கள் பெரிய அளவில் செய்திகளை வெளியிட, அதை கல்விசார் பிரமுகர்களும் உயர்மட்ட அரசியலாளர்கள் மற்றும் அரசியல் ஆய்வாளர்களும் மிகக் கடுமையாக விமர்சித்துள்ளதுடன், இந்த ஆலோசனைகளை சந்திரிகா முதலில் தனக்குத்தானே கூறுவதுடன், ஜேவிபிக்கும் கற்பிக்கட்டும் என்று தெரிவித்தனர்.



கடந்த செவ்வாய்க்கிழமையன்று மணலாறு இராணுவ முன்னரங்குக்குச் சென்ற பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அங்கிருந்து விடுதலைப் புலிகளின் காவலரண்களை அவதானிப்பதைப் படத்தில் காணலாம்.

## அலரிமாளிகைப் பகுதியில் துப்பாக்கி ரவைகளும், பிரபாகரனின் படமும் மீட்பு

அலரிமாளிகை அமைந்துள்ள உயர் பாதுகாப்பு வலயப்பகுதியில் உள்ள கட்டடம் ஒன்றில் - துப்பாக்கி ரவைகள் சிலவும், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் கலண்டர் ஒன்றையும் பிரதமரின் பாதுகாப்புப் பிரிவினர் கண்டெடுத்துள்ளனர்.

எம்.9 ரக துப்பாக்கி ரவைகளும், இந்தவருடம் வெளிவந்த பிரபாகரனின் உருவம்பதித்த வர்ணக் கலண்டரும் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இவை இந்தப் பகுதியில் எவ்வாறு வந்தன என்பது குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரதமரின் பாதுகாப்புப் பிரிவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (01)

## குடும்பஸ்தர் மர்ம மரணம்!

வவுனியா மாவட்டத்தின், கோவிலகுளம் பகுதியில் மர்மமான முறையில் கொல்லப்பட்ட ஒருவரது சடலம் நேற்றுமுன்தினம் வவுனியா பொலிஸாரால் மீட்கப்பட்டது.

உயிரிழந்தவர் வவுனியாவைச் சேர்ந்த என்.இராமலிங்கம் (வயது 48) என அவரது உறவினர்களால் அடையாளம் காணப்பட்டது.

இறந்தவரின் சடலம் வவுனியா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இவர் எவ்வாறு உயிரிழந்தார் என்பது குறித்து, எந்தத் தகவலும் தமக்குக் கிடைக்கவில்லையெனவும், இந்தச் சம்பவங்கள் குறித்த விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும், வவுனியா பொலிஸ் தலைமையக பொறுப்பதிகாரி ரத்னசிறி தெரிவித்தார்.

## இளம் குடும்பஸ்தர் சுட்டுக்கொலை!

(கொழும்பு)

நீர்கொழும்பு வடலிகமுவ பிரதேசத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

வடலிகமுகே அலிகாமத்தைச் சேர்ந்த 32 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையார் ஒருவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

வீட்டில் தங்கியிருந்த இவர்மீது மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இரு ஆயுததாரிகள் துப்பாக்கிப் பிரயோகத்தைச் செய்துவிட்டுத் தப்பியோடிவிட்டதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இந்தக் கொலைக்கு தன்னியக்க பிஸ்டல் ஒன்று பயன்படுத்தப்பட்டதாக விசாரணைகளை மேற்கொண்ட நீர்கொழும்பு பொலிஸார் தெரிவித்தனர்.

## ஒரு லீற்றர் டீசலால் எட்டு ரூபா நட்டமாம்

### பெற்றோலிய கூட்டுத்தாபனம் தகவல்

(கொழும்பு)

டீசலால் ஒரு லீற்றருக்கு எட்டு ரூபா நஷ்டம் ஏற்படுவதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஜாலிய மெதகம தெரிவித்தார்.

பெற்றோலியப் பொருட்களின் விலை அதிகரிப்புப் பற்றி கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது- தற்போது டீசலின் விலை நான்கு ரூபாவால் அதிகரித்துள்ள போதிலும், ஒரு லீற்றர் டீசலுக்கு 8 ரூபா நட்டம் ஏற்பட்டவண்ணமே உள்ளது.

மாதமொன்றுக்கு 120 மில்லியன் லீற்றர் டீசல் விற்பனையாகின்றது. இந்த நிலையில் அரசுக்கு பல மில்லியன் ரூபா நட்டம் ஏற்படுகிறது. இதனைத் தவிர்க்கும் நடவடிக்கை ஒன்றை அரசு விரைவாக மேற்கொள்ளவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஜே.வி.பியின் வரவு - செலவுத்திட்டம் நிதி அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்படும்!

வேறொரு வரவு - செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதன் பொருட்டு ஜே.வி.பியினரால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தயாரிக்கப்படவுள்ள வரவு-செலவுத்திட்ட ஆலோசனையை நிதியமைச்சரிடம் சமர்ப்பிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. சிறு மற்றும் கிராமியக் கைத்தொழில் பிரதி அமைச்சர் உட்பட ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும், பல்கலைக்கழக கலாநிதிகளும் இந்தக் குழுவில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

தேவைப்படும் மக்களுக்கு நிவாரணம் கிடைக்கும் விதமாகப் புதிய ஆலோசனைகள் பல, இந்த வரவு-செலவுத்திட்ட அறிக்கையில் சேர்த்துக்கொள்ளப்படுமென அந்த முன்னணியின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இன்னும் இருவார காலப்பகுதியில் இந்த ஆலோசனைகள் தயாரிக்கப்பட்டுப் பிரதமரிடம் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதலாவது வரவு - செலவுத் திட்டம் நவம்பர் மாதம் 10 ஆம் திகதியன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.(தே)

## பாவா, யோகா கொலைகளுக்கு டக்ளஸ் கண்டனம் தெரிவிப்பு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு காயங்கேணியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் கொல்லப்பட்டமைக்கு கண்டனம் தெரிவிப்பதாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளரும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது - கருத்துக்களுக்கு கருத்துக்களாலேயே பதில் தெரிவிக்கவேண்டும். அதைவிடுத்து ஆயுதங்களால் பதிலளிக்க முனையக்கூடாது.

காயங்கேணியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களான பாவா, யோகா ஆகியோர் கொல்லப்பட்டுள்ளமை, முன்னேறிவரும் சமாதானப் பேச்சைப் பின்னடைவுக்கு இட்டுச்செல்லும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 3 ஆவது ஒருநாள் போட்டியிலும் இலங்கை அணியே வெற்றி!



தம்புள்ளவில் நேற்றுமுன்தினம் நடந்த பகல் - இரவு ஆட்டத்தில் இலங்கை அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் தென்னாபிரிக்க அணியைத் தோற்கடித்து தொடரைக் கைப்பற்றியது.

தென்னாபிரிக்க அணி நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடியது. சிமித், கிப்ஸ் ஆகியோர் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கினர்.

சிமித் 16 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க அடுத்துவந்த குளுஸ்னர் ஓட்டமெதுவும் பெறாமலேயே ஆட்டமிழந்து சென்றார். கிப்ஸுடன் கலிஸ் ஜோடி சேர்ந்து நிதானமாக ஆடிக்கொண்டிருந்தபோது கிப்ஸ் 49 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய றுடோல்ப் 18 ஓட்டங்களை மட்டுமே பெற்று ஆட்டமிழந்தார்.

இந்த நிலையில் 52 ஓட்டங்களைப் பெற்றிருந்த கலிஸ் ஹேரத்தின் பந்துவீச்சுக்கு விக்கெட்டைப் பறிகொடுத்தார். இதன்பின்னர் மளமளவென தென்னாபிரிக்க அணியின் விக்கெட்டுக்கள் சாய்ந்தன.

பௌச்சர் 7, பொலக் 14, டுமினி 3, போயே 10, டௌசன் 11 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர்.

50 ஓவர்கள் நிறைவில் தென்னாபிரிக்க அணி 191 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

பந்துவீச்சில் டில்ஷான், ஹேரத் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும், லொக்கு ஆராய்ச்சி 2 விக்கெட்டுக்களையும், வாஸ், சொய்ஸா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

அடுத்து துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 47.4 ஓவர்களிலேயே 6 விக்கெட் இழப்புக்கு 192 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது.

இந்த வெற்றிக்கு அணித்தலைவர் அத்தபத்து ஆட்டமிழக்காமல் பெற்ற 97 ஓட்டங்கள் பேருதவியாக அமைந்தது.



குணவர்த்தன 5, ஜெயசூர்யா 11, சங்ககார 14, ஜெயவர்த்தன 21, டில்ஷான் 3, சந்தன 6, வாஸ் ஆட்டமிழக்காமல் 16 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் குளுஸ்னர் 2 விக்கெட்டையும், பொலக், டௌசன், போயே, டுமினி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

5 போட்டிகள் கொண்ட தொடரில் இலங்கை அணி 3 போட்டிகளில் வெற்றிபெற்று தொடரைக் கைப்பற்றியுள்ளது.




# ஆண்கள் ஹொக்கி போட்டி; இறுதியாட்டத்தில் ஹொலன்ட்

ஏதென்ஸ் ஒலிம்பிக் ஆண்கள் ஹொக்கி அரையிறுதியில் ஹொலன்ட் அணி 3-2 என்ற கோல் கணக்கில் ஜேர்மனியை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

ஏதென்ஸ் ஒலிம்பிக் ஆண்கள் ஹொக்கிப் போட்டியில் ஹொலன்ட், ஜேர்மனி, அவுஸ்ரேலியா, ஸ்பெயின் ஆகிய அணிகள் அரையிறுதிக்குத் தகுதிபெற்றுள்ளன.

நேற்றுமுன்தினம் இரவு நடந்த அரையிறுதி ஆட்டம் ஒன்றில் ஹொலன்ட் - ஜேர்மனி அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

இந்த ஆட்டம் ஆரம்பம் முதலே பரபரப்பாக இருந்தது. ஆட்டத்தின் 3 ஆவது நிமிடத்தில் ஜேர்மனி கோல் அடித்தது. அந்த கோலை மத்யாஸ் விக்கார் அடித்தார்.

அடுத்த 3 ஆவது நிமிடத்தில் ஹொலன்ட் பதில் கோல் திருப்பியது. இந்த கோலை டிகே தாகெமா அடித்தார். முதல் பாதியில் இரு அணிகளும் 1-1 கோல் கணக்கில் சமநிலையில் இருந்தன.

பின்பாதி ஆட்டத்தில் ஹொலன்ட் அணியின் மார்ட்டின் இகெல்பூம் 47 ஆவது நிமிடத்திலும், நூஜெர் 51 ஆவது நிமிடத்திலும் அடுத்தடுத்து கோல் அடித்தனர்.

ஹொலன்ட் 3-1 என்ற கோல் கணக்கில் முன்னணி பெற்றதும் ஜெர்மனி பதில் கோல் திருப்ப கடுமையாக போராடியது. 59 ஆவது நிமிடத்தில் அந்த அணி கோல் அடித்தது. கிறிஸ்டோப் பிச்மன் இந்த கோலை அடித்தார்.

அதன் பின்னர் இரு அணியினராலும் மேலும் கோல் எதுவும் அடிக்க முடியவில்லை. முடிவில் தற்போதைய சம்பியன் ஹொலன்ட் அணி 3-2 என்ற கோல் கணக்கில் ஜேர்மனியை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

# சங்கிலி குண்டெறிதல் போட்டியில் ரஷ்ய வீராங்கனை புதிய சாதனை



ஏதென்சில் ஒலிம்பிக் போட்டியில் நேற்றுமுன்தினம் பெண்களுக்கான சங்கிலிக் குண்டு எறியும் பந்தயம் நடந்தது. இதில் பங்கேற்ற ரஷ்ய வீராங்கனை ஒல்கா குஜின் கோவா தங்கப்பதக்கம் பெற்றதோடு புதிய ஒலிம்பிக் சாதனை படைத்தார்.

அவர் 75.02 மீற்றர் தூரம் எறிந்தார். சிட்னி ஒலிம்பிக்கில் போலந்து வீராங்கனை கமிலா 71.10 மீற்றர் தூரம் எறிந்ததே சாதனையாக இருந்தது.

கியூப வீராங்கனை யுனைகா கிராபோர்ட் 73.16 மீற்றர் தூரம் எறிந்து வெள்ளிப்பதக்கமும், ஜேர்மனி வீராங்கனை பெடி ஹெல்டர் 72.73 மீற்றர் தூரம் எறிந்து வெண்கலப் பதக்கமும் பெற்றனர்.

இதேவேளை, பெண்களுக்கான 200 மீற்றர் ஓட்டத்தில் ஜமேக்காவுக்கு தங்கப் பதக் கம் கிடைத்தது. அந்த நாட்டைச் சேர்ந்த வெரோனிகா கம்ப்பெல் 22.05 வினாடியில் கடந்து தங்கப் பதக்கம் பெற்றார்.

இந்தப் போட்டியில் அவர் பெற்ற 2 ஆவது பதக்கம் இதுவாகும். 100 மீற்றர் ஓட்டத்தில் வெரோனிகா வெண்கலப் பதக்கம் பெற்றிருந்தார். அமெரிக்காவைச் சேர்ந்த அலைசன் பெலிக்ஸ் 22.18 வினாடியில் கடந்து 2 ஆவது இடத்தையும், பகாமஸ் வீராங்கனை டெபிபர்க்கசன் 22.30 வினாடியில் கடந்து 3 ஆவது இடத்தையும் பிடித்தனர்.

பெண்களுக்கான 400 மீற்றர் தடைதாண்டும் ஓட்டத்தில் கிரீஸ் வீராங்கனை பேனி ஹல்கியா தங்கப் பதக்கம் பெற்றார். அவர் பந்தய தூரத்தை 52.82 வினாடியில் கடந்தார்.

ருமேனியாவைச் சேர்ந்த லோனியா 53.83 வினாடியில் கடந்து வெள்ளிப் பதக்கமும், உக்ரைனைச் சேர்ந்த எடினா 53.44 வினாடியில் கடந்து வெண்கலப் பதக்கமும் பெற்றனர்.

# வட்டக்கச்சியில் இடம்பெற்ற உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

வட்டக்கச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடாத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி நேற்று வட்டக்கச்சி மைதானத்தில் காலை 8.30 மணிமுதல் மாலை வரை நடைபெற்றது.

முன்னதாக மங்கள விளக்கினை வட்டக்கச்சி காவல்துறைப் பொறுப்பாளர் சுந்தர், கரைச்சிப் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் சிவநேசன் ஏற்றிவைக்க, தேசியக் கொடியை வட்டக்கச்சி காவல்துறைப பொறுப்பாளர் சுந்தர் ஏற்றிவைத்தார். லக்கிஸ்ரார் விளையாட்டுக்கழக கொடியை அதன் உபதலைவர் ஜெகன்தன் ஏற்றினார். இதன் பின்னர் விளையாட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

முதலாவதாக ஜெகமீட்பர் அணிக்கும், இளைஞர் வட்ட அணிக்குமிடையில் இடம்பெற்ற போட்டியில் ஜெகமீட்பர் அணி 3-0 என்ற கோல் கணக்கில் இளைஞர் வட்ட அணியை வென்றது.

இரண்டாவது போட்டி வட்டக்கச்சி மகாவித்தியாலய அணிக்கும், உருத்திரபுர விளையாட்டுக்கழக அணிக்குமிடையில் இடம்பெற்றது. இதில் உருத்திரபுர விளையாட்டுக் கழகம் 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

மூன்றாவது போட்டி திருவையாறு விளையாட்டுக் கழகத்திற்கும், ஸ்கந்தா அணிக்குமிடையில் நடைபெற இருந்தபோது திருவையாறு அணி சமுகமளிக்காத காரணத்தால் ஸ்கந்தா அணி வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

நான்காவது போட்டி உழவர் ஒன்றிய வெள்ளை அணிக்கும், சுப்பராங் அணிக்குமிடையில் நடைபெற இருந்தும் சுப்பராங் சமுகமளிக்காததால், உழவர் ஒன்றிய வெள்ளை அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது.

இது போலவே ஐந்தாவது போட்டியில் விக்னேஸ்வரா - உதயதாரகை அணிகளுக்கிடையில் நடைபெற இருந்தும் விக்னேஸ்வரா சமுகமளிக்காததால், உதயதாரகை வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

ஆறாவது போட்டி - திருநகர் ஸ்ரார் அணிகளுக்கிடையில் இடம்பெற்றது. இதில் ஸ்ரார் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

ஏழாவது போட்டி - இளைஞர் வட்ட அணிக்கும், ஜோனிபர் அணிககும் இடையில் நடைபெற இருந்தும் ஜோனிபர் அணி சமுகமளிக்காத காரணத்தால் இளைஞர் வட்ட அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

எட்டாவது போட்டி - உழவர் ஒன்றிய நீல அணிக்கும், வன்னேரி சோலை அணிக்கும் இடையில் இடம பெற இருந்தபோதும், சோலை அணி சமுகமளிக்காத காரணத்தால் உழவர் ஒன்றிய நீல அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. (09)




# ஹொலன்ட் முத்தரப்பு கிரிக்கெட் 3 ஆவது லீக் ஆட்டம் மழையால் ரத்து

(அம்ஸ்டர்டாம்)

மூன்று நாடுகள் பங்கேற்கும் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான்- அவுஸ்ரேலிய அணிகளுக்கு இடையில் நடைபெறவிருந்த ஆட்டம் மழையால் கைவிடப்பட்டது. இதனால இரு அணிகளுக்கும் தலா 3 புள்ளிகள் வழங்கப்பட்டு இரு அணிகளும் இறுதிப்போட்டிக்கு முன்னேறின.

3 நாடுகள் போட்டியின் முதல் லீக் ஆட்டத்தில் இந்திய அணி 66 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பாகிஸதானிடம் தோற்றது.

இந்திய - அவுஸ்ரேலிய அணிகள் மோதிய ஆட்டம் மழை காரணமாக பாதியில் நிறுத்தப்பட்டது. வெற்றிப் புள்ளிகள் இரு அணிகளுக்கும் (தலா 3 புள்ளி) பகிர்ந்தளிக்கப் பட்டது.

இந்த நிலையில், அவுஸ்ரேலிய- பாகிஸ்தான் அணிகள் இடையேயான கடைசி லீக் ஆட்டம் நேற்று முன்தினம் நடைபெறுவதாக இருந்தது.

அம்ஸ்டர்டாமில் தொடர்ந்து பெய்த மழை காரணமாக பாகிஸ்தான் - அவுஸ்ரேலியா இடையேயான ஆட்டம் ஒரு பந்து கூட வீசப்படாமல் கைவிடப்பட்டதாக அறிவிக்கப் பட்டது. இதனால் இரு அணிகளுக்கும் தலா 3 புள்ளிகள் வழங்கப்பட்டன.

லீக் ஆட்ட முடிவில் பாகிஸ்தான் 9 புள்ளிகளுடன் இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. கைவிடப்பட்ட இரு ஆட்டத்திலும் தலா 3 புள்ளி பெற்ற அவுஸ்ரேலியா 6 புள்ளிகளுடன் இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது. 3 புள்ளிகள் மட்டுமே பெற்ற இந்திய அணி இறுதி வாய்ப்பை இழந்து வெளியேறியது.

பாகிஸ்தான் - அவுஸ்ரேலியா அணிகள் மோதும் இறுதிப் போட்டி நாளை நடைபெறவுள்ளது.

## நீளம் பாய்தல் போட்டியில்

# இந்திய வீராங்கனை அஞ்சு இறுதிச் சுற்றுக்குத் தகுதி!



ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் நீளம் தாண்டுதல் போட்டியின் தகுதிச்சுற்றில் 6.69 மீற்றர் நீளம் பாய்ந்து இந்திய வீராங்கனை அஞ்சு ஜோர்ஜ் இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றார்.

இந்தியாவுக்கு பதக்கம் பெற வாய்ப்பு உள்ளவர்களில் ஒருவராக கருதப்படும் அஞ்சு ஜோர்ஜ் உட்பட 39 வீராங்கனைகள் இந்தப் போட்டியில் கலந்துகொண்டனர். அஞ்சு ஜோர்ஜ் 'ஏ' பிரிவில் கலந்துகொண்டார்.

இறுதிப் போட்டிக்கு தகுதி பெற 6.65 மீற்றர் தூரம்தாண்ட வேண்டும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. அஞ்சு ஜோர்ஜ் தனக்கு கிடைத்த முதல் வாய்ப்பிலேயே 6.69 மீற்றர் தூரம் தாண்டி இறுதிப் போட்டிக்கு தகுதிபெற்றார்.

ஒலிம்பிக் போட்டி இறுதிச் சுற்றுக்கு தகுதிபெற்ற 2 ஆவது இந்திய தடகள வீராங்கனை அஞ்சு ஜோர்ஜ் ஆவார். இதற்கு முன்பு 1984 ஆம் ஆண்டு லொஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்கில் 400 மீற்றர் தடை தாண்டும் ஓட்டத்தில் பி.டி.உஷா இறுதிச் சுற்றுக்கு தகுதிபெற்றிருந்தார்.

நீளம் தாண்டுதல் தகுதிச் சுற்று முடிவில் 12 வீராங்கனைகள் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றனர். அவர்கள் விபரம் வருமாறு -

மரியன் ஜோன்ஸ் (அமெரிக்கா). ரிபிடேவா (ரஷ்யா), ஜாடே ஜோன்சன் (இங்கிலாந்து), இரினா கோடாவா (ரஷ்யா), கரோலினா (சுவீடன்), தொம்சன் (அவுஸ்ரேலியா), கிரேஸ் (அமெரிக்கா), யெலினா (கஜகஸ்தான்), அஞ்சு ஜோர்ஜ் (இந்தியா), பினாக்கா (ஜெர்மனி), டுயுனிடே (ஹங்கேரி).

# பளு தூக்கும் போட்டியில் ஈரான் வீரர் புதிய சாதனை

ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் 105 கிலோ பிரிவு பளு தூக்கும் போட்டியில் ஈரானிய வீரர் ஹுசேய்ன் ரிஷாஷடா புதிய ஒலிம்பிக் சாதனை படைத்து தங்கப்பதக்கத்தைப் பெற்றார்.

கடந்த வருடம் 263 கிலோ பாரம் தூக்கி தான் படைத்த உலக சாதனையை முறியடித்தே இந்தப் புதிய சாதனையைப் படைத்தார். இவர் 263.5 கிலோ பாரம் தூக்கி சாதனை படைத்தார்.

இந்தப் போட்டியில் லத்விய வீரர் வெள்ளிப் பதக்கத்தையும், பல்கேரிய வீரர் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.



# உயர் பாதுகாப்பு வலயங்கள் உள்ளவரை இயல்பு நிலையை ஏற்படுத்த முடியாது!

## அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம்

அதி உயர் பாதுகாப்பு வலயம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளவரையில், தமிழர் தாயகப்பகுதியில் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்தமுடியாது என, யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம் - நோர்வே தூதரக செயலாளர் கஜெஸ்லி ரொறம்டாலிடம் தெரிவித்தது.

நேற்றுமுன்தினம் நோர்வே தூதரகச் செயலாளரைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே, அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது குடாநாட்டின் அரசியல் நிலைமைகள் தொடர்பாக நோர்வே தூதரகச் செயலாளருக்கு விளக்கமளித்த அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத்தலைவர்,

குடாநாட்டு சமூகம் எப்போதுமே சமாதானத்தை விரும்பி நிற்கின்றது. புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன்னரே குடாநாட்டு மக்கள் சமாதானத்தை வேண்டி பல்வேறு செயற்பாடுகளை நடத்தினர்.

தமிழர் தாயகத்தின் பிரதான பொருளாதார வளங்களான கடற்தொழில் மற்றும் விவசாயம் ஆகிய தொழில்கள் அதியுயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் முடக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார்.(லெ)



தென்மராட்சி பிரதேச செயலகத்தில் தட்டெழுத்தாளராகக் கடமையாற்றி வெளிநாடு சென்ற திருமதி சக்திராணி நல்லைநாதனுக்கு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அன்பளிப்பு வழங்கிக் கௌரவிக்கிறார். (24)

## யாழ். பிரதேச செயலகத்தில் இன்று நடமாடும் சேவை!

றெக்கிளமேசன் மேற்கு, குருநகர் மேற்கு ஆகிய கிராம சேவையாளர் பிரிவு மக்களுக்கு - வாக்காளர் இடாப்பில் பெயர் சேர்த்தல், தேசிய அடையாள அட்டை பெற்றுக் கொடுத்தல் போன்ற சேவைகளுக்கான நடமாடும் சேவையொன்று, இன்று காலை 9 மணிக்கு குருநகர் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறும்.

சம்பந்தப்பட்டவர்கள், தங்கள் வசமுள்ள ஆவணங்களுடன் சமூகமளித்து, இந்தச் செயன்முறையின் உச்சப் பயன்பாட்டைப் பெற்றுக் கொள்ளுமாறு - யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் கேட்டுக் கொள்கின்றார். ஆவணங்கள் இல்லாதவர்களுக்கு அவற்றைப் பெற்றுக் கொடுக்க மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## செவிப்புலனற்றோர் நிறுவன முதலாம் ஆண்டு நிறைவுவிழா

இலங்கை செவிப்புலனற்றோர் நிறுவனத்தினது முதலாம் ஆண்டு நிறைவு விழாவும், வருடாந்தப் பொதுக்கூட்டமும் நாளை காலை 10.30 மணிக்கு - சீனியர் லேன் கலட்டி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தலைமையகத்தில் செ. செல்வகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம், கொழும்பு, திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா ஆகிய மாவட்டங்களிலிருந்து அந்தந்த மாவட்ட செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனப் பிரதிநிதிகளும் கலந்துகொள்ளும் இந்த மாநாட்டில், அரச அதிபர் செ.பத்மநாதனும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமாரும் கலந்து கொள்ளவுள்ளனர். (31)

## 'ஏரோடியாரின் சபதம்' நாட்டுக்கூத்து நாளை நெடுந்தீவில்

அண்ணாவியார் சைமன் யேசுதாசன் அவர்களின் நெறியாழ்கையில் உருவான 'ஏரோடியாரின் சபதம்' நாட்டுக்கூத்து, நாளை இரவு 8.00 மணிக்கு நெடுந்தீவு புனித யுவானியார் ஆலய தியாகு கலையரங்கில் மேடையேற்றப்படவுள்ளது.

நெடுந்தீவு மத்தி, மேற்கு கிராம அபிவிருத்திச் சங்க உபதலைவர் சி.அந்தோனிப்பிள்ளை தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக கலாபூசணம் செ.மெற்றாஸ்மெயில், ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நெடுந்தீவு மத்தி சென் ஜோன்ஸ் நாடகமன்றமும், நீக்கிலாஸ் கலா மன்றமும் இணைந்தே இந்தக் கூத்தை நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் மேடையேற்றுகின்றனர். (113)

## போயா ஆன்மீக நிகழ்ச்சிகள்

யாழ். பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் நாளைமறுதினம் போயா ஆன்மீக நிகழ்ச்சிகள் அதிகாலை 5.00 மணிக்கு நகர சங்கீர்த்தனத்துடன் ஆரம்பமாகி, நண்பகல் நாராயண சேவையுடன் நிறைவுபெறும். அன்று வைத்திய கலாநிதி கணேசமூர்த்தியின் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறும்.

## விளக்கு சஞ்சிகையின் ஏற்பாட்டில் ஆசிரியர்களுக்கிடையே போட்டிகள்

இந்த வருட ஆசிரியர் தினத்தை முன்னிட்டு விளக்கு சஞ்சிகை - அதிபர்கள், ஆசிரியர்கள் மத்தியில் எழுத்தாக்கப் போட்டி ஒன்றை நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

கட்டுரை, விமர்சனக்கட்டுரை, கவிதை, சிறுகதை போன்ற ஆக்கங்களிலேயே போட்டி அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழீழக் கல்விப் புலம் சார் சமகால நிகழ்வுகளைக் கருப்பொருளாகக் கொண்டதாகவே ஆக்கங்கள் படைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

எழுத்தாளர்கள் ஆக்கங்களின் மேல் தமது பெயரையோ அல்லது புனைபெயரையோ குறிப்பிடாது, கடிதம் ஒன்றில் தனியாக தமது விபரங்களைக் குறிப்பிட்டு இணைத்து அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

கட்டுரைகள் 400 சொற்களுக்கு மேற்படாமலும், கதைகள் 400 தொடக்கம் 750 சொற்களுக்குள் அடங்கக் கூடியதாகவும் இருக்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆக்கங்கள் யாவும் செப்ரெம்பர் 20 ஆம் திகதிக்கு முன்பாக விளக்கு சஞ்சிகை அலுவலகததுக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். (31)

## நெடுந்தீவு மேற்குப் பகுதிக்கு மின் வழங்கும் பணி இழுத்தடிப்பு

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மேற்கு பகுதிக்கான மின்சார விஸ்தரிப்புக்கென கடந்த வருடம் ஒதுக்கீடு செய்யப்பட்ட 10 லட்சம் ரூபாவுக்கான வேலைகளை, இலங்கை மின்சார சபையினர் இதுவரை காலமும் மேற்கொள்ளாமல் இழுத்தடிப்புச் செய்து வருவதால், அந்தப் பகுதி மக்கள் மத்தியில் பெரும் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக நெடுந்தீவின் அரச நிர்வாக அதிகாரிகளும், அந்தப் பகுதி பொது அமைப்புக்களும் மின்சார சபையினருக்கு அழுத்தங்கள் கொடுத்து வருகின்றபோதும், இந்த வேலையை மேற்கொள்வதில் அசமந்தப் போக்கையே மின்சார சபை இன்றுவரை கடைப்பிடித்து வருகின்றது.

இதேவேளை இந்த வேலைக்கென கடந்த சில மாதங்களுக்கு முன்னர் எடுத்து வரப்பட்ட ஒரு தொகுதி மின் கம்பங்கள் - நெடுந்தீவில் ஏனைய பகுதிகளின் மின் விஸ்தரிப்பு வேலைகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (113)

## இடிந்துவிழும் அபாய நிலையில் குறிகாட்டுவான் துறைமுகப் பாலம்!

குறிகாட்டுவான் துறைமுகப் பகுதியில் அமைந்துள்ள பாலம் கடந்த பல வருட காலமாக சேதமடைந்து, இடிந்துவிழும் நிலையிலுள்ள போதும், அதனைத் திருத்தி அமைக்க எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் வீதிஅபிவிருத்தி அதிகார சபையினர் கை விட்டுள்ளனர்.

பாலம் பழுதடைந்துள்ளது - பாரமான பொருட்களோ, அன்றி அதிக பயணிகளோ நீண்ட நேரம் இங்கே தரித்து நிற்கவேண்டாம் என, வீதி அபிவிருத்தி அதிகாரசபையினரால் கடந்த பல வருடமாக ஒரு அறிவித்தல் பலகை ஒன்று நிரந்தரமாகவே போடப்பட்டுள்ளது.

இதேவேளை, அந்தப் பாலம் ஊடாகவே - நெடுந்தீவு, நயினாதீவு போன்ற பகுதிகளுக்குரிய உணவுப் பொருட்கள் எடுத்துச் செல்லப்படுதல், அன்றாட பயணிகள் சேவை என்பன இடம்பெறுகின்றன. இந்தப் பாலம் திருத்தப்படாமல் இருப்பதால் அதனூடாக பயணிக்கும் மக்கள் பெரும் அச்சவுணர்வுடனேயே தங்கள் பயணத்தைத் தொடர்கின்றனர். (113)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : எஸ்.மிதுன்
முகவரி : கைதடி கிழக்கு, கைதடி

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :------------------------
முகவரி :------------------------
பிறந்த ஆண்டு:------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------
பெற்றோர் ஒப்பம்


# சின்னஞ்சிறு செய்திகள்

### தொண்டர் பயிற்சி பெற்றவர்களுக்கு மதிப்பீட்டுப் பரீட்சை

(மட்டுவில்)

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் மனிதவள அபிவிருத்தித் தொண்டர் பயிற்சி பெற்ற பயிலுநர்களுக்கான மதிப்பீட்டுப் பரீட்சை, எதிர்வரும் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு பிரதேச செயலகத்தில் நடைபெறும்.

பரீட்சார்த்திகளுக்கான கடிதங்கள் தபாலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகப் பிரதேச செயலகத் திட்டமிடல் பிரிவினர் அறிவித்துள்ளனர். (24)

### சந்தை கட்டடப் பணிகள் செப்ரெம்பர் 15 இற்குள் முடிவடையுமாம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்ப் பிரதேச சபையினரால் அமைக்கப்பட்டு வரும் திருநெல்வேலி நவீன சந்தைக் கட்டடத் தொகுதி வேலைகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளன.

திருநெல்வேலி நவீன சந்தைக் கட்டடத் தொகுதி, பாரிய நிதி ஒதுக்கீட்டின் கீழ்ப் புனரமைக்கப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ் இந்தக் கட்டடத் தொகுதியிலுள்ள கடைகளுக்கு நீர் விநியோகத்தை மேற்கொள்வதற்கான பாரிய நீர்த்தாங்கி ஒன்றும் அமைக்கப்பட்டு வருகின்றது.

அனைத்துக் கட்டட நிர்மான வேலைகள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் நிறைவடையும் என நல்லூர்ப் பிரதேசசபைச் செயலாளர் தெரிவித்தார்.

### லெப். கேணல் ராஜனின் 12 ஆவது நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் முன்னாள் தளபதியான லெப். கேணல் ராஜனின் 12 ஆவது நினைவு தின நிகழ்வுகள் இன்று மாலை 4 மணியளவில் மாதகலில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இந்த நினைவு தின ஏற்பாடுகளை தேசிய எழுச்சிப் பேரவையும் பொது அமைப்புக்களும் செய்து வருகின்றன.(14)

### அதிகரிக்கும் வெப்பத்தால் தீவகத்தில் குடிநீர் தட்டுப்பாடு

யாழ். குடாநாட்டில் தற்போது அதிகரித்துள்ள வெப்பநிலை காரணமாக நிலவும் கடும் வரட்சியால், தீவுப்பகுதியின் பல்வேறு பிரதேசங்களுக்கு குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக வேலணை, நயினாதீவு, புங்குடுதீவு, மண்டைதீவுப் பகுதிகளிலேயே இந்த நிலை காணப்படுகின்றது. இங்குள்ள ஒரு சில நன்னீர்க் கிணறுகளும் வற்றிவிட்ட நிலையில், மக்கள் குடிநீரைப் பெறப் பெரும் சிரமப்படுகின்றனர். அத்துடன் குடிநீர் விநியோக நடவடிக்கைகளும் சீரற்று இருப்பதால் இந்த நிலை அதிகரித்துள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இதனிடையே புங்குடுதீவுப் பகுதியின் குடிநீர்ப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யவென, கடந்த வாரம் இந்தப் பகுதிக்கு விஜயம் செய்த யாழ். அரச அதிபரால் நீர்த்தாங்கி ஒன்று வேலணைப் பிரதேச செயலர் ஊடாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (99)

### மதி ஒளி முன்பள்ளி விளையாட்டு விழா

(சுதுமலை)

நவாலி தெற்கு, மதிஒளி பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டியும், சைக்கிள் மரதன் ஓட்டப் போட்டிகளும் இன்று நண்பகல் 2.30 மணிக்கு த.சிவலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தால் நடாத்தப்படும் முன்பள்ளியின் விளையாட்டுப் போட்டியை முன்னிட்டு,

மதிஒளி சனசமூக நிலையத்தால் ஆண்களுக்கான 60 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டியும் 10 மைல் மரதன் ஓட்டப் போட்டியும் நடாத்தப்படவுள்ளது. (91)

### பங்குனி மாதத்துக்கான உலர் உணவு விநியோகம்

(நெடுந்தீவு)

2004 - பங்குனி மாதத்துக்கான இடம்பெயர்ந்தோருக்கான உலர் உணவு விநியோகம் நெடுந்தீவு பிரதேச செயலகப் பிரிவில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கிராம அலுவலர்களூடாக உலர் உணவு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டு, நெடுந்தீவு பல. நோ.கூ.சங்கக் கிளைகள் ஊடாக விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை, பங்குனி மாதத்துக்குப் பின்னர் மீளக்குடியமர்ந்த பல குடும்பங்கள் உலர் உணவு நிவாரணம் கிடைக்காமல் உறவினர்களை நம்பியே தங்கள் வாழ்நாளை ஓட்டிச் செல்கின்றமை குறிப்பிடத்தக்கது. (113)

### மாவட்ட மாநாடு

(யாழ்ப்பாணம்)

ஜெகோவாவின் சாட்சிகளின் மாவட்ட மாநாடு இன்று முதல் தொடர்ந்து மூன்று நாட்கள் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்ச்சி தினமும் காலை 9.40 இற்கு ஆரம்பமாகி பிற்பகல் 4.35 மணிக்கு நிறைவுறும்.

### கும்பாபிஷேகம்

மட்டுவில் வடக்கு அருள்மிகு கல்வம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய புனராவர்த்தனப் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் இன்று காலை 7.43 இற்கும் 9 மணிக்குமிடையிலுள்ள சுப முகூர்த்தத்தில் சிவஸ்ரீ இ.பரமேஸ்வரக்குருக்கள் தலைமையிலான சிவாச்சார்யர் குழுவினரால் நடாத்தப்படும். (24)

### செயல்நிலை ஆய்வு கருத்தரங்கு

வலிகாமம் கல்வி வலய பாடசாலை ஆசிரியர்களுக்கான செயல்நிலை ஆய்வுக் கருத்தரங்கு இன்று இராமநாதன் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

ஜி.ரி.இசற் நிறுவனத்தின் அனுசரணையுடன் இடம்பெற்றுவரும் செயல்நிலை ஆய்வுக் கருத்தரங்கில் இதுவரை பங்குபற்றாத ஆசிரியர்களுக்கான விசேட கருத்தமர்வு, தொடர்ந்து ஐந்து தினங்கள் இடம்பெறவுள்ளதாகவும்

முன்பு நடைபெற்ற கருத்தமர்வுகளில் கலந்துகொள்ளாதவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறும், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். (91)



## சிநேகிதியே

# குழந்தைகளின் மனதில் தோன்றும் சின்னச் சின்ன ஆசைகளுக்கு மதிப்பளியுங்கள்



குழந்தைகளின் மனதில் தோன்றும் சின்னச் சின்ன ஆசைகளை நிறைவேற்றி வைப்பது பெற்றோர்களின் முக்கிய கடமைகளில் ஒன்று. இந்த ஆசைகள் குழந்தைகளின் பருவத்துக்கும், வயதுக்கும் ஏற்ப மாறுபடும். அத்துடன் வித்தியாசப்படும்.

ஆறுமாத குழந்தையைப் பொறுத்தவரையில் அழகான பலூனைக் கண்டு கண்களை அகல விரித்து 'அது வேண்டும்' எனக் கைகளை ஆட்டி, ஆட்டிக் கேட்கும். அதுபோல ஆறு வயதுக் குழந்தை தந்தையுடன் மோட்டார் சைக்கிளில் சேர்ந்து செல்ல வேண்டுமென அடம்பிடிக்கும். அதுதான் அவர்களின் பருவத்துக்கான வித்தியாசம்.

குழந்தைகளின் இந்த வகையான ஆசைகளில் சில பொருளாதாரரீதியாகச் செலவை ஏற்படுத்துபவையாக இருக்கலாம். ஆனால், அந்த ஆசைகள் மறுக்கப்படும் பொழுது, மனோதத்துவ அடிப்படையில் குழந்தைகளின் மனதில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கிறது.

சில குழந்தைகள் தாங்கள் விரும்பியதை அடையாமல் நித்திரை கொள்ளமாட்டார்கள். சில சமங்களில் தூக்கத்தில்கூட பிதற்றிக் கொண்டே தூங்குவார்கள். குழந்தைகளுக்குப் பொதுவாகப் பிடிவாதக்குணம் அதிகம். தான் கேட்கின்ற பொருளை வாங்கித்தரும் நிலையில் பெற்றோர்கள் இருக்கிறார்களா? என்றெல்லாம் எண்ணத் தெரியாத வயது அவர்களுடையது.

பாடசாலைக்குச் செல்லும் சிறுவர்கள், அழகிய பென்சில்கள், விதவிதமான பேனாக்கள், வித்தியாசமான பாதணிகள் என்று கேட்க ஆரம்பிக்கிறார்கள். பாடசாலையில் சக மாணவர்கள் வைத்திருக்கும் பொருட்களைப் போலவே தனக்கும் வேண்டும். அதைப் பெற்றோர்கள் வாங்கித்தர வேண்டும் என்றும் அடம் பிடிக்கிறார்கள்.

வளர்ந்தவர்களாகிய நாங்களே, பக்கத்து வீட்டுப்பெண் வாங்கிய புடவை, நகைகளைப் போல் வாங்கவேண்டும் என்று நினைக்கும் பொழுது, குழந்தைகளின் மனோநிலையை நாம் குறைகூறக்கூடாது. குறைகூறவும் முடியாது.

ஒரு குறிப்பிட்ட பொருளைக் கேட்டு அடம் பிடிக்கும் குழந்தைகளின் கவனத்தை, அதை விடக் கவர்ச்சியான வித்தியாசமான பொருளைக் காட்டி திசை திருப்ப முயலவேண்டும்.

சில சமயங்களில் குழந்தைகளுடன் கூட கடைகளுக்குச் செல்லும்போது, அங்கு அவர்கள் ஏதாவது விளையாட்டுப் பொருட்களைச் சுட்டிக் காட்டி தமக்கு வாங்கித் தரும்படி கேட்கின்றனர். அப்போது கையில் பணம் இருக்காது. அதுபோன்ற நேரங்களில் அவர்கள் கேட்பதை வாங்கிக் கொடுகக முடியாவிட்டாலும், அதைப் போலவே விலை குறைவான வேறொரு பொருளையாவது வேண்டிக் கொடுத்து சமாதானப்படுத்தவேண்டும்.

பொதுவாக குழந்தைகள் புதுப்புது, வண்ண வண்ண ஆடைகளை அணிவதற்கு மிகுந்த ஆர்வம் காட்டுகின்றனர். அதை மற்றவர்களிடம் காண்பித்து மகிழ்வதில் மகிழ்ச்சி கொள்கினறனர். எங்களால் முடிந்தவரை புதிய ஆடைகளை, குறைந்த விலையிலாயினும் வாங்கியோ, தைத்தோ கொடுக்கவேண்டும்.

நாங்கள் கோயிலுக்கோ அல்லது உறவினர்களின் வீடுகளுக்கோ செல்லும்போது மறக்காமல் குழந்தைகளையும் கூடவே அழைத்துச் செல்லவேண்டும்.

தங்களைப் பெற்றோர்கள் தனியே விட்டு விட்டுச் சென்றுவிட்டார்கள் என, அந்தப் பிஞ்சு மனங்களில் ஏக்கம் வரும்படி நடந்து கொள்ளக்கூடாது.

இரண்டு குழந்தைகள் இருக்கின்றார்களாயின், ஒரு குழந்தைக்கு மட்டும் பாசத்தையும், நெருக்கத்தையும் வளர்ப்பது மற்றைய குழந்தையின் மனதில் வேறுபாட்டையும், பொறாமையையும் ஏற்படுத்தும்.

தன்னைப் பெற்றவர்கள் கவனிக்கவில்லை என்ற குறை பெரியளவில் அவர்கள் மனதில் வளர்ந்து நாளடைவில் அதுவே விபரீத எண்ணங்களைத் தூண்டும் அளவுக்குப் போய் விடக் கூடும். எனவே, எல்லாக் குழந்தைகளையும் சமமாகக் கருதி நடந்து கொள்ளுங்கள்.

குழந்தைகள் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை பென்சிலைக் காணவில்லை, கொப்பியைக் காணவில்லை என்று வந்து நிற்பார்கள். அவை எமக்கு எரிச்சல் ஏற்படுத்துவதுடன், அடிக்கடி தொலைத்துவிட்டு வந்து நிற்கிறார்களே என்ற ஆதங்கமே மனதில் கோபமாக மாறுகின்றது.

அதுபோன்ற நேரங்களில் அவர்களை அடிக்கவோ, திட்டவோ செய்யாமல், அவர்கள் அதைக் கேட்கும்போது அவர்கள் முகம் எப்படி இருக்கிறது என்று கவனித்துப் பாருங்கள்.

தயங்கித் தயங்கி வார்த்தைகளைமென்று விழுங்கி ஏதோ செய்யக்கூடாதவற்றைச் செய்துவிட்டு பாவமன்னிப்புக் கேட்பது போல் நிற்கும் அவர்களின் மனநிலையைப் புரிந்து கொள்ள முயற்சியுங்கள்.

பரவாயில்லை மறுபடியும் வாங்கிக் கொடுங்கள் குழந்தைகளுக்கு இல்லாதது வேறு எதற்கு தேவைப்படுகின்றது. ✪

# நல்லதோர் வீணை செய்தே - அதை நலங்கெட புழுதியில் எறிவதுண்டோ...!

இரு மனம் கலந்தால் திருமணம் நிகழும். இனிமையான வசந்தமாகத் திகழும். திருமணம் இன்று, அதன் புனிதத் தன்மையை இழந்து, கேவலமான சீதனம் எனும் வியாபார நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

வெளிநாட்டு மோகம் எப்போது எம் மண்ணில் பரவத் தொடங்கியதோ அன்றிலிருந்து சீதனமும் இலட்சக்கணக்கில் அதிகரிக்கத் தொடங்கிவிட்டது. வசதியுள்ளவர்கள் தமது தராதரத்தை வெளிப்படுத்த அதிகமாய் சீதனத்தைக் கொடுத்துக்காட்ட, வறியபெண்களின் வாழ்க்கை கேள்விக்குறியாகிப்போனது.

*மங்கையராகப் பிறப்பதற்கு*
*மாதவம் செய்ய வேண்டுமென்றான்*
*கவிஞன்... இங்கோ...*
*மணமேடை ஏறுவதற்கும்*
*மங்கையர் மாதவம் செய்கின்றனர்.*

என்று கமலாவின் கவிதை குறிப்பிடும் நிலையில் தான் இன்று பல பெண்களின் வாழ்வு அமைந்திருக்கிறது.

காதலித்துத் திருமணம் புரிபவர்கள்கூட திருமணம் என்றுவரும்போது, காதலைத் துறந்துவிட்டு, பணத்தை நோக்கியே ஓடுகின்றனர். பெரும்பாலான இளைஞர்கள் பெற்றோர்களின் சொல்லைத் தட்டாத ஒரே ஒரு சந்தர்ப்பமாகத் திருமணத்தின்போது சீதனம் வாங்கும் சந்தர்ப்பத்தையே குறிப்பிடக்கூடியதாகவுள்ளது.

மேலும் சீதனப் பிரச்சினைக்கு இளைஞர்கள் ஒருவகையில் காரணமாக இருந்தாலும், பெற்றோர்களின் தலையீடே அதிகமாகக் காணப்படுகின்றது என்ற கருத்தையும் மறுக்க இயலாது. இதற்கு மேத்தாவின்

*'இந்த வில்லை முறிக்க*
*இராமன்மார் வந்து*
*ரவுண்டடித்தால் போதாது*
*மாமன்மாரும் கொஞ்சம்*
*மனசு வைக்க வேண்டும்'*

என்ற கவிதை சிறந்த உதாரணம்.



பொதுவாக ஒவ்வொரு பெற்றோரும் தங்களுடைய ஆண்பிள்ளைகளுக்கு சீதனம் வாங்கும்போது வள்ளல்களாகவும், பெண்பிள்ளைகளுக்கு சீதனம் கொடுக்கும்போது கருமிகளாகவும் இருக்கவே பெரிதும் விரும்புகின்றார்கள்.

ஒவ்வொரு பெண்ணுக்கும் குடும்ப வாழ்க்கை பற்றிய கனவுகளும், எதிர்பார்ப்புகளும் இருப்பது இயல்பானது. ஆனால், விஸ்வரூபம் எடுத்துள்ள இந்தச் சீதனப் பிரச்சினையால், எதிர்பார்த்த வாழ்க்கை கிடைக்காமல் போவதோடு, கிடைத்த வாழ்க்கையிலும் மனமொன்றி வாழமுடியாத துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

மேலும், சமுதாயத்திலே கைபடாத ரோஜாக்களாக இருந்து, வாழ வேண்டிய இளங்குருத்துக்கள் ஆசைகளின் உஷ்ணத்தால் வெந்து வெந்தே முதிர்கன்னிகளாய் வாடிக் கிடக்கின்றன.

இதனைத்தான் ஒரு கவிதையில் மேத்தா

பூக்களிலே நானுமொரு
பூவாய்த்தான் பிறப்
பெடுத்தேன்.
பூவாகப் பிறந்தாலும்,
பொன் விரல்கள்
தீண்டலையே,
பொன் விரல்கள்
தீண்டலையே,
நான் பூமாலை ஆகலையே.

என்று குறிப்பிடுகின்றார்.

இந்த நிலைமாற வேண்டும் என்பதற்கும், அவர் இன்னொரு கவிதையில் விடை பகருகின்றார் அவர்.

இந்திர மாயங்களால்
ஏமாற்றப்பட்டு
கௌதமவறுமைகளால்
சபிக்கப்பட்ட
அப்பாவி அகலிகைகளை
ஆட்கொள்வதற்காக,
பொதுவுடமை இராமபிரான்-
பூமியெங்கும் வலம்வரட்டும்.

என்று அவர் கவிதையில் பாடியது, கவிதையாக மட்டும் நில்லாமல், சமுதாயத்திலும் ஒரு மௌனப் புரட்சியை ஏற்படுத்தினாலேயே இந்தச் சீதனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வுகிட்டும்.

- சர்மிளா -

# சிநேகிதிக்கு ஒரு மடல்



**அன்புள்ள சிநேகிதியே**

உன் எண்ணங்களைத் தாங்கிய வண்ணமலர் வாசித்தேன். உனது சிந்தனை ஓட்டம் அழகாகத்தான் இருக்கின்றது. ஆனால் அதற்கும் அப்பாலேயுள்ள நடைமுறைச் சிக்கல்களை நீ எண்ணிப் பார்க்க மறுக்கின்றாய். உனது சமூகத்தைப் பொறுத்தவரையில், பெண் துணிந்து நின்று எதையும் செய்யமுடியும். ஆனால், எனது சமூகத்தின் எல்லை அதற்கு இடங்கொடாது.

அதையும் மீறி ஒரு பெண் செயற்படத் துணிந்துவிட்டால், அவளுக்கு ஆயிரம் பட்டங்களைச் சூட்டிவிடும் நமது சமூகம். சமூகத்தின் இந்தப் போக்கு மாறும்வரை நாம் எதிர்த்து நின்று போராட வேண்டுமென்றே எண்ணுகின்றோம். ஆனால், சமூகத்தின் பார்வையிலே நாம் ஒதுக்கப்பட்டு விடுவோமா என அஞ்சுகின்றேன்.

நண்பியே இன்றும் நமது சமூகத்திலே வழக்கத்திலுள்ள சில கருத்துக்களைப் பார். ஆம்பிளைப்பிள்ளை சேற்றைக் கண்டால் மிதிப்பான், ஆற்றைக் கண்டால் கழுவுவான் என்றும் சாண்பிள்ளையானாலும் ஆண்பிள்ளை வேண்டும் என்றும் கூறும் சமூகம் - ஒருபெண் நட்புடன் ஒரு ஆணுடன் கதைத்தால்கூட அர்த்தமற்ற கதைகளைக் கட்டி விடுகின்றது. அண்ணன் தங்கை உறவில்கூட ஆயிரம் களங்கத்தைக்காணமுற்படும்போது, நாம் அதை எதிர்த்து நின்றால் எமது எதிர்காலம் ஒளியற்றுப்போய் விடுமோ என அஞ்சுகின்றோம்.

என் பிரிய சிநேகிதியே! என்னுடன் பல்கலைக்கழகத்தில் படிக்கும் சில மாணவிகள் மிகவும் துடிப்பானவர்கள். எதையும் யதார்த்தமாகச் சிந்திப்பவர்கள். அஞ்சாது தமக்குச் சரியாகப்படுவதை அப்படியே சொல்லிவிடுவார்கள். எந்தப் பிரச்சினை வந்தாலும் எதிர்த்து நிற்பவர்கள். ஆனால், அவர்களுக்கு நமது நண்பர் வட்டம் கொடுத்திருக்கும் பட்டம் என்ன தெரியுமா? "அதுகள் ஒரு மாதிரி" இந்தப் பட்டத்தை எனது சக ஆண் நண்பர்கள் கூறும்போது மன வேதனைப்பட்டேன். ஆனால் எனது நண்பி ஒருத்தி அந்தத் துடிப்பான சக மாணவிகளைக் காட்டி "உதுகள் ஆட்டம்" என்கின்றாள். இவ்வாறு பெண்சமூகமே பெண்களை ஒதுக்கும் எனது சமூகத்தில் எவ்வாறு நாம் அனைத்து விடயங்களிலும் தலையிடமுடியும்? எனவே, நாம் விரும்பியோ, விரும்பாமலோ சில வரையறைகளை வரைந்து கொண்டு அதனுள்ளே வாழும்படி நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம்.

நாம் எதையும் துணிந்து செய்யத்தக்க மனப்பாங்கை வளர்க்கவேண்டிய எமது சமூகம், எம்மை அடங்கிப் போகவே செய்கின்றது. எனவே எமது சமூகத்திலுள்ள மூத்தவர்கள் இவற்றை உணர்ந்து எமக்கு வழி சமைத்துதர வேண்டும். எமக்கு பாதை காட்டவேண்டும் என்று சமூகத்திடம் நாம் கேட்கவில்லை. நாம் பாதைகளைக் கண்டுபிடிப்போம். பயணம் செய்யும்போது பக்கத் துணையும் வேண்டாம். ஆனால் பார்த்து விமர்சிப்பதை நிறுத்துங்கள் என்றே கேட்கின்றோம்.

நண்பியே என் மன ஆதங்கத்தில் நிறையவே எழுதிவிட்டதாக எண்ணுகின்றேன்.

எனவே என் மடலை இத்துடன் முடிக்கின்றேன்.

அன்புள்ள சிநேகிதி
நீலா.

# பிஞ்சுமுகத்தின் தேடல்



நான் எண்ணிக்கொண்டே இருந்தேன். ஒன்று, இரண்டு, மூன்று... முப்பது... நாப்பது.... இன்னும் முடியவில்லை. ஆனாலும் நான் தொடர்ந்து எண்ணிக் கொண்டேயிருந்தேன். எனக்குக் கொஞ்சம் அலுப்பாக இருந்தது. சனம் கூட்டம் கூட்டமாக அலைமோதியது. இனிமேல் எண்ணமுடியாது. நான் மெல்லத் திரும்பிப் பார்த்தேன். எல்லாரும் கைகளைத் தூக்கி அரோகரா! என்று சொல்ல பஞ்சா லாத்தி ஒளி மட்டும் தெரிய, நானும் கையைத் தூக்கித் தலைமேல் வைக்கமுயன்றேன். முடியவில்லை... என்மனம் கூம்பிவிட்டது. 'அம்பிகையின் அருள் இருந்தால் போதும்! 'எல்லாம் கிடைக்கும் என்று சொனன அம்மாவின் குரல் என் நினைவுக்குவர எண்ணம் சிறகடித்துப் பறந்தது. வேகமாக... மிக வேகமாக... என் எண்ணப் பறவையின் பின்னே நானும் சென்றேன்.

எங்கள் வீட்டு வாசலில் அன்று நிறைகுடம் வைக்கப்பட்டிருந்தது. அம்மா தான் அதை வைத்தாள். மேசைமேல் வெள்ளைச் சீலை விரித்து அதன் நடுவே தலைவாழையிலை போட்டாள். அதன் மேல் நெல்லைப் பரப்பி நீர் நிறைந்த குடத்தை ஆடாமல் வைத்தாள். ஏழு மா இலைகளை முடியுள்ள தேங்காயுடன் நேர்த்தியாகக் குடத்துள் வைத்தாள். தேங்காய் முடியின் மேல் செவ்வலரிப்பூவை அவள் செருகியபோது, நல்ல வடிவாக இருந்தது. அதன் பிறகு நிறைகுடத்தின் இருபக்கத்திலும் குத்துவிளக்கை வைத்து அதன் திரிகளை அவள் கொழுத்தியபோது எனக்கு அம்மாவின் கைவண்ணத்தைப் பாராட்ட வேண்டும் போலிருந்தது. அம்மா குத்துவிளக்குக்கு அருகே நின்ற கோலம்!... நெற்றியில் திருநீறும், குங்குமமும், தலையில் கோடாலிமுடிச்சுமாக அவள் நல்லவடிவாகத் தெய்வீகமாக நின்றாள். நான் அவசரமாக ஓடிப்போய் என் சித்திரக் கொப்பியை எடுத்து வந்தேன். அம்மாவையும் நிறைகுடத்தையும் மளமளவென்று கீறினேன். அவள் புடவையின் நிறம், சட்டையின் வண்ணம், குடத்தின் பளபளப்பு, தேங்காய் முடியின் செவ்வலரிப்பூ என நான் வர்ணந்தீட்டி முடியவும் அம்மா திரும்பி வீட்டிற்குள் போகவும் கணக்காக இருந்தது. நான் கீறிய படத்தை உற்று நோக்கினேன். ஏதோ குறை... அட! அம்மாவின் மூக்குத்தியை மறந்துவிட்டேன். மூக்கில் நான் அதைப் பொருந்தக் கீறியபோதுதான் என் மனம் நிறைவடைந்தது.

வீட்டினுள்ளே கதவுநிலைகளில் மா இலை கட்டப்பட்டிருந்தது. எங்கும் சாம்பிராணி மணம் மூக்கை நிறைத்தது. அம்மாவைத் தேடினேன்! அவள் அடுக்களையில் ஏதோ செய்து கொண்டிருந்தாள். அம்மா! அவள்செயல்களில் ஒரு அழகு! அதை நானும் கடைப்பிடிக்க முயன்று தோற்றுப் போனேன். ஆனால் அம்மா... அவள் என்னை நாளும் பயிற்றினாள். நானும் தேர்ச்சிபெற்றேன்.

எனக்குப் பத்து வயதானபோது அம்மாவின் போக்கிலே மாற்றங்கள் ஏற்பட்டதை என்னால் அவதானிக்க முடிந்தது. அவள் எல்லா வேலைகளையும் அவசரமாகச் செய்தாள். அடிக்கடி வெளியே போய்வந்தாள். அவள் நடையிலும் மாற்றம். பக்கத்து வீட்டவர்கள் அவளைப் பற்றிக் குசுகுசுத்தார்கள். எனக்கும் ஏதோ நடக்கப்போகிறது என்று மனதில்பட்டது. இப்போதெல்லாம் காணாமல் போன அப்பாவைப் பற்றி அடிக்கடி நினைத்தேன். எனக்கு இரண்டு வயதாக இருக்கும் போது அவர் காணாமல் போய்விட்டதாக அம்மா சொன்னாள். ஆனால், அவரைப்பற்றி அவள் அதிகம் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. எனக்கு இப்போது அப்பா வீட்டில் இருந்தால் நல்லது போலிருந்தது. அப்பா..... நீங்கள் எங்கே போய்விட்டீர்கள்? வீட்டிலிருக்கும் அப்பாவின் நிழற்படத்தைப் பார்த்துக் கேட்பேன். படம் பதில் சொல்லுமா? என் மனம் சலித்து விட்டது.

ஒருநாள் அம்மாவிடம் கேட்டேன். ' அம்மா நீ எங்கே போகிறாய் என்னைக் கூட்டிக்கொண்டு போம்மா! 'அம்மா சீறி விழுந்தாள் ' நீ படிக்கிற பிள்ளை. உன்ரை பாடங்களைப் படி! நான் அதற்குமேல் அம்மாவிடம் எதைக் கேட்பது! நான் எனக்குள் சுருங்கிக் கொண்டேன். அம்மாவும் என்னை விட்டு விலகிப் போய்க்கொண்ருந்தாள். அவளைத் தேடிப் பல புதியவர்கள் வந்தார்கள். அவள் எங்கோ வேலை செய்கிறாள் என்ற செய்தி எனக்கு அவர்கள் மூலம் தான் தெரிய வந்தது. நான் பாடசாலையிலும் ஒருவரிடமும் பேசுவதில்லை. என் ஆசிரியர்கள் என் மாற்றத்தைக் கண்டு கொண்டதாகவும் தெரியவில்லை. என் படிப்பில் எனக்கு வெறுப்பு வந்தது. வீட்டில் அம்மா சமைப்பதையும் நிறுத்திவிட்டாள். கடைச் சாப்பாடுதான். நான் பாடசாலை முடிய வீடு வந்தால் வீட்டில் ஒருவருமே இல்லை. நான் தனியாக இருப்பேன். அம்மாவை விசாரித்துக் கொண்டு வருபவர்களுக்குப் பதில் சொல்வதே எனது வேலை. வீட்டுமுற்றத்தில் நிற்கும் மாமரத்தின் கீழே குந்தியிருந்து, படம் கீறுவேன்... என் கண்ணில் பட்டதையெல்லாம் கீறுவேன்.

அன்றும் அப்படித்தான் நான் படம் கீறிக் கொண்டிருக்க படபட! வென்று மோட்டார் சைக்கிள் சத்தம் கேட்டது. நான் திடுக்கிட்டு எழும்பி நின்றேன். அம்மாதான் யாரோ ஒருவருடன் வந்து இறங்கினாள். அவள் கையில் ஒரு மலர்ச்செண்டு இருந்தது. வந்தவரும் அம்மாவுடன் உள்ளே சென்றார். நான்... அவரைப் பார்த்தேன்.

தலையெல்லாம் கறுப்பு மை மீசைக்கும் பூசியிருந்தார். அவர் அலங்கரிப்பால் வயது குறைந்துவிட்டது என்ற எண்ணம் அவர் முகத்தில் தெரிந்தது. அரைமணி நேரத்தில் இருவரும் திரும்பி என்னிடம் வந்தார்கள் அவருடைய கையில் ஒரு சொக்கிளேற் பெட்டி அதை என்னிடம் தந்தார்.

'இன்று உன்னுடைய பத்தாவது பிறந்தநாளுக்கு என் அன்புப் பரிசு! 'நான் அம்மாவைப் பார்த்தேன். அவள் நெற்றியில் இருந்தது ஒட்டுப்பொட்டு!... ஓ! அம்மா நீ மாறிவிட்டாய்! ' என் மனம் ஓலமிட்டது' மனமில்லாமல் அந்தப் பரிசை வாங்கிக் கொண்டேன். அம்மா சொன்னாள் நான் வெளியே போகிறேன்! நீ வீட்டைப் பூட்டிக் கொண்டு இரு!... சொல்லிவிட்டு அம்மா அவரோடு மோட்டார் சைக்கிளில் ஏறிப்போய்விட்டாள்.

அப்போது எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை!... அன்று போன அம்மாவை அடுத்த நாள் வைத்தியசாலையில் அடையாளம் காட்டவென்று என்னை அழைத்துச் சென்றபோதுதான் பார்த்தேன். அம்மா!... அவள் முகம் சிதைந்து கிடந்தாள். அருகே அந்த மீசைக்காரர் உடல் கிடந்தது. என் மனம் துடித்தது அம்மா! என்று அழைக்கமுடியவில்லை. அருகே நின்றவர் கேட்டார் 'இவ உன்ரை அம்மாவா! நான் இல்லை! என்று தலையாட்டிவிட்டு ஓடி வெளியே வந்தேன்! என் கண்கள் குளமாகின.

சிவகாமி!.... குரல் கேட்டு நான் திரும்பியபோது முல்லை சிரித்துக் கொண்டு நின்றாள். அவள் தான் இப்போது என் தோழி. நாங்கள் இருவரும் சிறுவர் இல்லத்திலே ஒரே நாளில் சேர்ந்தோம். அதனால் உடன் பிறவாத சகோதரிகளாகிவிட்டோம். அவளுக்கும் அம்மாவும், அப்பாவும் இல்லை. எனக்கும் அம்மா இல்லை.

ஆனால் எங்கள் இல்லம் எங்களுக்குத் தரும் அன்பான, பண்பான வாழ்க்கை என் மனப்புண்ணை ஆற்றிவருகிறது. ஒலி பெருக்கியில் கேட்கும் பாடல்! அம்மா! அம்மா! எம் தாயே ஆறுதல் தந்தெம்மைக் காப்பாயே!... நானும் முல்லையும் சேர்ந்து பாடுகிறோம்.

என் பார்வையைத் திருப்புகிறேன். கோயில் வீதியில் சுடு மணலில் அடியவர் ஒருவர் உருண்டு கொண்டிருந்தார்.

அவரது செயல் என் மனக்கதவைத் திறக்க, நான் முல்லையின் கையைப் பிடித்துக் கொண்டு இல்லத்தை நோக்கி நடந்தேன். என் மனம் இப்போ தெளிவாகிவிடடது.

**மனோன்மணி சண்முகதாஸ்.**

# இளம்பருவத்தினரின் கல்வி பிரச்சினைகளை எவரும் முழுமையாகக் கண்டறிவதில்லை

பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு எப்போதும் அறிவுரைகளை வழங்கவே நினைக்கிறார்கள். 'ரீன்ஏஜ்' வயதில் பள்ளிப் படிப்பை முடிக்கும் தறுவாயில் அல்லது கல்லூரியில் சேர்ந்ததும் அவர்களுக்கு ஒன்றும் தெரியாது என்று நினைக்கிறார்கள்.

இதன் விளைவாக அடிக்கடி சுயபுராணங்களை அவிழ்த்து விடுவார்கள். தமது வாழ்க்கையில் நடந்தவைகளைத் தமது சாதனைகளை மட்டுமே சுயசரிதையாக சொல்லிக்கொண்டே போவார்கள்.

ஆனால், பிள்ளைகள் என்ன சொல்ல நினைக்கிறார்கள் என்பதைப்பற்றி கொஞ்சமும் கவலைப்படுவதில்லை. இப்படி நடந்துகொள்வதால், பிள்ளைகளின் பிரச்சினைகள் அதிகமாகின்றன. சொன்ன பேச்சைக் கேட்காதவர்கள் என்று பெற்றோர்களும் அடிக்கடி குறை கூறுகிறார்கள். அடிக்கடி பிள்ளைகளிடம் அவர்களின் நடவடிக்கைகளைப்பற்றி கேட்பது ஒருவகை பழக்கமாகிவிட்டது.

உதாரணமாக -

அம்மா எனக்குப் பள்ளிக்கூடம் போக விருப்பமில்லை.

அலுப்பாக இருக்கிறது என்கிறாள் மகள்.

என்ன பிரச்சினை என்கிறாள் தாய்.

உயர்தரம் படித்துவிட்டு என்ன செய்வது? பல்கலைக்கழகம் போகவேண்டும். இஞ்சினியரிங் அல்லது மருத்துவக் கல்லூரிகளில் இடம் கிடைக்காது. இன்னும் நான்கு, ஐந்து வருடங்களைச் செலவிடவேண்டும். படித்து முடித்தவர்கள் பலர் வேலையில்லாமல் இருக்கிறார்கள்.

வேலைகிடைப்பது என்பது முதலில் கல்வியின் தகுதியில் தான் அமைந்திருக்கிறது. எதற்கும் ஒரு பட்டம் தேவைப்படுகிறது.

ஆனால், எனக்கு கல்வியில் ஆர்வம் ஏற்படவில்லை.

எனது நண்பி ஒருவர் படிப்பைத் தொடராமல், தையல் தொழில் மேற்கொண்டு வருகிறாள். இதனால் தினமும் நிறையப்பேர் தைப்பதற்கு வருகிறார்கள். ஏகப்பட்ட பணம் கிடைக்கிறது.

தையல் தைக்கப் போகிறாயா? உன்னைப் படிக்க வைக்க இதுவரையில் நான் எவ்வளவு செலவு செய்திருக்கிறேன். முதலில் படிப்பை முடிக்கவேண்டும். அதன்பின் ஒரு நல்ல வேலையில் சேரலாம்.

என்னால் பாடங்களில் கவனம் செலுத்த முடியவில்லையே!

தொலைக்காட்சி பார்ப்பதைக் குறைத்துக்கொள். வாரத்தில் ஒருநாள் ஞாயிற்றுக் கிழமை மட்டும் தொலைக்காட்சி பார். மற்றைய நாட்களில் படிப்பில் கவனம்வரும்.

'முயற்சி செய்கிறேன்'

இப்படி மனம் தளரும் இளைஞர் - யுவதிகள் பலர் உண்டு. அப்போது பெற்றோர்கள் என்ன செய்கிறார்கள். அவர்கள் எப்படிப் படித்தார்கள். பாடங்களில் முழுக்கவனம் செலுத்தினார்கள் என்பதை மட்டும் திரும்பத் திரும்பச் சொல்வார்கள்.

பிள்ளைகளின் பிரச்சினைகள் என்ன என்பதை யாரும் முழுமையாகக் கேட்டுத் தெரிந்து கொள்வதில்லை. அவர்களை வழிக்குக் கொண்டுவர முதலில் அவர்களை முழுமையாகப் பேசவிடவேண்டும். அவர்கள் மனதில் உள்ளவைகளைக் கொட்டித் தீர்க்கட்டும்.

அடக்கி வைக்கப்பட்ட உணர்ச்சிகள் வெளிப்பிட்டபிறகு, மெல்ல மெல்ல அவர்களுக்கு யோசனை சொல்லலாம். படித்தவர்கள் எப்படி இருக்கிறார்கள. படிப்பைப் பாதியில் நிறுத்தியவர்கள். பிற்காலத்தில் எப்படி தமது தவறை உணர்கிறார்கள் என்பதை விளக்க வேண்டும்.



தையல் தைப்பதாக இருந்தாலும், அதற்கும் தையல் இயந்திரத்தைப் பற்றிய அனுபவம் தேவை, அதனைப் பற்றி முழுவதையும் கற்றுத் தொழிலில் இறங்கினால், தையல் தைப்பதிலும் புதுப் புது யுத்திகளைக் கையாளலாம் என்பதை விளக்கவேண்டும். பிற்காலத்தில் இவர்களே ஆடைத்தொழிற்சாலை அதிபதியாக வரமுடியும்.

மேல்நாட்டவர்கள் எப்போதும் பிள்ளைகளைத் தமது வழியில் கொண்டுபோக விரும்புவதில்லை. யாருக்கு என்ன செய்யவேண்டும் என்று தோன்றுகிறதோ, அதே வழியில் அவர்களை ஊக்குவிக்கிறார்கள்.

ஒருவன் வழக்கறிஞராக வேண்டும் என்றால், அவன் படிப்பதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கிறார்கள். பொறியியலாளனாக வேணடும் என்றால், அதற்கான யோசனைகளைச் சொல்கிறார்கள். கல்வியை, தொழிலை அவரவர்கள் தேர்ந்தெடுக்கிறார்கள். அவர்கள் விரும்பிய பாதையில் செல்லப் பெற்றோர்கள் ஊக்கமளித்து உதவி செய்கிறார்கள்.

நம் நாட்டைப் பொறுத்தவரையில் ஒருவர் வழக்கறிஞர் என்றால், தனது பிள்ளையும் வழக்கறிஞராக வேண்டும் என்று நினைக்கிறார்கள்.

ஒருவர் வைத்தியர் என்றால், தன் பிள்ளையும் வைத்தியராக வேண்டும் என்று கூறுகின்றார். ஆகையால் பிள்ளைகள் என்ன படிக்கவேண்டும் என்பதைத் திணிக்கிறார்கள். இதன் விளைவுதான் பிள்ளைகள் பெற்றோரின் செயலுக்கு மாறாகச் செயற்படத் தொடங்குகிறார்கள்.

பிள்ளைகளைப் பெற்றோர்கள் புரிந்து கொண்டால், அவர்களும் பெற்றோர்களைப் புரிந்துகொள்வார்கள். பிரச்சினைகள் தோன்றாது அப்படியே தோன்றினாலும் எளிதில் அவை தீர்க்கப்படும். ✧

# புலிகள் பலவீனமடைந்ததாக எண்ணினால் அது எங்களுக்கு மகிழ்ச்சி தரக்கூடியதே

## லெப்.கேணல் நகுலன் தெரிவிப்பு



(கிளிநொச்சி)

ஆட்சி அதிகாரத்திலுள்ள தென்னிலங்கை அரசியல்வாதிகள்- விடுதலைப் புலிகள் பலவீனமடைந்து விட்டார்கள் என எண்ணுபவர்களாக இருந்தால், அது எங்களுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய விடயம் என, சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணித் தளபதி லெப். கேணல் நகுலன் - 'தாய் மடியின் தாலாட்டு' அறிமுக விழாவில் கலந்துகொண்டு சிறப்புரை யாற்றுகையில் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் உரையாற்றும் போது -

தென்னிலங்கை அரசியல்வாதிகள் - விடுதலைப் புலிகள் பலவீனமடைந்து விட்டார்கள் என எண்ணுபவர்களாக இருந்தால், அது எங்களுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய விடயம்.

அது எங்களுடைய விடிவுக்காக அரசாங்கம் போட்டுத் தருகின்ற அத்திவாரமாகவும், படிக்கல்லாகவும் அமையும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை.

எங்கள் மீது அரசாங்கம் யுத்தத்தைத் தொடுத்தால், நிச்சயமாக அதனை எதிர்கொண்டு, எமது தேசத்தை மீட்டெடுப்பதற்கு எங்களுடைய மக்களும், போராளிகளும் உறுதியாக என்றுமே இருக்கின்றார்கள்.

ஆகவே, இந்த விடுதலைப் போராட்டத்தின் இறுதி வெற்றியானது எங்கள் ஒவ்வொருவரிலும் தங்கியுள்ளது.

இன்றைய காலகட்டத்தில் எம் இனத்தின் மீது திணிக்கப்படும் போரை, எதிர்கொள்வதற்கு நாங்கள் எல்லோரும் - எப்போதும் தயாராக இருக்கவேண்டும்.

கிளிநொச்சி நகரமானது பல நூற்றுக்கும் மேற்பட்ட எல்லைப் படை மாவீரர்களினது குருதியினாலும், தியாகத்தினாலும் விடுதலை பெற்று - இன்று மெல்ல மெல்ல உருப்பெற்று வருகின்றது எனக் குறிப்பிட்டார்.

கடந்த செவ்வாய்க்கிழமையன்று கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில், கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் காண்டீபன் தலைமையில் 'விடியல்' இசைக்குழுவினரின் 'தாய்மடியின் தாலாட்டு' எனும் ஒலிப்பேழை அறிமுகவிழா நடைபெற்றது.

நிகழ்வின் பொதுச்சுடரை கிளிநொச்சி வர்த்தக சங்கச் செயலாளர் நவரத்தினராஜா ஏற்றி வைக்க, தமிழீழ தேசியக் கொடியை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் சிறப்புத்தளபதி லெப். கேணல் நகுலன் ஏற்றி வைத்தார்.

முதல் எல்லைப்படை மாவீரரின் திருவுருவப் படத்துக்கு அவரது துணைவியார் ஈகைச் சுடரை ஏற்றி வைத்தார்.

வரவேற்புரையைத் தொடர்ந்து சிறப்புரையை லெப்.கேணல் நகுலன் நிகழ்த்தினார்.

ஒலிப்பேழையின் முதல் பிரதியை ராஜன் கல்விப்பிரிவு பொறுப்பாளர் கீரன் அறிமுகம் செய்து வைகக, முதல் எல்லைப்படை மாவீரர் அப்பன் அவர்களின் துணைவியார் உமா பெற்றுக்கொண்டார்.

இந்த நிகழ்வின் அறிமுக உரையை புலிகளின் குரல் படைப்பாளியும், கவிஞருமான பொன்.காந்தன் நிகழ்த்தினார்.

தொடர்ந்து மதிப்பீட்டு உரையை புலிகளின் குரல் நிறுவனப் பொறுப்பாளர் ந.தமிழன்பன் நிகழ்த்தினார். அதனையடுத்து அரங்கத்தில் இசை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.




# தாக்குதலில் படுகாயமடைந்த வாணுகா கிளிநொச்சிக்கு

(கிளிநொச்சி)

மட்டக்களப்பில் இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பகுதியான புல்லாவிச் சந்தியில, கடநத வெள்ளிக்கிழமை இடம் பெற்ற கிளைமோர்த் தாக்குதலில் படுகாயமடைந்த பெண் போராளியான வாணுகா - கிளிநொச்சிக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியினூடாக கிளிநொச்சிக்கு அழைத்துச் செல்லப்பட்ட இவருக்கு, படையினர் வழித்துணை பாதுகாப்பு வழங்கியதாகவும் தெரியவருகிறது.

பாதுகாப்பு காரணங்களையும், மேலதிக சிகிச்சைகளையும் கருத்திற் கொண்டே இவர் கிளிநொச்சிகது அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வெள்ளிக்கிழமை புல்லாவிச் சந்தியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில், முன்னாள் அம்பாறை மாவட்ட அரசியறதுறைப் பொறுபபாளர் பாவா, புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு பொறுப்பான யோகா ஆகியோர் கொல்லப்பட்டதோடு, பெண் போராளி வாணுகா படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பண்டாரவன்னியனின் 201 ஆவது நினைவுதினம் கற்சிலைமடுவில் எழுச்சிபூர்வமாக அனுஷ்டிப்பு

(கற்சிலைமடு)

வன்னி மண்ணின் இறுதிமன்னன் பண்டாரவன்னியனின் 201 ஆவது நினைவுநாள் நிகழ்வுகள் நேற்று முன்தினம் கற்சிலைமடு நினைவுத் தூபியடியில் எழுச்சிபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

முல்லைமாவட்ட அரச அதிபர் எமில்டா சுகுமாரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கற்சிலைமடு பண்டாரவன்னியன் கற்பொறிப் பகுதியிலிருந்து ஊர்வலமாகப் புறப்பட்ட மக்கள்கூட்டம் பண்டாரவன்னியனின் உருவப்படத்தைத் தாங்கியவண்ணம் கரகம், காவடி, கோலாட்டம் முதலான பாரம்பரிய கலை அம்சங்களை நடத்திக் காட்டியவண்ணம் ஊர்வலமாகச் சென்று பண்டாரவன்னியனின் நினைவுத்தூபியை அடைந்தன.

அங்கு பிற்பகல் 5 மணியளவில் நிகழ்வுகள் ஆரம்பமாகி சிறப்புரை நடைபெற்றது.

இந்த நிகழ்வின் ஈகைச்சுடரை ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் திருமதி ந.செல்வராஜா மற்றும் கற்சிலைமடு கிராமசேவை அலுவலர் எஸ்.ஆனந்தராஜா ஆகியோர் ஏற்ற பொதுச்சுடரை தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் ஏற்றிவைத்தார்.

தமிழீழத் தேசியக் கொடியை, முல்லை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கே.முகுந்தன் ஏற்றி வைத்தார். தொடர்ந்து பண்டாரவன்னியன் உருவப்படத்துக்கான ஈகைச் சுடரை அருணா செல்லத்துரை ஏற்றிவைத்தார்.

பண்டாரவன்னியன் உருவச் சிலைக்கான மலர்மாலையை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ப.கனகரட்ணம் அணிவித்தார். தொடர்ந்து சிறப்புரைகள் நடைபெற்றன.



ஜெந்தருபன் அறிவுச்சோலையில் நடைபெற்ற கண்காட்சி நிகழ்வின் போது மாணவன் ஒருவன் ஆக்கத்தை பார்வையாளருக்கு விளங்கப் படுத்துவதைப் படத்தில் காணலாம்.

படம் : ரமணன்

## திருவையாறு அஞ்சலகம் இரத்தினபுரத்தில்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி திருவையாறு அஞ்சலகம் திருவையாற்றுப் பகுதியில் இயங்காமல், அதன் அருகிலுள்ள கிராமமான இரத்தினபுரம் பகுதியில் இயங்குவதால், திருவையாற்றுப் பகுதி மக்கள் தமது அஞ்சல் தேவைகளுக்காக நீண்டதூரம் பயணிக்க வேண்டிய நிலைமை ஏறபட்டுள்ளது.

திருவையாறு அஞ்சலகம் இரத்தினபுரம் இரவல் இடத்தில் இயங்கி வருகிறது.

முன்னர் திருவையாறு அஞ்சலகம் இயங்கிவந்த கட்டடம் இராணுவ நடவடிக்கையின்போது அழிக்கப்பட்டது.

அதன் பின்னர் அந்த வளாகம் வேறொருவரின் கைக்கு மாறியுள்ளதால், அதில் தொடர்ந்தும் அஞ்சலகம் இயங்கமுடியாத நிலை காணப்படுகிறது.

இதனால் இரத்தினபுரத்தில் இயங்கும் அஞ்சலகத்துக்கு மக்கள் பெரும் சிரமத்துடன் சென்று தமது கடமைகளை நிறைவேற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

( )

# வன்னியில் எயிட்ஸ்நோய்த் தாக்கம் அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது

தென்னிலங்கையில் 1986 ஆம் ஆண்டு முதன் முதலாகக் கண்டு பிடிக்கப்பட்ட எயிட்ஸ் நோயாளியை அடுத்து, சமாதான உடன்படிக்கையின் பின்பு இந்த நோய்த் தாக்கம் வன்னியிலும் ஊடுருவத் தொடங்கியிருக்கிறது என்ற அதிர்ச்சித் தகவல் இப்பொழுது வெளியாகியிருக்கிறது.

வன்னியில் இடம்பெயர்வு காலத்தில் ஏற்பட்டிருந்த கொடிய கொலராவைவிட, இந்த எயிட்ஸ் தாக்கம் தொடர்பாக மருத்துவ நிபுணர்களே அதிக அதிர்ச்சியுற்று இருக்கிறார்கள்.

காரணம் எயிட்ஸ் தொற்று ஏற்பட்ட ஒருவர் எயிட்ஸ் நோயாளி என இனங்காண இரண்டு தொடக்கம் பன்னிரண்டு ஆண்டுகள் வரை எடுக்குமென மருத்துவர்கள் தெரிவிக்கின்றார்கள்.

எயிட்ஸ் நோயாளி என இனங்காணப்படுவதற்கு முன்பு, அநத நோயாளி ஊடாகப் பலர் எயிட்ஸ் தொற்றுக்கு உள்ளாக்கப்படலாம் என்பதால் தான் இந்த எயிட்ஸ் தாக்கம் தொடர்பாக மருத்துவ நிபுணர்களுக்கே ஒரு கலக்கம்.

எயிட்ஸ் நோயாளிகள் அதிகரித்துக்கொண்டு இனங்காணப்பட்டால், அது மருத்துவர்களின் செயலற்ற நிலையைக் காட்டிவிடும்.

எது என்னவோ வன்னியிலுள்ள சுகாதார சேவைகள், பணிப்பாளர் பணிமனை உட்பட தமிழீழ சுகாதார சேவையினரும் இந்த எயிட்ஸ் விடயத்தில் இதனைத் தடுப்பதற்கு மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றார்கள்.

இந்த எயிட்ஸ் நோய் தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு பரிந்துரை வழங்கும் நிகழ்வு கடந்த வாரம் கிளிநொச்சி பிரதி மாகாண சுகாதார மருத்துவ அதிகாரி சத்தியமூர்த்தி தலைமையில் இடம்பெற்றிருந்தது.

இந்த கருத்தரங்கின்போது எயிட்ஸ் தொற்றுக்கு இலக்காகி இருந்தவர்கள் 1996, 1997 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வன்னியிலும், இருந்திருக்கிறார்கள் என்ற தகவ்ல் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இடம்பெயர்வு காலத்தில் அக்கராயன் மருத்துவமனையில் பிறிதொரு நோய்க்கென சிகிச்சை பெற்று வந்த ஒருவர் (எயிட்ஸ் தொடர்பான ரகசியம் பேணும்பொருட்டு பெயர் தணிக்கை) அந்த நோயின் மேலதிக சிகிச்சைக்காக வவுனியா பொது மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார்.

அங்கு சிகிச்சை பலனளிக்காத நிலையில், அவர் அனுராதபுரம் மருததுவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

அங்கு மேலதிக சிகிச்சையின் பொருட்டு, அவரை இரத்தப் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டபோது தான் அவருக்கு எயிட்ஸ் தொற்று இருப்பதாக கண்டறியப்பட்டது.

பின்பு அவருக்கு ஏற்பட்டிருந்த பிறிதொரு நோயின் காரணமாக (எயிட்ஸ் அல்ல) அவர் உயிரிழந்திருக்கிறார்.

உயிரிழந்த பின்பு அவருக்கு எயிட்ஸ் தொற்று இருந்த விடயம் அப்படியே மறைந்து போனது.

சில காலங்களுக்குப் பின்னர் இவருக்கு இறப்புச் சான்றிதழ் பெறுவதற்கு, அவரின் நோய்ப் பதிவு அட்டையுடன் குறிப்பிட்ட நபரின் உறவினர் ஒருவர் அக்கராயன் மருத்துவமனைக்கு வரும்போதுதான், நோய் பதிவு அட்டையூடாக மருத்துவர்கள் இந்த எயிட்ஸ் நோயைக் கண்டறிந்தார்கள்.

இதனூடாக 1996, 1997 ஆம் ஆண்டு காலப்பகுதியிலும் ஒரு எயிட்ஸ் தொற்று நோயாளி வன்னியிலும் இருந்திருக்கின்றார் என்பது புலனாகிறது.

இப்பொழுது 18 - 20 வரையான எயிட்ஸ் தொற்றுக்கு இலக்கானவர்கள் வன்னியில் இருக்கலாம் என மருத்துவர்கள் அஞ்சுகிறார்கள்.

வெளிநாடுகளிலிருந்து வருபவர்கள் ஊடாக இந்த தொற்று ஏற்படுவதற்குச் சாத்தியங்கள் இருக்கின்றன.

குறிப்பாக, தென்னிந்திய அகதி முகாம்களிலிருந்து தாயகம் திரும்பும் அகதிகளும் இந்தத் தொற்றுக்கு உள்ளாகி வருவதாக தெரிவிக்கப்பட்டதையடுத்து, இப்பொழுது தாயகம் திரும்பும் அகதிகளும் தீவிர பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

எமது உடலில் காணப்படும் நிணநீர்க்குழியங்கள்தான் எமது உடலைத் தொற்று நோய்களிலிருந்து பாதுகாக்கின்றது.

ஆனால், இந்த எச்.ஐ.வி. வைரஸ் - தொற்று ஏற்பட்ட பின்பு அந்த நிணநீர்க்குழியங்களிலேயே தொற்றுக்களை ஏற்படுத்தி, அவற்றின் செயற்பாடுகளை செயலிலக்கச் செய்கிறது.

ஆகவே, இந்த எயிட்ஸ் தொற்று ஏற்பட்ட பின்பு எமது உடல் இயல்பாகவே பல்வேறு நோயெதிர்ப்பு சக்தியை இழக்கிறது.

இதனால் சுவாசத்தொற்று, புற்று நோய், தொடர் வயிற்றோட்டம் உட்படப் பல்வேறு நோய்கள் ஏற்பட வழிவகுக்கிறது.

எயிட்ஸ் நோய் கடத்தப்படும் வழிகள் சில -

பாதுகாப்பற்ற உடலுறவைத் தவிர்த்தல், எச்.ஐ.வி. வைரஸ் தொற்றியுள்ள ஒருவரின் குருதியை இன்னொருவருக்கு ஏற்றுவதைத் தவிர்த்தல், தொற்றுள்ள ஊசிகள், முகச்சவர அலகுகளைப் பாவிப்பதைத் தவிர்த்தல் என்பவற்றுடன், எயிட்ஸ் தொற்றுள்ள தாய் ஒருவர் தனது குழந்தைக்கு தாய்ப்பால் ஊட்டுவதன்மூலமும் குழந்தைக்கு எயிட்ஸ் தொற்றுவதற்கான சாத்தியம் இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

எனவே, ஒரு தாய் தனது பிள்ளைக்கு தாய்ப்பாலூட்டுதலுக்குக் கூட இந்த எயிட்ஸ் தொற்று பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது.

மொத்தத்தில் ஒரு மனிதன் தனது இயல்பு நிலையில் வாழ முடியாது அழிக்கும் ஒரு கொடிய தொற்றுநோய் இந்த எயிட்ஸாகும்.

எனவே, இது தொடர்பில் விழிப்புணர்வு மிக அவசியம்.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*ஊறுஒரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்*
*ஆறுஎன்பர் ஆய்ந்தவர் கோள்*

திருக்குறள்

# நமது நோக்கு

## சமாதானத்தை போட்டுடைக்கப்போகும் சிங்கள அரசியல் பொரிமாத் தோண்டிகள்

கடந்த சில நாட்களாக நடைபெற்றுவரும் சம்பவங்களைப் பார்த்தால் அரசதரப்பினரும் படைத்தரப்பினரும் நாட்டின் சமாதான சூழலில் எதிர்காலத்தை ஒரு நூலிழையில் தொங்கவிட்டு வேடிக்கை பார்க்கிறார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது.

இந்தச் சந்தர்ப்பத்தை விடாமல் இதைப்போன்று மற்றுமோர் வாய்ப்பு இந்த நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு உருவாகும் சாத்தியம் ஏற்படப்போவதில்லை என்ற நிலை தெளிவாகியுள்ள நிலையிலும், இந்த வாய்ப்பை சரியான முறையில் பயன்படுத்தி நாட்டினதும் மக்களதும் எதிர்கால நன்மையைக் கருத்திற்கொண்டு - பல தசாப்தகால அவலநிலைக்கும் அழிவு நிலைக்கும் காரணமான இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சு வார்த்தைகள் மூலம் உறுதியானதும் நிரந்தரமானதும் தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றக்கூடியதுமான ஓர் அரசியல் தீர்வை ஏற்படுத்தவேண்டிய தமது வரலாற்றுப் பொறுப்பினை சிங்கள அரசியல் தலைமைகள் நிராகரித்து கைவிடும் அபாயம் ஏற்பட்டு வருகின்றமை கவலைக்குரிய விடயமேயாகும்.

கடந்த மூன்றாண்டு கால சமாதானத்தின் பெறுபேறுகளை தமிழ்மக்கள் எந்தவகையிலும் அவர்களின் அரசியல் மற்றும் வாழ்வியல் உரிமைகள் தொடர்பான விடயங்களில் அனுபவித்தது கிடையாது. ஆனால், இதற்கு மாறாக தென்னிலங்கை சமூகமே சமாதானத்தின் அனுகூலங்களை பன்முகப்பட்ட வகையில் இன்றுவரை அனுபவித்து வருகின்றபோதிலும் கூட சிங்கள அரசியல் தலைமைகளின் தொலைநோக்குச் சிந்தனைத் திறனற்ற அணுகுமுறைகள் சமாதானத்தின் சமகாலப் பலன்களை மட்டுமல்ல, அதன் எதிர்கால நன்மைகளையும்கூட நிராகரிப்பவையாகவே உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கையில் அரசியல் பொறுப்பை மாறிமாறி ஏற்ற சிங்களப் பிரதான அரசியல் கட்சிகளின் தலைமைகள் இனப்பிரச்சினையை ஒரு துரும்புச்சீட்டாக வைத்தே தமது அரசியல் சதுரங்கத்தை இதுவரை ஆடிவந்துள்ளனர் என்பதை இலங்கையின் வரலாற்றை அறிந்தோர் நன்கறிவர்.

ஜனநாயகம் பேசிய பேரினவாதத் தலைமைகள் முதல் 'தோழமை' பற்றிப் பேசும் சமதர்ம கோஷதாரிகளான இடதுசாரிகள்வரை தமிழ்மக்களின் அரசியல் உரிமை தொடர்பான பிரச்சினையில் காலத்துக்குக் காலம் அடித்த குத்துக்கரணங்களின் பின்விளைவான அவலங்களையே இன்று இந்த நாட்டின் மக்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக அனுபவித்து வருகின்றனர்.

இந்த அவலங்களிலிருந்து நாட்டையும் மக்களையும் காப்பாற்றக் கிடைத்த கடைசி வாய்ப்பான இன்றைய சமாதானச் சூழலை சரியான முறையில் மதிப்பீடு செய்யவும் பயன்படுத்தவும் சிங்கள பிரதான அரசியல் தலைமைகளிடையேயான போட்டி அரசியல் நகர்வுகளும் புரிந்துணர்வு அற்றதும் சுயேச்சையானதும் தேசிய நலனுக்கொவ்வாததுமான செயற்பாடுகளும் அதிகார அகங்காரத்துடன்கூடிய நிர்வாகக் கட்டமைப்பின் தான்தோன்றித்தனமான நடவடிக்கைகளும் அனுமதிப்பதாக இல்லை.

இந்த நிலைமைகள் உடனடியாக திருந்தும் சாத்தியமும் இருப்பதாகத் தெரியவில்லை. இவைகள் வெறும் ஊகத்தின் அடிப்படையில் கூறப்படும் கருத்துக்களே அல்ல. பல தசாப்த கால சிங்கள ஆட்சியாளர்களின் அரசியல் முன்னெடுப்புக்கள் ஏற்படுத்திய தாக்கங்களின் அனுபவப் பட்டறிவின் வெளிப்பாடான யதார்த்த நிலையேயாகும்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சமாதானத்தை ஒரு தீர்க்கமான அரசியல் நியாயத்தின் அடிப்படையிலான பேச்சுக்கள் மூலம் கட்டியெழுப்பும் ஆத்மார்த்த விருப்பினைக் கொண்ட புரிந்துணர்வின் அடிப்படையில் தேசிய நலனை முதன்மைப்படுத்தி இயக்கும் கட்சிகளை உள்ளடக்கிய ஒரு அமைப்பே கிடையாது.

ஆட்சியை எப்படியாவது கைப்பறினால் போதும் என்ற ஒரு இலக்குடன் மட்டும் ஒன்றிணைந்த கட்சிகளின் கொள்கை முரண்பாட்டுக் கூட்டணியால் சமாதானப் பணிகளில் ஒருமித்துச் செயற்பட முடியவேமுடியாது.

இதனை அவர்களின் மூன்று மாதகால ஆட்சி மக்களுக்கும் சர்வதேசத்துக்கும் புரியவைத்தேயுள்ளது.

சமாதான முயற்சிகளை எவ்வாறேனும் குழப்புவதையே குறியாகக் கொண்டிருக்கும் புதிய அரசாலும் ஜனாதிபதியாலும் சர்வதேச சமூகத்தின் அனுசரணை மற்றும் பின்னாதரவு முயற்சியாவும் நாளுக்கு நாள் புறந்தள்ளப்பட்டு விமர்சிக்கப்பட்டு - அவமதிக்கப்பட்டு வருவதை சமாதான விரும்பிகள் மிகவும் கவலையுடன் அவதானித்து வருவதை அவர்களின் அறிக்கைகள் மற்றும் அழுத்தக்குறிப்புக்கள் மூலம் அறியக்கூடியதாக உள்ளது.

இந்தநிலையில் கிழக்கில் பதற்ற நிலையை தமிழ் ஆயுதக் குழுக்களுடன் இணைந்து திட்டமிட்டு உருவாக்கிவரும் படைத்தரப்பினர், அத்தகைய குற்றச்சாட்டுக்களை மறுத்துவரும் அதேவேளை, கிழக்கில் தம்மீது எவரும் தாக்கினால் திருப்பித் தாக்குமாறு படையினருக்கு இராணுவத் தளபதி உத்தரவிட்டுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

இது அரசின் உத்தரவா? இராணுவத் தளபதியின் தன்னிச்சையான உத்தரவா? என்பது தெரியவில்லை.

ஆனால், எதுவானாலும்

நந்த வனத்திலோர் ஆண்டி - அவன்
நாலாறு மாதமாய் குயவனை வேண்டி
கொண்டு வந்தான் ஒரு தோண்டி - அதை
கூத்தாடிக் கூத்தாடி போட்டுடைத்தாண்டி...

என்ற பொரியமாத்தோண்டியின் கதைபோலவே சமாதானத்தைப் போட்டுடைக்க முயற்சிக்கும் சிங்களத் தலைமைகளின் கதையும் இருக்கப் போகிறது என்பதும் மட்டும் உண்மை.

## நாடும் நடப்பும்




# அரசாங்க காணிகளில் குடியேறியோரை வெளியேற்ற அரசாங்கம் நடவடிக்கை!

அம்பாறை மாவட்டத்தில் உள்ள அரச காணிகளில் 1995 ஆம் ஆண்டுக்குப் பின்னர் குடியேறியவர்களை அப்புறப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக அம்பாறை மாவட்ட அரச செயலகத்தில் இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்து கொணடு உரையாற்றிய வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தன தெரிவித்தார்.

மூவின மக்களின் காணி சம்பந்தமான பிரச்சினைகளை ஆராயவே இந்தக் கூட்டம் நடத்தப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின்படி 1995 ஆம் ஆண்டுக்கு முன்னர் அம்பாறை மாவட்ட அரச காணிகளில் குடியேறியோருக்கு காணி உறுதிப்பத்திரம் வழங்குவதெனவும், அதன் பின்னர் அரச காணிகளில் குடியேறியோரை அங்கிருந்து அகற்றுவதெனவும் முடிவுசெய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவ்வாறு 1995 ஆம் ஆண்டுக்குமுன் அரச காணிகளில் குடியேறியோர் வெளியேற்றப்படுபவர்களானால் பெருந்தொகையானோர் பாதிப்படைய நேரிடும் என தெரிவிக்கப்படுகின்றது.

# உற்சவகால தொண்டர்கள்மீது விஷமிகள் அடாவடித்தனம்!

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவகால வீதி ஒழுங்கு பேணும் தொண்டர்கள் - விஷமிகளின் அடாவடித்தனத்துக்கும், மிரட்டலுக்கும் ஆளாகியுள்ளனர். நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்சவ காலங்களில் ஏற்படுகின்ற இடையூறுகளை தவிர்த்து திருவிழா சிறப்பாக இடம்பெறுவதற்காக பல தொண்டர் நிறுவனங்கள் தமது பங்களிப்பை ஆற்றிவருகின்றன.

இதில் மாநகர சபையினரால் சங்கிலியன் வீதிச் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள வீதித்தடை நிலையத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த மக்கள் நலன்புரிச் சங்கத் தொண்டர்களிடம் நேற்றுமுன்தினம் சென்ற சில இளைஞர்கள், வீதித்தடையை நீக்கி தங்களை வீதிக்குள் வாகனத்துடன் அனுமதிக்குமாறும் கேட்டுள்ளனர்.

அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்களைத் தவிர ஏனையோர் வாகனங்களுடன் உள்ளே நுழையமுடியாது என தொண்டர்களினால் கூறப்பட்டபோது, அதற்கு அந்த இளைஞர்கள் வாக்குவாதம் செய்ததோடு அவர்களைத் தாக்கப் போவதாகவும் மிரட்டிவிட்டுச் சென்றனர்.

இதேபோன்று விசமிகள் பல தடவைகள் நடந்து கொண்டதாகவும், ஓட்டோ சில்லுகளை தமது கால்களில் ஏற்றி துன்பப்படுத்தியதாகவும் இந்தத் தொண்டர்கள் வருத்தம் தெரிவித்தனர். இவ்வாறு ஒழுங்குகளைக் குழப்பும் விசமிகளையிட்டு மக்கள் பெரிதும் விசனமடைந்துள்ளதாகத் தெரிவித்தனர்.

# முத்திரைச்சந்தி கொலைச் சம்பவம்; மேல்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.முத்திரைச் சந்திக்கருகில் இடம்பெற்ற கொலை சம்பந்தப்பட்ட வழக்கு யாழ்.மேல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்தப்பட்டுள்ளது. சென்ற வருடம் ஜூலை மாதத்தில் பருத்தித்துறை வீதி முத்திரைச் சந்திக்கருகில் உள்ள ஒரு வீட்டில் சகோதரர்களுக்கிடையே இடம்பெற்ற வாக்குவாதம் முற்றியதால் தனது சகோதரனான கிருஸ்ணபிள்ளை சிறீதரனை, அவரது தம்பி முரளிதரன் அலவாங்கால் தாக்கியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகள் யாழ்ப்பாண மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் இடம்பெற்றன. குற்றஞ்சாட்டப்பட்டவர் குறித்து போதிய ஆதாரங்கள் தெளிவாகக் காணப்படுகின்றன.

தற்போது எதிராளியின் சட்டத்தரணி, குற்றஞ்சாட்டப்பட்டவரின் எதிர்வாதத்தை யாழ்.மேல்நீதிமன்றுக்கு முறையீடு செய்யவிருப்பதாக தெரிவித்துள்ள நிலையிலேயே, இந்த வழக்கு மேல் நீதிமன்றில் யாழ்.குற்றவியல் தடுப்பு பிரிவு பொலிஸாரினால் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

# தென்பகுதிக் கொலைச் சம்பவங்களுக்கு சிறையிலிருந்து வெளியேறியோரே காரணம் பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பிலும்,அதன் சுற்றுப்புறத்திலும் அதிகரித்துவரும் கொலைச் சம்பவங்களுக்கு சிறையிலிருந்து வெளியேறியவர்களே காரணம் என்று பொலிஸ் மா அதிபர் இந்திர டி சில்வா தெரிவித்தார்.

பல்வேறு கொலைச் சம்பவங்களுக்கும், பாதாள உலக கோஷ்டியினரிடையே ஏற்பட்ட அதிகாரப்பிரச்சினை மற்றும் விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்டவர்களே காரணம்.

இவ்வாறு அதிகரித்துவரும் கொலைச் சம்பவங்களை கட்டுப்படுத்துவதற்காக தற்போது நடைமுறையில் உள்ள பாதுகாப்புத் திட்டத்தை விஸ்தரிக்கவுள்ளதாக இந்திர டி சில்வா மேலும் தெரிவித்தார். (01)

# பொலிஸ் திணைக்களத்தின் எரிபொருட்களின் அளவை 15 வீதத்தால் குறைக்க முடிவு!

(கொழும்பு)

பொலிஸ் திணைக்களத்தின் பாவனையில் உள்ள வாகனங்களுக்கு வழங்கப்பட்ட எரிபொருட்களில் 15 வீதத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸ் மா அதிபர் இந்திர டி சில்வா தெரிவித்தார்.

அண்மையில் எரிபொருட்களின் விலை திடீரென அதிகரிக்கப்பட்டுள்ளதை அடுத்து பொலிஸ் திணைக்களம் இந்த முடிவை எடுத்துள்ளது.

நாட்டில் அதிகரித்துவரும் குற்றச்செயலைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள அதேவேளை, வாகனங்களுக்கான எரிபொருட்களின் அளவை மட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனால், திணைக்களத்தின் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக தெரியவருகிறது. (01)

# இவ்வார பலன்கள்
## 27-08-2004 02-09-2004

| | ராகு | | சுக் சனி |
|---|---|---|---|
| யுரே | 27 இ. 12.10 கன்-குரு<br>27 கா. 9.11 மக-சந்<br>29 ப. 10.27 கும்-சந் | | |
| நெப் | 31 ப. 1.09 மீன-சந்<br>01 ப. 10.29 கட-சுக் | | சூ,செவ், புத,குரு |
| சந் | | கேது | |

### மேடம்
*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*



மேடராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் சிறு சச்சரவுகள் தோன்றும். உறவினர்களாலும் தொல்லைகள் ஏற்படும். புத்திரர்களால் செலவுகள் அதிகமாகும். பெண்கள் சிக்கனத்தைக் கடைப்பிடித்தல் நன்று. பணவரவு ஓரளவு நன்றாக இருக்கும் உடல் நிலையில் சிறு தாக்கங்கள் ஏற்படலாம். திருமணப் பேச்சுக்கள் கால தாமதத்தின் மேல் கைகூடும். உத்தியோகத்தர்கள் தமது பணிகளில் அவதானமாக இருத்தல் வேண்டும். அதிகாரிகளின் விருப்புக்கேற்ப நடப்பது நன்மை பயக்கும். வியாபாரிகளுக்கு குறைந்த பட்ச லாபமே கிடைக்கும். கொடுக்கல் வாங்கல்களில் எச்சரிக்கை தேவை. மாணவர்களுக்கு கல்வியில் கூடிய அக்கறை தேவை.

### இடபம்
*(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)*



இடபராசியினருக்கு இல்லற வாழ்வு மகிழ்ச்சியாக இருக்கும். புத்திரர்களால் நற்பெயர் கிட்டும். உறவினர்களால் உதவி உண்டு. பணவருவாய் நன்றாக இருக்கும். வீட்டில் சுப நிகழ்வுகள் ஏற்படலாம். தேகசுகம் சிறப்பாக இருக்கும். திருமணப் பேச்சுக்கள் நல்ல முடிவைத் தரும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். பணம் சேரும். பழைய நிலுவைகள் வந்து சேரும். உத்தியோகத்தர்கள் தம் விருப்பப்படி பணியாற்ற முடியும். அதிகாரிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் ஊக்கமுடையவர்களாக இருப்பார்கள். பரீட்சைகளிலும் வெற்றி பெறுவார்கள்.

### மிதுனம்
*(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள் )*



மிதுனராசியினருக்கு குடும்ப வாழ்க்கை சிறப்பாக இருக்கும். புத்திரர்கள் முன்னேற்றமடைவார்கள். எண்ணிய கருமங்கள் தங்குதடையின்றி நிறைவு பெறும். பணவருவாய் சிறப்பாக இருக்கும். சுப நிகழ்வுகளில் பங்கு கொள்ளும் வாய்ப்புண்டு. திருமணப் பேச்சுக்கள் நன்மை தரும். சிலருக்கு வெளிநாட்டுப் பிரயாண வாய்ப்பு உண்டு. உத்தியோகத்தர்கள் சிறப்பாகப் பணியாற்றி நற்பெயர் பெறுவார்கள். சிலருக்கு உயர்ச்சி கிட்டும். வர்த்தகர்களுக்கு வாடிக்கையாளர்களின் வரவு அதிகரிக்கும். தனித்தொழில் செய்வோருக்கு குறிப்பிடத்தக்க வளர்ச்சி உண்டு. மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பர். ஆசிரியர்களின் பாராட்டுக் கிடைக்கும்.

### கடகம்
*(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)*



கடகராசிக்காரருக்கு குடும்பத்தில் அடிக்கடி சண்டை சச்சரவு ஏற்படும். எதிர்பாராத திடீர்ச் செலவு வரும். தேகநிலையிலும் பாதிப்பு ஏற்படலாம். தேகசுகம் பற்றி அவதானம் தேவை. திருமணப் பேச்சுக்கள் தாமதத்தை ஏற்படுத்தும். தொடங்கும் கருமங்கள் தடைப்படும். வியாபாரிகளுக்கு முதலீடுகளில் தேக்கம் ஏற்படும். வங்கி உதவிகள் உரிய நேரத்தில் கிடையாமல் போகும். உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் கெடுபிடி இருக்கும். உயர்ச்சி தாமதப்படலாம். மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கமின்மை, மறதி காட்டும்.

### சிங்கம்
*(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)*



சிங்கராசியில் பிறந்த குடும்பஸ்தவர்களுக்கு பல சிக்கல்கள் தோன்றி மறையும். கணவன் மனைவியிடையே சிறு பூசல்கள் ஏற்படும். பொருளாதாரம் சாதாரண நிலையில் இருக்கும். அடிக்கடி பிரயாணம் செய்ய வேண்டியிருக்கும். குடும்பப் பெண்களுக்கு நிதானம் தேவை. தேகாரோக்கியத்திலும் சிறு தொந்தரவுகள் ஏற்படலாம். விவாகப் பேச்சுக்கள் தாமதமடையும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்த நிலையிலேயே இருக்கும் புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். இரும்பு வியாபாரம் செய்வோர் கூடிய லாபம் பெறுவர். உத்தியோகத்தர்களுக்கு சகாக்களின் தொந்தரவு இருக்கும். வேலைப் பொறுப்புக்களும் அதிகமாகும். மாணவர்கள் முயற்சிக்கேற்ப லாபம் பெறுவர். தேவையற்ற விடயங்களில் தலையிடுவதைத் தவிர்க்கவும்.

### கன்னி
(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)



கன்னி ராசியினருக்கு இல்லற வாழ்வில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகளால் பெருமையும், நற்பெயரும் கிட்டும். பொருளாதார நிலை வளர்ச்சியடையும். பெரியோர்களின் ஆதரவும், ஆசியும் கிட்டும். தேகாரோக்கியம் நன்றாகவே இருக்கும் விவாகப் பேச்சுக்கள் மகிழ்ச்சியான முடிவைத்தரும். குடும்பப் பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர். வியாபாரிகளுக்கு விற்பனை நன்றாக இருக்கும். பழைய முதலீடுகள் விற்பனையாகும். உத்தியோகத்தர்களுக்கு மக்கள் மத்தியில் மதிப்பும். மரியாதையும் வளரும். அதிகாரிகளின் பாராட்டுதல்களும் கிட்டும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பர்.

### துலாம்
*(சுவாதி , விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள் சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள்)*



துலாராசியினருக்கு குடும்ப வாழ்க்கையில் சந்தோஷம் நிரம்பிக்காணப்படும். புத்திரர்களால் நற்பெயர் கிட்டும். இனபந்துக்களால் உதவி உண்டு. திடீர் பொருள் வரவுகள் ஏற்படும். தேகசுகம் பாதிப்படையாது. வீட்டில் சுபகருமங்கள் நடைபெற இடமுண்டு. திருமணப் பேச்சுக்கள் நற்பலன் தரும் வியாபாரிகளுக்கு வியாபாரம் வளர்ச்சியடையும். பணியாட்கள் ஒத்தாசை புரிவர். உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் அனுசரணை கிடைக்கும். சிலருக்கு பதவி உயர்வு கிடைக்கலாம். சொந்தத் தொழில் புரிவோருக்கு வசதிகள் கிட்டும். மாணவர்களுக்கு நினைவாற்றல் அதிகரிக்கும், பரீட்சையில் சித்தி உண்டு.

### விருச்சிகம்
*(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)*



விருச்சிகராசியினருக்கு குடும்பத்தில் அடிக்கடி சண்டை சச்சரவுகளும் நிம்மதிக் குறைவும் காணப்படும். புத்திரர்களால் செலவு அதிகரிக்கும். பண நெருக்கடி ஏற்படும். அயலவர்களுடன் பகைமை தோன்றும். தேகநலம் கவனிக்கப்பட வேண்டும். மருத்துவச் செலவுகளும் தவிர்க்க முடியாததே. பெண்கள் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். திருமணப் பேச்சுக்கள் இழுபறி நிலையிலேயே இருக்கும். வியாபாரிகளுக்கு நஷ்டமே காணப்படும். கொடுக்கல் வாங்கல்களில் எச்சரிக்கை தேவை. உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகமாகும். சகாக்களின் ஒத்துழைப்புக் கிடையாது. மாணவர்களுக்கு கல்வியில் அக்கறையின்மை. சோர்வு காட்டும்.

### தனுசு
*(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)*



தனுராசியில் பிறந்தவர்களுக்கு இல்லற வாழ்வில் குதூகலம் நிரம்பிக் காணப்படும். கணவன் மனைவியிடையே அந்நியோன்ய உறவு வலுக்கும். பொருளாதார நிலை திருப்தியாக இருக்கும். தேகசுகம் நன்கு அமையும். தொடங்கும் கருமங்கள் தங்கு தடையின்றி நடக்கும். திருமணங்கள் மனம்போல் நிகழும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் ஓகோ என்று சிறப்பாக நடைபெறும். பணவருவாய் நன்று புதிய முதலீடுகளுக்கும் நன்று. உத்தியோகத்தர்களுக்கு நண்பர்களின் உதவி கிட்டும். மேலதிகாரிகள் பரிவுடன் நடந்து கொள்வர். தனித்தொழில் புரிவோர் நல்ல வளர்ச்சி காண்பர். மாணவர்கள் புத்தி சாதுர்யத்துடன் நடந்து வெற்றி பெறுவர்.

### மகரம்
*(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)*



மகரராசியினருக்கு குடும்பத்தில் சிறு சச்சரவுகள் தோன்றும். வாக்குவாதங்களும் ஏற்படும். புத்திரர்களால் செலவு அதிகரிக்கும். சகோதரர்களுடன் மனக்கசப்புத் தோன்றும். தேகசுகத்தைப் பற்றி கூடிய கவனம் எடுக்கவும். தேவைக்கேற்ற வருவாய் கிடைக்கும். பெண்கள் பொறுமையும், அன்பும் உடையவர்களாயின் எதையும் சமாளிக்கலாம். வர்த்தகர்களுக்கு வியாபாரத்தில் குறைந்தபட்ச லாபமே கிடைக்கும். பணியாட்களிடம் கவனம் தேவை. உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளால் தொல்லைகள் ஏற்படும். சக உதவிகளும் குறையும். மாணவர்கள் கல்வியில் அதிக கவனம் எடுத்தல் வேண்டும்.

### கும்பம்
*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள)*



கும்ப ராசியினருக்கு வாழ்க்கையில் மகிழ்ச்சி, பூரிப்பு நிறைந்து காணப்படும். புத்திரர்களால் நற்பெயர், பெருமை கிட்டும். உறவினர் வழியில் உதவிகள் உண்டு. எதிர்பாராத பொருள்வரவு ஏற்படும். பணவரவு திருப்தியாக அமையும். திருமணப் பேச்சுக்கள் மனம்போல் அமையும். உத்தியோகத்தர்களுக்கு சகபணியாளர்களின் உதவி கிட்டும். ஊதிய உயர்ச்சி கிடைக்கும். வர்த்தகர்களுக்கு வியாபரம் சிறப்பாக நடக்கும். ஏற்றுமதி, இறக்குமதி நன்மையும். இரும்பு வியாபாரம் கூடிய லாபம் தரும். மாணவர்களுக்கு புத்திசாதுர்யம் வலுப்பெறும். கல்வி முன்னேற்றம் உண்டு.

### மீனம்
*(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)*



மீனராசியினருக்கு குடும்பத்தில் பல குழப்பங்கள் ஏற்படும். மனவுலைச்சல் அதிகமாகும். புத்திரர்களால் தொல்லைகள், செலவுகள் ஏற்படும். பணவருவாயில் நெருக்கடி ஏற்படும். நினைத்த கருமங்கள் எண்ணியவாறு கைகூடாது. திருமண நிகழ்வுகள் கைகூடுவதில் தாமதம் காட்டும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப் பளு அதிகரிக்கும். பிரயாணங்களில் சிரமங்கள் ஏற்படும். அதிகாரிகள் கடினமாக நடந்து கொள்வர். வியாபாரிகளுக்கு சரக்குகளில் தேக்கம் ஏற்படும். வங்கி உதவிகள் இழுபறி நிலையைக் காட்டும். புதிய முதலீடுகளைத் தவிர்த்தல் நன்று. மாணவர்களுக்கு கல்வியில் மந்த நிலை ஏற்படும். பரீட்சைகள் திருப்தியாக அமையாது.

- சந்தானகுமரன்

## செய்திக் கட்டுரை

# நம்மை நாமே திருத்திக் கொள்வதால் பிறர் தலையீட்டைத் தவிர்க்கலாம்

'ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது, பள்ளிப்படிப்பு புள்ளிக்கு உதவாது' என்பது பழமொழி. மனிதன் மனிதனாக வாழ்வதற்கான பண்பாற்றலை போதிக்கும் இடம் பாடசாலை ஆகும். 'ஒரு பாடசாலையை உருவாக்குவதன் மூலம் ஆயிரம் சிறைச்சாலைகளை மூடலாமென அறிஞர்கள் தெரிவித்துள்ளனர். இதிலிருந்து பாடசாலை என்பது கல்வி போதிப்பதிலும் பார்க்க ஒழுக்க நெறிமுறைகளை வளர்ப்பதற்கே முதலிடம் அளிக்கப்படவேண்டும் என்பது புலனாகிறது.

பாடசாலைகள் மாணவர்களுக்கு ஒழுக்க விதிகளை போதிப்பதை கைவிட்டு விட்டதென்பது இந்தக்கால மாணவர்களின் நடை, உடை, பாவனைகளிலிருந்து எல்லோராலும் கணிப்பிட முடிகிறது. 1980 ஆம் ஆண்டுவரை பாடசாலைகள் மாணவர்களை தமது கட்டுப்பாட்டில் ஆரோக்கியமான சமுதாயமாக வளர்த்ததை எவரும் மறுக்க முடியாது. அந்தக்காலத்தில் ஆசிரியர், அதிபர் பிரம்பும் கையுமாக பாடசாலையை வலம் வருவார்கள். பாலர் முதல் பல்கலைக்கழகம் செல்லவுள்ள மாணவர்கள் வரை மிகவும் பயபக்தியுடனும், குரு பக்தியுடனும் இருந்து பண்பாற்றலை வளர்க்குமிடமாக, பாடசாலைகளைப் பயன்படுத்தினார்கள் என்றால் அது மிகையாகாது.

மாணவர்கள் தவறு செய்துவிட்டால், ஆசிரியரோ அல்லது அதிபரோ அதற்கான தண்டனையை வழங்க பின்னிற்கமாட்டார்கள். அதற்கு அந்தக் காலத்து சட்டநடைமுறைகள் அனுகூலமாக இருந்தன. இதன் காரணமாக அக்கால மாணவர்கள் மிகவும் பயத்துடனும், ஒழுக்கக் கட்டுக்கோப்புக்களுக்கு கட்டுப்பட்டும் நடந்ததை இன்றுள்ள பல வயதானவர்கள் தெரிவிப்பதிலிருந்து நிரூபணமாகிறது.

இன்று பாடசாலை மாணவர்கள் பாடசாலைக்கு உள்ளேயும், வெளியேயும் பல வழிகளிலும் ஒழுக்க துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டு தமது பாடசாலையினதும், பெற்றோர்களினதும், மண்ணினதும் பெருமையை மழுங்கடிக்கச் செய்வதில் முன்னிற்கிறார்கள். ஒருவர் நல்ல செயலைச் செய்தால் என்ன தீய செயலைச் செய்தாலென்ன அவர் எந்தப் பாடசாலையில் கல்வி பயின்றார் என்ற கேள்வியே முதலில் எழும்.

1980 ஆம் ஆண்டின் பின்னர் நாட்டில் ஏற்பட்ட வன்முறைகள், இடப்பெயர்வுகள், குண்டு வீச்சுக்கள் மூலம் மாணவ சமுதாயத்துக்கு விரக்தி மனப்பான்மை ஏற்படத் தொடங்கியது. எவரையும் மதிக்காத, எவரின் புத்திமதிகளையும் கேட்காத அடாவடிச் சமுதாயமாக மாறத் தொடங்கிவிட்டது. எங்கு பார்த்தாலும் கோஷ்டி மோதல், வாள்வெட்டு என்ற கோரமான தாண்டவப் போக்கே தலை தூக்கியுள்ளது.

'நான் செய்வது தான் சரி நீ யார் எனக்கு புத்தி புகட்டுவது' என்ற இறுமாப்பில் இந்தக் கால மாணவர்கள், எவரின் சொற்களையும் மதியாது தெருக்களில் நடமாடுவதைச் சகல மக்களும் கண் கூடாகக் காண்கின்றனர்.

குறிப்பாக பாடசாலை மாணவர்கள் - பாடசாலை முடிந்து தெருவில் வந்ததும் பாடசாலை மைதானத்தில் எவ்வாறு தாறுமாறாக ஓடுகிறார்களோ அதையும் விடக் கேவலமாக பிரதான தெருக்களில் ஏனைய மக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் கூட்டமாகச் செல்வதைத் தினமும் அவதானிக்க முடிகிறது.

சைக்கிள்களில் ஒருவருக்கு பக்கத்தில் இன்னொருவர் சென்ற காலம் மாறி, இருவர், மூவர் என்று சென்ற காலமும் மாறி - ஐந்து, ஆறு மாணவர்கள் பாடசாலை சீருடையுடன் (வெள்ளைச்சட்டை) ஒருவர் கையை மற்றவர்கள் பிடித்தவாறும், தோளில் கைபோட்டவாறும், மோட்டார் சைக்கிளில் செல்லும் நண்பனின் கையை பிடித்து இழுபட்டுக் கொண்டும் ஏனைய பிரயாணிகளைப் பற்றி ஏதும் சிந்திக்காது இப்படித்தான் நடக்க வேண்டும் என்ற மனப் போக்கில் தெருக்களில் செல்வதை அனைவரும் அறிவர்.

"இவர்களுக்கு நாம் சளைத்தவர்களா?" என்ற மனப்பாங்கிலோ அல்லது ஆணுக்கு பெண் சரி நிகர் என்ற நோக்கிலோ தெரியவில்லை. மாணவிகள் கூட சமாந்தரமாக ஒருவரின் சைக்கிள் காண்டிலை மற்ற மாணவி பிடித்தவாறு நான்குபேர் ஒன்றாக செல்வதை என்னவென்று சொல்வது...

பின்னால் வரும் வாகனச்சாரதிகள், முதலுதவி வாகனங்கள் யாவும் இவர்களிடம் கெஞ்சி இடம் விட்டுத்தாருங்கள் என நீண்ட நேரம் ஹோர்ன் அடிப்பதை எவ்வாறு கூறுவது.

நாம் முன்னால் செல்வது தெரியவில்லையா? எமக்குப் பின்னால் உனக்கு மெதுவாக வரத் தெரியாதா? எனக் கேட்பதுபோல ஒரு நக்கல் பார்வை பார்ப்பதை எப்படிச் சகிப்பது. பாடசாலைகளில் ஒழுக்கமுறை பற்றி ஏதும் போதிப்பதில்லையா? மாணவருக்கு ஆசிரியர் பயமா? அல்லது ஆசிரியருக்கு மாணவர் பயமா. சிலவேளைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள்கூட இவர்களுக்கு பின்னால் வந்து ஒருவாறு தப்பிஓட்டி விலத்திக்கொண்டு வீடுசெல்வதையும் காணமுடிகிறது.

சில பாடசாலைகளுக்கு முன்பாக பிரதான வீதிகளில் பாடசாலை ஆரம்பமாகும்போதும், முடிவடையும்போதும் மாணவத் தொண்டர்கள் வீதி ஒழுங்கு நடவடிக்கைகளில் ஈடுபட்டு, போக்குவரத்து நெரிசலை இலகுபடுத்தும் சேவையில் ஈடுபட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது.

இது பாராட்டப்படவேண்டியதொன்று இதனால் அநியாய உயிர் இழப்புக்களை உடல் உபாதைகளைத் தடுக்கக்கூடிய செயற்பாடாக உள்ளது.

இதேபோல ஒவ்வொரு பாடசாலையும் காலையில் பிரார்த்தனை முடிவுற்றதும் நற்சிந்தனை கூறுவதுபோல, வீதி ஒழுங்கு நடைமுறைகளையும் ஒவ்வொரு மாணவர்களாக ஒவ்வொருநாளும் ஒழுங்காக வீதிகளில் செல்வோம். ஒற்றுமையாக வாழ்வோம் என்னும் தலைப்பின்கீழ் சிறு உரையாற்ற சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும். இதன்மூலம் வெகு விரைவில் நன்மை கிட்டும். இதற்கு கோட்டக் கல்வி அலுவலகம், வலயக் கல்வி அலுவலகம், காவல்துறை போன்றவர்கள் பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

இப்படி விளக்கமளிக்கப்பட்டதன் பின்னரும், விதிமுறைகளை உதாசீனப்படுத்துபவர்களைத் தண்டிக்க வேண்டியது அவசியமாகும்.

இதற்கு மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகளும் பூரண ஒத்துழைப்பு நல்க வேண்டும். ஏனென்றால், இன்று எடுத்ததற்கெல்லாம் மனித உரிமை என்ற பதத்தைப் பாவித்து, தவறு செய்பவர்கள் தப்பிவிட முடிகிறது. ஆசிரியர்கள் மாணவர்களைத் தண்டிக்க முடியாதுள்ளது.

இதன் காரணமாக சிறு வயதிலிருந்தே புத்திமதி, நல்லுரைகளைக் கேட்காத சமுதாயம் உருவாகத் தொடங்கிவிட்டது.

நாளாந்தம் பிரதான மற்றும் சிறு வீதிகளில் ஏற்படுகின்ற விபத்துக்களுக்கு 100 வீதம் மூலகாரணமாகத் திகழ்வது சமாந்தரமாக கைபிடித்தவாறு ஓடுபவர்களாலே ஆகும். இவ்வாறான செயற்பாட்டைக் காக்கிச் சட்டை அணிந்த, சட்டவிதிகளை ஒழுங்கு படுத்துபவர்கள்கூட தடுத்து நிறுத்தாதிருப்பதே மிகவும் வருந்தத்தக்க விடயமாகும்.

அவர்களின் கடமை 'ரக்ஸ்', இன்சூரன்ஸ், 'லைசன்ஸ்' இல்லாதவர்களை மட்டும் தேடிப் பிடித்து பணம் பறித்தலாகும்.

எம்மை நாமே திருத்திக்கொள்வோமானால், எம்மீது எவரும் அதிகாரம் செலுத்த வேண்டிய தேவை ஏற்படாது.

□□□

### நஜாவ் நகரத்தின் அருகிலுள்ள

# குபா பள்ளிவாசல் மீது நடத்தப்பட்ட மோட்டார் தாக்குதலில் 25 பேர் பலி!



நஜாவ் நகரத்துக்கு அருகாமையில் உள்ள குபா நகரப் பள்ளிவாசல் மீது மேற்கொள்ளப்பட்ட மோட்டார் எறிகணைத் தாக்குதலில் 25 பொது மக்கள் கொல்லப்பட்டதுடன், பலடசின் கணக்கானோர் காயமடைந்தனர்.

நஜாவ் நகரத்தில் தங்கியிருக்கும் தீவிரவாதிகளுடன் சமாதான ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதற்காக நஜாவ் நகரத்துக்குச் செல்வதற்கு ஆயத்தமாக குபா நகரப் பள்ளிவாசலில் மதத்தலைவர் அல் சிஸ்ரானி தனது ஆதரவாளர்களுடன் தங்கியிருந்தபோதே மோட்டார் எறிகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

ஏவப்பட்ட மோட்டார் குண்டுகளில் முதலாவது குண்டு பள்ளிவாசல் மீது வீழ்ந்து வெடித்ததாகவும், ஏனைய இரண்டு மோட்டார் எறிகணைகளும் பள்ளிவாசலின் வாசலில் வீழ்ந்து வெடித்ததாகவும் நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இந்தத்தாக்குதலில் காயமடைந்தவர்கள் இரத்தவெள்ளத்தில் வீழ்ந்து கிடந்ததைத் தொலைக் காட்சி ஒன்று தனது ஒளிபரப்பிற் காட்டியுள்ளது.

இதேசமயம் - குபா நரகத்தில் இருந்து நஜாவ் நகரத்துக்கு பாதயாத்திரையாகச் சென்றவர்கள் மீது துப்பாக்கிதாரிகள்மேற்கொண்ட பிறிதொரு தாக்குதலில் மூன்று பேர் உயிரிழந்தனர்.

கடந்த 24 மணி நேரத்துக்குள் குபா நகரத்துக்குள் எவ்வித தாக்குதலையும் தாம் மேற்கொள்ளவில்லையென அமெரிக்கா தலைமையிலான கூட்டணிப் படைகள் தெரிவித்துள்ள நிலையில்- இந்த இரு தாக்குதல்களும் யாரால் மேற்கொள்ளப்பட்டது என்பது தொடர்பான விடயங்கள் வெளிவரவில்லை.

நஜாவ் நகரத்திலுள்ள தீவிரவாதிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்குச் செல்ல ஆயத்தமாக நேற்று முன்தினம் நாடு திரும்பிய ஷியா முஸ்லிம் மதத்தலைவர் ஆயதுல்லா அலி - அல் சிஸ்ரானியும் அவரது ஆயிரக்கணக்கான ஆதரவாளர்கள் கூடியிருந்தவேளையில் - இந்தத்தாக்குதல் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த ஷியா மதத்தலைவர் அலி - அல் சிஸ்ரானி நஜாவ் நகரத்தில் இடம் பெற்றுவரும் மோதல்கள் முடிவடையும்வரை தான் நஜாவ் நகரத்தில் தங்கியிருக்கப் போவதாகவும் தெரிவித்தார்.

மேலும், குபா நகரப் பள்ளிவாசல் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலானது சதார் ஆதரவுப் படைகளுடன் பேச்சுக்களை நடத்துவதற்காகத் தாம் மேற்கொள்ளவிருக்கும் பயணம் எவ்விதத்திலும் இடை நிறுத்தப்படாது எனவும் தெரிவித்தார்.

இதேசமயம் - ஷியா மதத்தலைவர் சிஸ்ரானியின் வருகையினை முன்னிட்டு நஜாவ் நகர ஆளுநர் 24 மணிநேர யுத்த நிறுத்தத்தை அறிவித்துள்ளார்.

மேலும், நஜாவ் மற்றும் குபா நகரங்களுக்கு ஆயுதங்களை எடுத்துச் செல்வது தடைசெய்யப்பட்டுள்ளதுடன், இந்தப்பகுதியில் உள்ள வெளிநாட்டுத்துருப்பினர்கள் வாபஸ் பெறப்பட்டு ஈராக்கியப் பொலிஸார் கடமைகளுக்காக நிறுத்தப்பட்டுள்ளனர்.




# அபுகிறாப் சிறைக்கைதிகள் துன்புறுத்தலில் அமெரிக்க புலனாய்வாளருக்கும் தொடர்பு!



ஈராக் அபுகிறாப் சிறைச்சாலையில் மேற்கொள்ளப்பட்ட சிறைக்கைதிகள் துன்புறுத்தலுடன் அமெரிக்க இராணுவப் புலனாய்வுப் பிரிவினைச் சேர்ந்த 27 இராணுவத்தினர் சம்பந்தப்பட்டுள்ளதாக அமெரிக்க இராணுவத்தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

அபுகிறாப் சிறைச்சாலையில் மேற்கொள்ளப்பட்ட கைதிகள் துன்புறுத்தலுடன் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுவரும் அமெரிக்க இராணுவ விசாரணைக்குழுவின் தலைவர் ஜெனரல் ஜோர்ச் பேய் தலைமையிலான குழுவினரே அபுகிறாப் சிறைக் கைதிகள் துன்புறுத்தலுக்கும் அமெரிக்க இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கும் தொடர்பு இருப்பதனைக் கண்டுபிடித்துள்ளனர்.

இந்தக் கைதிகள் துன்புறுத்தல் தொடர்பாக இவர்களது மேலதிகாரிகளுக்குத் தெரிந்துள்ளபோதும், அவர்கள் இந்த விடயங்களை வெளியில் கூறவில்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், அபுகிறாப் சிறைக்கைதிகள் மிருகத்தனமாகவும், மனநிலை பாதிப்படையும் வகையிலும் நடத்தப்பட்டமையை ஜோர்ச் பேய் தலைமையிலான குழுவினது அறிக்கை உறுதிப்படுத்தியுள்ளளது.

இதேவேளை இந்தக் கைதிகள் துன்புறுத்தல் தொடர்பாக, அமெரிக்கப் பென்ரகன் அதிகாரிகள் தலைமையிலான குழுவொன்றும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது.

### சூடானின் டர்பூர் அகதிகளுக்கு

# உதவிப்பணிகளை மேற்கொள்வதில் புதிய சிக்கல் தோன்றியுள்ளதாகத் தகவல்



சூடானின் டர்பூர் பிரதேசத்தில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள பகுதிக்கு ஆயுதம் தரித்தவர்கள் செல்லக்கூடாதென விதிக்கப்பட்ட கட்டுப்பாட்டால், அங்கு மனிதாபிமான நிவாரணப் பணிகளை மேற்கொள்ள முடியாமல் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - சூடான் அரசுடன் கிளர்ச்சிவாதிகள் நடத்திவருகின்ற பேச்சுவார்த்தைகளில் திட்டமிட்டபடியான நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதியான அகதிகள் தங்கியுள்ள பிரதேசத்துக்கு ஆயுதத்துடன் எவரும் செல்லக்கூடாதென திட்டத்தை கிளர்ச்சிவாதிகள் நிராகரித்துள்ளனர்.

ஆபிரிக்க யூனியனின் உறுப்பு நாடான நைஜீரியாவின் அனுசரணையுடன் சூடான் அரசாங்கத்துக்கும், கிளர்ர்ச்சிவாதிகளுக்கும் இடையே நடைபெற்று வருகின்ற பேச்சுவார்த்தையை ஐ.நா.வரவேற்றுள்ளது. ஆனாலும்,ஆயுதக்குழுக்களிடமிருந்து ஆயுதங்களைக் களைவதில் சூடான் அரசாங்கம் இன்னும் அதிகம் செயற்பட வேண்டுமென ஐ.நா எச்சரித்துள்ளது.

சூடானுக்கு விஜயம் செய்த பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் ஜக்சிரோவும் ஐ.நாவின் கருத்தையே தெரிவித்தார். அத்துடன், இடம்பெயர்ந்து அகதிமுகாமில் தங்கியுள்ள மக்கள் தமது சொந்த வீடுகளுக்குச் செல்வதற்கான பாதுகாப்பைச் சூடான அரசு உறுதிப்படுத்த வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

பன்னிரண்டு பிரதேசங்கள் பொலிஸாரினால் பாதுகாப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக சூடான் அரசாங்கம் அறிவித்துள்ளது.

சூடான் அரசாங்கத்துக்கும், கிளர்ச்சிவாதிகளுக்குமிடையில் மூன்றாவது நாளாக நேற்று முன்தினமும் பேச்சு வார்த்தை இடம்பெற்றபோதும், டர்பூர் பிர்தேசத்துக்கான அரசியற்தீர்வு தொடர்பாக எவ்வித முடிவும் எட்டப்படவில்லையென பி.பி.ஸி செய்தியாளர் தெரிவித்தார்.

ஆனாலும், இரு பகுதியினருக்குமிடையில் நடத்தப்படும் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக நிகழ்ச்சி நிரலொன்று தயாரிக்கப்பட்டுள்ளதாக நைஜீரிய ஜனாதிபதி ஒலுசேஜன் ஒபசான்ஜோ தெரிவித்தார்.

இவர் இதனைத் தெரிவித்து ஒரு மணி நேரத்துக்குப் பின்னர், இந்த நிகழ்ச்சி நிரலில் தெரிவிக்கப்பட்ட சில விடயங்கள் தம்மைக் கட்டுப்படுத்துவதாக கிளர்ச்சிவாதிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இதேவேளை - நேற்றுமுன்தினம் நடந்த இரு பகுதியினருக்கும் இடையிலான கலந்துரையாடலில், இந்த நிகழ்ச்சி நிரல் தொடர்பாக மேலும் கலந்து ரையாடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

டர்பூர் பிரதேசத்தில் உள்ள மக்கள் எவ்வாறு உள்ளனர், அவர்கள் எப்படி உயிரிழக்கின்றனர் என்பது தொடர்பாக கடந்த செவ்வாய் கூடிய ஐ.நா பாதுகாப்புச்சபை விரிவாக ஆராய்ந்துள்ளது.

அடுத்தவாரம் மீளவும் ஐ.நாவின் பாதுகாப்புச்சபை கூடும்வேளை, சூடானுக்கு பொருளாதாரத்தடை விதிப்பது தொடர்பாக ஆராயப்படவுள்ளது.

இதேவேளை - மிகப்பெரிய நிவாரண உதவிப்பொருள் வழங்கும் நடவடிக்கை ஒன்றை டர்பூர் பிரதேசத்துக்கு விமானம் மூலம் ஆரம்பிக்க உள்ளதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்தது.

மிகப்பெரிய சரக்கு விமானம் மூலம் வாகனங்கள் மற்றும் உதவிப் பணிகள் கொண்டு செல்லப்படவுள்ளதாகவும், இந்த நடவடிக்கை ஈராக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் உதவிப்பணிகளுக்கு அடுத்தபடியான மிகப்பெரிய நடவடிக்கை எனவும் செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்தது.


M.G.M உற்பத்திப் பொருட்களின்
ஏக விநியோகஸ்தர்களான
முகமது கிறைண்டிங் மில்ஸ்
அன் ஸ்ரோர்ஸ்
இல.777, கே.கே.எஸ். வீதியில் மீண்டும்
தங்களுடைய வியாபாரத்தை ஆரம்பித்து விட்டார்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றார்கள்

ஆட்டா மா, வறுத்த சிவப்பு அரிசி மா, வறுத்த வெள்ளை அரிசி மா, வெள்ளை அரிசி மா, கடலை மா, குரக்கன் மா, உழுந்து மா, கோதுமை குறுணல்

ரோஸ் ரசம், நன்னாரி ரசம், நெல்லி ரசம், கிறேப் சர்பத், பஷன் ரசம், மிக்ஸ் புரூட் ரசம், அன்னாசி ரசம், தேசிக்காய் ரசம்

வினாகிரி, அயடீன் உப்பு, ஐசிங் சீனி, பேக்கிங் பவுடர், அப்பச்சோடா, கொக்கோ பவுடர், சிற்றிக் அசிட்.

நெய், நல்லெண்ணெய், வேப்பெண்ணெய், விளக்கெண்ணெய், ஒலிவ்வெண்ணெய்

வெள்ளைப் பிட்டுக் கலவை, சிவப்புப் பிட்டுக் கலவை, திடீர் தோசைக் கலவை, திடீர் அப்பக் கல்வை

தேசிக்காய் ஊறுகாய், வெள்ளைப் படு ஊறுகாய், மோர் மிளகாய்

சீயாக்காய் பவுடர்

பிளிச்சிங் பவுடர்

ஆகியவற்றை
மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்
M.G.M. T.P :- 0777 741195
0777 741295
(C/2961)



ராஜா யாழ்ப்பாணம்.
இன்று முதல்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
விஜய், சோனியா அகர்வால், வடிவேல்நடித்த
மதுர





முக்கிய அறிவித்தல்
காட்சிநேரம் மாற்றப்பட்டுள்ளது
10.00, 2.00, 6.00, 9.00 (பு.நே)
ரிக்கெட் முற்பதிவு செய்துகொள்ளலாம்
(சி-2725)

நாகம்ஸ்
பிரசாந், மீனா, ஜோதிகா நடித்த






தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

நிரஞ்சனாஸ் சங்கானை
ரஜனி, சௌந்தர்யா, சிவாஜி, நடித்த
படையப்பா
காட்சிநேரம்:11.00. 2.45. 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
Strike Force
(சி-2723)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 02 - 09 - 1938

இறப்பு 28 - 07 - 2004

### சுவக்கீன் யோசப்

"தந்தை சொல் மிக்க மந்திரமில்லை"
இந்த வார்த்தைகள் எமக்கினிச் செல்லாது
என்று வைத்து எம்மைப் பிரித்தீர்
உங்கள் ஆத்மா சாந்தியடையட்டும்.

மரணச் சடங்கு அன்று எமது துக்கத்தில் பங்கெடுத்த அனைவரையும் நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

நாரந்தனை மத்தி,
ஊர்காவற்துறை
(சி-3008)

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பெறாமக்கள்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## வலி. வடக்கில் மீளக் குடியமர
# அனுமதி வழங்குமாறு கோரி மேலும் பல மனுக்கள் தாக்கல்!

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கின் அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் தம்மை மீளக் குடியமர அனுமதிக்க வேண்டும் எனக் கோரி, மேலும் பல மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட வுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை சட்டத் தரணி சி.கணேசலிங்கம் மேற்கொண்டு வருவதாகத் தெரியவருகிறது.

பன்னாலைப் பகுதியில் தம்மை மீளக் குடியமர அனுமதிக்கவேண்டும் எனக்கோரி ஏற்கனவே ஒருவர் தாக்கல் செய்த மனுவை ஏற்றுக் கொண்ட உயர்நீதிமன்றம், அவர் மீளக் குடியமர எவ்வித ஆட்சேப னையும் இல்லை என்று தீர்ப்பளித்தி ருந்தது.

எனினும் அவருக்கு வழங்கப் பட்ட தீர்ப்பு அந்தப் பகுதியில் மீளக் குடியமர இருக்கும் ஏனையோருக் கும் பொருந்தாது எனவும் அது தெரி வித்திருந்தது.

இந்த நிலையில் வலிகாமம் வடக்கிலிருந்து இடம்பெயர்ந்துள்ள சுமார் 20 ஆயிரம் குடும்பங்களும் தனித் தனியாக உயர் நீதிமன்றத் தில் மனுக்களைத் தாக்கல் செய்ய முடிவெடுத்துள்ளன.

இதனடிப்படையில் முதல்கட்ட மனுக்கள் விரைவில் தாக்கல் செய் யப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# ரெலிகொம் இணையசேவை மீண்டும் வழமைக்கு திரும்பியது

(கொழும்பு)

கடந்த சில தினங்களாகப் பாதிக்கப்பட்டிருந்த ரெலிக்கொம் நிறுவனத் தின் சர்வதேச இணையச் சேவை நேற்றுக்காலை முதல் வழமைக்குத் திரும்பியுள்ளது.

கொழும்புத் துறைமுகத்தை அண்டிய கடற்பகுதியில் ரெலிக்கொம் நிறு வனத்தின் சர்வதேச இணையச் சேவைக் கேபிள் ஒன்று சேதமடைந்ததால் கடந்தவாரம் முதல் ரெலிக்கொம் நிறுவனத்தின் சர்வதேச இணைய சேவை பாதிக்கப்பட்டிருந்தது.

தற்பொழுது செய்மதித் தொழிநுட்பம், மற்றும் வேறு சேவைகளைப் பயன்படுத்தியே இணையச் சேவையை முழுமையாக வழங்கிவருவதாகவும், இணையச்சேவையை முழுமையாக வழங்கிய பின்னரே பாதிக்கப்பட்ட கேபிள் கள் திருத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## யாழ்.கொட்டடிப் பகுதியில்
# பாழடைந்த வீட்டில் கைத்துப்பாக்கி மீட்பு

யாழ்.கொட்டடிப் பகுதியில் பாழ டைந்த வீடொன்றிலிருந்து கைத்துப் பாக்கி ஒன்றையும் கத்தி ஒன்றை யும் பொலிஸார் மீட்டெடுத்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன் தினம் இடம்பெற்றது. யாழ்.கொட்டடி மணல் திட்டி என்ற இடத்திலுள்ள பாழடைந்த வீடு ஒன்றில் கைத்துப் பாக்கி ஒன்று இருப்பதாக பொலி ஸாருக்குக் கிடைத்த தகவலைய டுத்து - அவ்விடத்துக்குச் சென்ற பொலிஸார் பிறவுனில் ரக கைத் துப் பாக்கி ஒன்றினையும் கத்தி ஒன்றி னையும் கைப்பற்றினர்.

இந்த துப்பாக்கி இயங்கக்கூடிய நிலையில் இருந்ததாக தெரிவிக்கப் படுகின்றது.

கைப்பற்றிய ஆயுதங்களை பொலி ஸார் யாழ்.நீதிமன்றில் நேற்று ஒப்படைத்தபோது, மேற்படி ஆயுதங் களை இரசாயனப் பகுப்பாய்வுக்கு அனுப்பிவைக்குமாறு நீதிவான் உத் தரவிட்டார். இது தொடர்பாக இது வரை சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை என்பதும் குறிப் பிடத்தக்கது.

## உயர் தரத்தில் சித்தியடைந்த
# முப்பதாயிரம் பேரை ஆட்சேர்க்க விரைவில் விண்ணப்பம் கோரப்படும்

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சையில் சித்தியடைந்த 30 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்காக விரைவில் விண் ணப்பங்கள் கோரப்படவிருப்பதாக அரசாங்கம் நேற்று அறிவித்தது.

இந்த அறிவித்தலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அடுத்த சில மாதங்களில் மக்க ளுக்கு நிவாரணம் வழங்கும் பல நிகழ்ச்சித் திட்டங்களை அரசாங்கம் நடைமுறைப்படுத்தவுள்ளது.

1 லட்சத்து 10 ஆயிரம் சமுர்த்தி உடமையாளருக்கு சுயவேலை வாய்ப்பு வழங்கும் திட்டம் விரைவில் செயற் படுத்தப்படும்.

நாட்டின் கிராமியப் பகுதிகளை அபிவிருத்தி செய்வதற்கான மற் றொரு திட்டம் நடைமுறைக்கு வர விருக்கிறது.

காலி, அம்பாந்தோட்டை ஆகிய துறைமுகங்களின் நிர்மாண வேலை கள் டிசம்பர் மாதம் ஆரம்பமாகும். மேலும் 10 லட்சம் சந்தாதாரர்களுக்கு தொலைபேசி வசதி செய்து கொடுக் கப்படும்.

கல்விப் பொதுத் தராதரப் பத் திர உயர்தர பரீட்சையில் சித்திய டைந்த 30 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்குவதற்கான விண் ணப்பங்கள் கோரப்படும் என்று தெரி விக்கப்பட்டுள்ளது.

## பேசாலை கடற்கரையில் சடலம் கரையொதுங்கியது!

(மன்னார்)

மன்னார் பேசாலையில் சடலம் ஒன்று நேற்றுக் கரையொதுங்கி யது.

பேசாலையின் ஓலைத்தொடு வாய் பகுதியில் கரையொதுங்கிய இந்தச் சடலம் இடம்பெயர்ந்து தமிழ் நாட்டில் தங்கியிருந்து இலங்கை திரும்பியவேளை உயிரிழந்தவருடைய தாக இருக்கலாமென கருதப்படுகிறது.

## தீ விபத்தில் கடைகள் நாசம்!

(வடமராட்சி)

வடமராட்சி - உடுப்பிட்டி சந்தைப்பகுதியில் அமைந்த கடைத் தொகுதியில் நேற்றிரவு பற்றிய தீயினால் மூன்று கடைகள் முற்றாக எரிந்து நாசமாகின.

நேற்றிரவு சுமார் 8.30 மணியளவில் இடம்பெற்ற இந்த தீ விபத்தில் கோழித்தீவன விற்பனை நிலையம், பிளாஸ்ரிக் விற்பனை நிலையம் மற் றும் கூல்பார் ஆகியனவே எரிந்து சாம்பலானவையாகும்.

இந்த வர்த்தக நிலையங்களில் பல லட்சம் ரூபா பெறுதியான பொருட் கள் இருந்ததாகவும் இந்த தீ விபத்தினால் அவையனைத்தும் எரிந்து சாம்பலானதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தீ விபத்து சம்பவம் மின்சார ஒழுக்கினால் ஏற்பட்டதா? அல் லது திட்டமிட்ட சதி வேலையா? என்பது உடனடியாகத் தெரியவரவில்லை.

## நிமால் கொலைச்...

கோரியிருப்பது தொடர்பாக பிரித்தா னிய உள்துறை அமைச்சின் கவ னத்திற்கு கொண்டுவரப்பட்டிருக் கிறது.

ஊடகவியலாளர் நிமலராஜனை படுகொலை செய்ததுடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனா திராஜா, ரவிராஜ் ஆகியோரை தாக் கியதாகவும் நெப்போலியன் மீது குற்றம் சுமத்தப்படடிருந்தது.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர் பாக நீதிமன்றத்தில் விசாரணை களை எதிர்கொள்ளும் நிலையி லேயே நெப்போலியன் - ரோமன் குமார் பற்றிக் டி சில்வா என்பவரது கடவுச்சீட்டைப் பயன்படுத்தி கடந்த ஜூன் மாதம் 3 ஆம் திகதி பிரித் தானியாவுக்குள் நுழைந்து அரசியல் அடைக்கலம் கோரியிருப்பதாக அந் நாட்டு உள்துறை பணிமனையிடம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வவுனியா நீதிமன்றத்தால் பிணையில் விடுதலை செய்யப்பட்டி ருந்த நெப்போலியன் தற்போது போவர் அகதிகள் தடுப்பு முகாமில் வைக் கப்பட்டிருக்கிறார் என்றும் அவரை உடனடியாக நாடு கடத்தி அவர் மீதான நீதி விசாரணையை தொடரு வதற்கு பிரித்தானிய அரசு முன் வரவேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## பக்கச்சார்புடன்....

கண்டிக்கவேண்டும்.

படுகொலைகள் இடம்பெறுவது சமாதானப் பேச்சுக்களுக்கு நெருக் கடியை ஏற்படுத்தியுள்ளது.

இப்படுகொலை இடம்பெறுவது அரசினதும், சர்வதேசத்தினதும் பொறுமையைச் சோதிக்கும் நடவ டிக்கைகளாகும் எனவும் தெரிவித்தார்.

## புலிகள்....

காணிப்புக்குழு இரு தரப்பினரை யும் தனித்தனியே சந்திக்கவுள்ள தாகத் தெரியவருகிறது.

இருந்த போதிலும் இந்த சந் திப்புக்கான திகதிகள் எதுவும் இது வரை அறிவிக்கப்படவில்லை என்ப தும் குறிப்பிடத்தக்கது.

## புலிகளின்...

பட்ட சகல தரப்பினரும் அர்ப்பணிப் புடன் செயற்படவேண்டும் என்றும் அமைச்சர் ரத்னசிறி விக்கிரம நாயக்க மேலும் தெரிவித்தார்.

## பொதுமக்கள்....

எனவும் - மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் மேலும் தெரிவித் தார்.

யாழ்.குடாநாட்டின் இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் பதவியேற்றபின்னர் அரச திணைக்கள அதிகாரிகளை முதன் முறையாக சந்தித்தது குறிப் பிடத்தக்கது.

## போர் நிறுத்த....

நடமாட முடிகின்றது.

நாளுக்கு நாள் வாழ்க்கைச் செலவு அதிகரித்துச் செல்கின்றது. இந்த நிலையை மறைப்பதற்காக அரசாங்கம் வார்த்தைகளால் விளை யாடுகிறது.

மக்களுக்கு வழங்கிய எந்தவொரு வாக்குறுதியும் நிறைவேற்றப்பட வில்லை. நாட்டின் சரித்திரத்தில் அதிகளவிலான விலைவாசி இந்த அரசாங்கத்தில் தான் உள்ளது.

பஸ் கட்டணங்கள் அடுத்த வாரம் 8 வீதத்தால் உயருகிறது. மின்சாரக்கட்டணமும் 6 வீதத்தால் அதிகரிக்கவுள்ளது. சமயல் வாயு, டீசல், பெற்றோல் விலைகளும் அதி கரிக்கவுள்ளதென தகவல் கிடைத் திருப்பதாக அமைச்சர் மேலும் கூறி னார்.

## இரண்டு சிறுவர்கள் பெற்றோரிடம் ஒப்படைப்பு

(வவுனியா)

வவுனியாவில் விடுதலைப் புலி கள் அமைப்பில் இணையச்சென்ற 18 வயதிற்குட்பட்ட இரண்டு சிறுவர் கள் அவர்களது பெற்றேர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்த கையளிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் வவுனியாவிலுள்ள விடு தலைப் புலிகளின் அரசியற்துறை பணிமனையில் இடம்பெற்றது.

குறித்த இரண்டு சிறுவர்களை யும் விடுதலைப்புலிகளின் வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பா ளர் ஞானவேல், யுனிசெப் பிரதிநிதி கள் முன்னிலையில் சிறுவர்களது பெற் றோர்களிடம் ஒப்படைத்தார். (03)



## ஒலிம்பிக் பதக்க விபரம்

| | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐக்கிய அமெரிக்கா | 25 | 29 | 23 | 77 |
| சீனா | 24 | 16 | 12 | 52 |
| அவுஸ்ரேலியா | 16 | 11 | 15 | 42 |
| ரஷ்யா | 15 | 19 | 22 | 56 |
| ஜப்பான் | 15 | 9 | 10 | 34 |
| பிரான்ஸ் | 10 | 07 | 09 | 26 |
| ஜேர்மனி | 09 | 11 | 13 | 33 |
| இத்தாலி | 09 | 06 | 08 | 23 |
| ருமேனியா | 08 | 05 | 04 | 17 |
| உக்ரெய்ன் | 08 | 04 | 07 | 19 |
| தென்கொரியா | 07 | 10 | 05 | 22 |
| பிரிட்டன் | 07 | 08 | 10 | 25 |
| கிறீஸ் | 06 | 04 | 03 | 13 |
| நெதர்லாந்து | 04 | 07 | 08 | 19 |
| ஹங்கேரி | 04 | 06 | 01 | 11 |
| சுவீடன் | 03 | 01 | 02 | 06 |
| துருக்கி | 03 | 01 | 02 | 06 |
| நியூஸிலாந்து | 03 | 01 | 00 | 04 |
| ஸ்பெயின் | 02 | 09 | 04 | 15 |
| கியூபா | 02 | 04 | 07 | 13 |
| கனடா | 02 | 04 | 01 | 07 |
| பெலாரஸ்ட் | 02 | 03 | 07 | 12 |
| போலந்து | 02 | 02 | 04 | 08 |
| ஸ்லோவாக்கியா | 02 | 02 | 01 | 05 |
| ஜோர்ஜியா | 02 | 02 | 00 | 04 |
| பல்கேரியா | 02 | 01 | 07 | 10 |
| பிறேசில் | 02 | 01 | 02 | 05 |
| எதியோப்பியா | 02 | 01 | 01 | 04 |
| தாய்வான் | 02 | 01 | 01 | 04 |
| தாய்லாந்து | 02 | 00 | 03 | 05 |
| சிலி | 02 | 00 | 01 | 03 |
| நோர்வே | 02 | 00 | 00 | 02 |

## மரண அறிவித்தல்

### திருமதி சீனிவாசகம் வள்ளியம்மை

யாழ்.பெருமாள் கோவிலடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையாற்றி ஓய்வு பெற்றவருமான திருமதி. சீனிவாசகம் வள்ளியம்மை 25.08.2004 இந்தியாவில் காலமானார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்கப்படுகிறார்கள்.

*தகவல்:*
**பிள்ளைகள்**

*தொடர்புகளுக்கு:*
T.Vasumathy - 309 5544 (India)
S.Balachanthiran 06101 - 500747 (Germany)
V.Kirishnamathy 022 - 3419906 (Swis)

## நமது ஈழநாடு விளம்பரக் கட்டணங்கள்

| அளவு | கறுப்பு/வெள்ளை | கலர் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூபா 10,000 | ரூபா 22,000 |
| அரைப்பக்கம் | ரூபா 5,000 | ரூபா 12,000 |
| கொலம் செ.மீ Colum cm | ரூபா 50 | ரூபா 120 |

## மரண அறிவித்தல்

7cm x 2 கொலம் (colum) அளவுடைய மரண அறிவித்தல் விளம்பரங்கள் இலவசமாகவே பிரசுரிக்க ஏற்றுக்கொள்ளப்படும். அதற்கு மேற்பட்ட அளவுக்கு மட்டுமே கட்டணம் அறவிடப்படும்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 27.08.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேர்த்திருவிழா சிறப்பிதழ்

## தேசநலன் காத்தருளும் துர்க்கா தேவி தெல்லிப்பழையில் தேரேறி வருகிறாள்

அகில மாதாவாக கலியுகத்தின் கண்கண்ட தெய்வமாய் கருணைக்கு ஓர் உருவாய் வல்வினையை வேரறுக்க வல்லவளாய், வாழ்வுக்கு மாரியாய் வாழவரம் தந்து கடைத் தேறக்கைகொடுத்து, இகபர அகம் அருளி இப்புவியை அருளாட்சி செய்பவள் அன்னை பராசக்தி, மூலப் பொருளுக்கும் மூலமாய் காலத்தை வென்றவளாய், பின்னைப் புதுமையாய், முக்கண்ணர்க்கு நாயகியாய், மூன்றுலகம் காப்பவளாய் இப்பார்முழுதும், இப்பாரின் மாந்தர் உள்ள மெங்கும் அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமாய், ஆனந்தமாய், எழிலாய் நிறைந்த அந்த மகாசக்தி பாரெல்லாம் பரிமளிக்க. புகழ் மணக்க பெயர் விளங்கக் கோயில் கொண்டு அண்டினோர்க்கு அருள் வழங்க, வரம் அளிக்க பிணி தீர்க்க, கருமவனை போக்க தேவி தன்னை வெளிப்படுத்தி அருளாட்சி செய்து வரும் திருத்தலங்கள் பல உண்டு. சுந்தரி, வானந்தி, பார்ப்பனி ஆக அம்பிகை வானத்தில் சஞ்சரித்து அருள் பாலிக்கிறாள.

மதுரையில் மீனாட்சியாக, காசியில் விசாலாட்சியாக, காஞ்சியில் காமாட்சியாக, திருவேற்காட்டில் கருமாரி யாக அமர்ந்து பக்தர்களுக்கு அருள்புரிகின்றாள்.

சிவபூமியாக விளங்குகின்ற இலங்கையிலும் சக்தி வழிபாடும், சக்தியின் ஆலயங்களும் பரந்திருக்கக் காண்கிறோம். நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலயம் அறுபத்து நான்கு சக்தி பீடங்களில் ஒன்றான புவனேஸ் வரி பீடம் என அழைக்கப்படுகின்றது. வட இலங்கை யில் தெல்லிப்பழையில் துர்க்காதேவி ஆலயம், நல்லூ ரில் அமைந்துள்ள வீராமாகாளியம்மன் ஆலயம், மட்டு வில் பன்றித்தலைச்சி கண்ணகியம்மன் ஆலயம், வற்றாப்பழை கண்ணகியம்மன் ஆலயம், திருகோண மலை நகரக் காளிகோயில், மாத்தளை முத்துமாரி அம்மன் கோயில் என்பன பல்லாயிரக்கணக்கான அடியார்களை ஈர்த்து அருள் வழங்கும் திவ்விய திருத்தலங்களாக விளங்குகின்றன.

இத்தகு வரலாற்றுப் பெருமைகளோடு ஈழநாட்டில் வடபுலத்தில் இன்று துர்க்காதேவி ஆலயத்துக்கு வேறெந்த ஆலயத்துக்குமில்லாத தனித்துவமான சிறப்புக் காணப்படுவதன் முதன்மையான காரணம் அதன் நேர்மையான நிர்வாகத்திறனும், தன்னிகரில்லாத் தலைமைத்துவ மாண்புமாம். சோழர்கால ஆலயம் போலப் பன்முகப்பட்ட பணிகளுடன் ஒரு சமஸ்தானம் போல விளங்கும் துர்க்கா தேவியின் ஆலயத்தை மிகவும்



சிறப்பான முறையில் பரிபாலித்து வரும் அம்மையாரின் தலைமைத்துவச் சிறப்புப் போற்றுதற்குரியது. தேவஸ் தானத்திற்குரிய அசைவுறுச்சொத்து, அசையாச் சொத்துக்களின் பரிபாலனக் கருமங்கள், பூசை நியமங்கள், அந்தணர்பணி, ஊழியர்பணி, மகளிர் இல்லம் மற்றும் பல ஆலயம் சார்ந்த நிறுவனங்கள் யாவற்றையும் தானே முன்னின்று கவனித்து வழிநடத்தும் மாண்பு வியத்தற்குரியது. தேவஸ்தானத்தின் பணிகளில் பெரியவை, சிறியவை என்று பாராமல் எல்லாவற்றிலும் நேரடியான பங்கு வகித்தல் அன்னை சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் தனிச் சிறப்பாகும்.

இத்தகு தலைவரைக் கொண்ட திருப்பதி நெல்லிநகர் துர்க்கையம்மன் தேவஸ்தானம் இன்றைய தினம் இலட்சோப இலட்சம் மக்களை தன்னகத்தே அரவ ணைத்து, அருள் சொரிய தாய் தேரேறி வருகின்றாள். போரோய வேண்டும், மண்ணில் புதுவாழ்வு திரும்ப வேண்டும், சைவமும் தமிழும் தழைத்தோங்க வேண்டும், அறம் பெருக வேண்டும், அன்புப்பணி விரியவேண்டும் என்றெல்லாம் அடியவர்கள் இன்று தேரேறி வரும் தேவி யிடம் விண்ணப்பம் செய்து கொண்டிருக்கின்றார்கள்.

இந்த நன்னாலிலே துர்க்கையம்மனை தொழுதால் எம்மைத் தொடரும் இடர் யாவும் விலகும், சலக ஐஸ வரியங்களும் பெருகும் அது மட்டுமல்ல நினைத்ததை யெல்லாம் தரக்கூடிய மகா சக்தியாக விளங்குபவள் துர்க்கா தேவி. அவளைச் சரண்புகுந்து அருள் நலம் பெற்றோர் அனேகர். அகில புவனங்களுக்கும் ஆதி சக்தியாக விளங்கிய அன்னை பராசக்தியின் அருட் பெருங் கருணை வடிவினளாக அம்பிகை பல ரூபங்க ளாக அமைந்த உலகத்தில் வாழும் சகல ஆன்மாக் களையும் காத்தருளும் வீரிய சக்தியே ஸ்ரீ துர்க்கா பரமேஸ்வரி.

துர்க்கா தேவி விஷ்ணுவின் அம்சம் பொருந்திய வடிவினள். அவள் இன்று தெல்லிப்பழையில் தேரேறி வருகிறாள். தேசநலன் காக்க எழுகிறாள். எல்லோரும் வாருங்கள் அவள் ஏறி வருகின்ற திருத்தேரின் திரு வடத்தினைப் பற்றி இழுத்து வாழ்வு கேட்போம். வாளேந்திவரும் சூலியிடம் தாளாத கீர்த்திகளை தரவேண்டும் எனக் கேட்போம். மூர்த்தி, தீர்த்தம், விருட்சம் ஆகிய சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் புராதன நகுலேஸ்வரத்துக்கும், புகழ்மிக்க மாவிட்டபுரத்துக்கும் அண்மையிலுள்ள தெல்லிப்பழையில் அமைந்துள்ள அருள்மிகு துர்க்காதேவி ஆலயத்தில் நடைபெறும் தேர்த்திருவிழா இந்த நாட்டின் இந்திர விழாபோல காட்சி தருகின்றது. தேவியின் திருவருள் எங்கும் பொழிவதாக.

மதுரகவி. காரை எம்.பி. அருளானந்தன்


பாடசாலை அதிபர்களே! மாணவ மாணவிகளே!

உங்களுக்கோர் நற்செய்தி. பாலர் பாடசாலை தொடக்கம் பல்கலைக்கழக மாணவர் வரையான பாடப்புத்தகங்கள் மற்றும் K.T அம்பிகைபாகனின் புலமைப்பரிசில் புத்தகம் 20% கழிவுடன் மற்றும் பாடசாலை தர உள்ளீட்டு மூலப்பொருட்கள் அலுவலக அலுமாரி, அலுவலக மேசை, நூலக அலுமாரி மற்றும் அழிபொருட்கள், பேப்பர் வகைகள் ஆய்வுகூட உபகரணங்கள், இரசாயன பொருட்கள், நுணுக்குக்காட்டி, தொலைநோக்கி பாசிச்சாயத்தாள், வடிதாள் மற்றும் விளையாட்டு உபகரணங்களான மனித உடல் பாகங்கள் (பிளாஸ்ரிக்) பரிசோதனைக் குழாய்கள், அளவுச்சாடிகள் மற்றும் புறஜெக்ரர்கள், அதற்கான திரை, றோணியோ இயந்திரம் கல்வி தொடர்பான விளையாட்டு பொருட்கள் சங்கீத வாத்தியக்கருவிகள் இவை அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

குறிப்பு: பாடசாலைகளுக்கு இலவச விநியோகம் செய்யப்படும்

212, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். (சி-2992) T.P: 222 5542



யாழ் நகரில்

பாடசாலை மாணவர்களுக்கும், அலுவலக உத்தியோகஸ்தர்களுக்கும் ஏற்ற

SILVER SHIELD SOCKS



மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பகம்

303, K.K.S. வீதி, யாழ்ப்பாணம் (சி-2993) T.P: 222 5392



புதுப்பொலிவுடன் யாழ்ப்பாணத்தில்

FedEx Express

விரைவானது பாதுகாப்பானது நம்பகமானது

இப்பொழுது உலகின் எப்பாகத்திற்கும் விரைவாக பொதிகள், கடிதங்களை அனுப்பிட நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

THIRUMURUGAN COM NET

Opposite Diolag Phone Shop

259, கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம்.
T,P: 021 222 7835
Fax: 021 222 7836

பலநோக்கு கூ.ச.முன்பாக, 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
T,P: 021 222 7560
Fax: 021 222 7310

E.Mail:thirumugan@lycomail.com (சி-2990)



இலவசமாகக் கண்களைப் பரிசோதித்துச் சிறந்த கண்ணாடிகளைப் பெற்றுக் கொள்ளவும், இழந்த பற்களுக்கு நிகரான சங்குப் பற்களைக் கட்டிக் கொள்ளவும், பொருத்திக் கொள்ளவும், உறுதிமிக்க பற்கிளிப்புக்களைப் பொருத்திக் கொள்ளவும் நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

இல. 91, கே.கே.எஸ்.வீதி, கொக்குவில் சந்தி, கொக்குவில்

கிளை நிறுவனங்கள்:
இல.80, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.

564, 566, ஆஸ்பத்திரி வீதி, யாழப்பாணம்.
T.P: 021 - 222 2486

(சி-2988)

# தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி

தேரேறும் தேவியவள் திருப்பாதம் போற்றுவோம்
ஓம் சக்தி நகைத் தொழிலகம்
(தங்கப் பவுண் வியாபர்ரத்தில் நாணயம் மிக்கவர்கள்)
93, டாக்டர் சுப்பிரமணியம் சாலை, சுன்னாகம்.

துர்க்கா சரணம் தாயே சரணம்.
தெல்லிப்பழை
பல நோ. கூ. சங்கம்
துர்க்காபுரம், தெல்லிப்பழை.

வம்மின் வடம் பிடிமின்; வாழ்த்துமின்!
ஸ்ரீ லங்கா புத்தகசாலை
(மாணவர் மனங்கவர்ந்த புத்தகசாலை)
தொலைபேசி: 2573, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்

எல்லாம் வல்லவளே எம்துயர் போக்கும் தாயே
ஐ.பேரம்பலம் அன் சன்
கோயில் அபிஷேக திரவியங்கள், சரக்கு வகைகளுக்கும், வைத்தியசேவைக்கும் சிறப்பானவர்கள் (காலை - மாலை வைத்தியசேவை)
வைத்தியகலாநிதி பேரம்பலம் பத்மநாதன்
10, கே.கே.எஸ்.சாலை, சுன்னாகம்.

எம்மினம் வாழ வழிகாட்டும் தாயே
டயமண்ட் ரேடேர்ஸ்
(பலசரக்கு வியாபாரத்தில் முன்னோடிகள்)
12, டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.

துர்கையின் அருள் அனைவருக்கும் கிடைப்பதாக.
திருமதி பாக்கியலஷ்மி - நடராஜா
பூபாலகிருஷ்ண ஆச்சிரமம்
224, கே.கே.எஸ்.வீதி சுன்னாகம்.

தமிழர் துயர் போக்கும் தூயவளே போற்றி!
மிது. கொம். MITHU.COM
தொலைத்தொடர்பு சேவையில் முதன்மையானவர்கள்.
T.P: 021 2225560, 021 - 2225686
180, கே.கே.எஸ்.வீதி சுன்னாகம்.
JET MOTORS BUILDING

சமாதானம் நிலைக்க தாயே வழிகாட்டும்!
சன்லைட் ஹைக்கிளீனேர்ஸ்
(போட்டோ பிரதி, லமினேட்டிங் விற்பனர்கள்)
23, மின்நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

அருள்பொழியும் அம்பாள் தேரில் பவனி சிறப்புற வேண்டுகின்றோம்
அம்பாளின் அடியார்களுக்கு அதிசிறந்த ஐஸ்கிறீம்
குணம் கிறீம் ஹவுஸ்
வீரவாகு கட்டடம், பஸ்நிலையயம், பருத்தித்துறை T.P: 070 213048
துர்க்காபுரம், தெல்லிப்பழை
கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.

தேவியைப் போற்றுவோம் தேறுதலடைவோம்
சன்யோ கோப்பி & கூல் பார்
(குளிர்பானப் பிரியர்களின் சொர்க்கம்)
தரமான சிற்றுண்டிகள், குளிர்பானங்களுக்கு எம்மை நாடுங்கள்.
இல.16, பஸ் நிலைய்யம் முன்பாக, சுன்னாகம்.

தேரேறும் தேவியே சரணம் தாயே!
பூபாலசிங்கம் புத்தகசாலை
(புத்தக வியாபாரத்தில் முதன்மையானோர்)
இல.4, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 2226693

தேவியைப் போற்றுவோம் தேசம் மலரும்
சிற்றி பெயின்ற் ஹவுஸ்
(வர்ணமிகு தீந்தைகளின் ஜால மாளிகை)
63, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்

ஸ்ரீ துர்க்கா வல்லவளே வாழ்த்தும் எம்மை
சன்ராஜ் கொம்பிளெக்ஸ்
(தரமானபோட்டோஸ்ரற் செய்பவர்கள்)
138, பிரதான வீதி, சுன்னாகம்.
T.P: 021 - 2225388, 021 - 2223909

## அன்னே உன்னையல்லால் இனி யாரை வேண்டுவன் யான்



எங்கள் வாழ்வும் வளமும் இனிதாக அமைய இன்னருள் புரிபவளே.

ஆவணி உத்தரத்தில் சித்திரத்தேரேறி அவனியை இரட்சித்தருள்வாயாக. நின் கடைக் கண்ணொளிக்காகக் காத்து நிற்கின்றோம் கருணையுள்ள தாயே, எம் மண்ணுக்கும், எமது மொழிக்கும், எம்மினத்துக்கும் மீட்சியைத் தந்து காத்தருள்வாய்.

அம்மா! நின் திருவடிகளே சரணம்!

**கலாநிதி, துர்க்காதுரந்தரி செல்வி.தங்கம்மா அப்பாக்குட்டி (ஜே.பி)**
**தலைவர்**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்.**

## தேர் விழாவின் சிறப்பு

இன்று எல்லோருக்கும் நற்பணி புரிகின்ற அம்பாள் தேரேறி வரும் அற்புதநாள். ஈழத்திருநாட்டிலே முகபத்திர வேலைப் பாடுகளுடன் எண்கோண வடிவிலமைந்த திராவிட மரபுத் தேராக முதன்முதல் அமையப்பெற்றது தெல்லியூர் ஸ்ரீ துர்க்கையின் தேர் என்பது சிறப்பான அம்சமாகும். புது மோடியான இந்தத் தேர் வேற்றுமையான சிறப்புகள். விதி விலகாது ஆக்கத்தின் சிறப்பெய்தும் உபபீடம் தொடக்கம், அதிஸ்டாவும் ஆனைத் தொட்டிப்பார், கொடிஞ்சி, பிரஸ்தானம், விமானம் ஈறாகக் கவசம் வரை முகபத்திர மடக்கைகள் மீட்கப் பெற்றுள்ளமையினால் சிறந்த லயச்சிறப்பு அமைந்துள்ளது.

அரோகரா கோஷம் வானைப்பிளக்க பக்தர்களின் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் அசையும் போது தேரிலுள்ள நூற்றியெட்டு மணிகளும் சேர்ந்து ஒலிக்கும்போது மணியோசை பக்தர்களின் பஜனையுடன் சேர்ந்து பொலிவு பெறும். பிலிப்பைன்ஸ் நாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட முந்நூறு அடி நீளமான தேர் வடத்தின் ஒரு பக்கத்தில் பெண்களும், மறுபக்கத்தேர் வடத்தினை ஆண்களுமாக இழுக்கும் பக்திபூர்வமான ஆரவாரம் வேறெந்தக் கோயில் திருவிழாக்களிலும் காணமுடியாத சிறப்பம்சமாகும்.

நாளை ஆவணித் திருவோணத்தில் "துர்க்கா புஷ்கரணி" தீர்த்தத் தடாகத்தில் அம்பாள் தீர்த்தமாடும் அற்புதக் காட்சியைக்காண எம் கண்களிரண்டும் போதாது. சைவ மக்கள் விரதமிருந்து தேவியை வழிபட்டு, சங்கற்பம் செய்து, தீர்த்த மாடும்போது அவர்தம் பாவங்கள் எல்லாம் ஒழிந்து, புண்ணிய ஆன்மாவாக இடம்பெறுகின்ற நடுநிலையை அடைவதான நம்பிக்கை வளர்ந்து வருவதை இந்தத் தீர்த்தோற்சவ காலத்தின்போது காணக்கூடியதாக உள்ளது. இந்தப் பெருவிழா முடிவாக,

அன்று மாலை கொடியிறக்கம் இடம்பெறும். கொடியிறக்கம் இறைவனின் அருளல் தொழிலைக் குறிக்கிறது. கொடியிறக்கத்தின் பின் மௌன உற்சவம் நடைபெறும். இது உயிர் சிவத்துள் ஒடுங்கிப் பேரின்பம் அடைதலைக் குறிக்கும். கொடியேற்றம் பெருவிழா தொடங்குதலையும், கொடியிறக்கம் பெருவிழா நிறைவுறுவதையும் குறிக்கும்.

தேவியைத் தேடியோரைத் தேடி இன்று தேரிலே பவனி வரும் துர்க்காதேவி, துஷ்டரை வெற்றி கொள்ள மனித உரு எடுத்து பக்தர்களின் துயர்துடைப்பாள் என இன்றைய திருநாளில் நம்புவோமாக.

ஷாலினி புஷ்பநாதன்.
தரம் 11 டி
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.



### தேசநலன்காக்க தேரேறி வருவாய்

ஆற்றா தழுத அருமந்த பிள்ளைக்கு
அமுதம் அளித்த தாயே!
நோற்றார் மனத்தில் நினைத்ததையெல்லாம்.
நொடியில் அளிப்பவள் நீயே
கூற்றம் வறுமையைக் கொன்று செல்வத்தைக்
கொளிக்கச் செய்திடும் குயிலே
மாற்றார் மனத்தின் மயக்கத்தை அறுக்கும்
மங்கள தேரில் வருக!

-மதுரகவி.காரை.எம்.பி.அருளானந்தன்

### தேரேறி வருவாய்

துர்க்கையம்மா எங்கள் துர்க்கையம்மா
துயரங்கள் துடைத்திடுவாய் துர்க்கையம்மா
தெல்லியூர்த் தலத்தில் வாழும் தெய்வ மகளே
தேடி வரும் பக்தர்களுக் கருள்புரிவாயே.

சந்தனம் குங்குமத்துடன் ஒளிர்பவளே
சாகா வரம் எமக்கு அளிப்பவளே
சக்தி இன்று தேரில் ஏறி வருவாயே
சார்ந்து நின்றோம். உன்பாதம் அருள்வாயே.

மாதுமை சிவாஜி
தரம் 8
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி

### துர்க்கா தேவி வருகிறாள்

வருகிறாள் வருகிறாள் தேவி வருகிறாள்
தேரிலேறி வீதிவலம் காண வருகிறாள்.
காண்பதற்கு அழகுக் காட்சி காட்ட வருகிறாள்.
தேரிலேறி எம்மை நோக்கி ஓடி வருகிறாள்.

தாயவளும் சேயை நோக்கி விரைந்து வருகிறாள்.
அன்புடனே அரவணைக்க தேரில் வருகிறாள்.
அகில லோகம் அத்தனையும் காக்க வருகிறாள்
அன்னை துர்க்கா தேவியின்று தேரில் வருகிறாள்.

கிருஸ்ணசாமி கஸ்தனி
தரம் 11
யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி

### தேரேறி வருவாய் தாயே

இன்பத்தில் இதயம் துள்ளி
இனிக்கும் நல்லறங்கள் பொங்கி
சந்தத்தில் கவிகள் ஊற
சாரலில் நாங்கள் தோய
நெஞ்சத்தில் மலர்ந்திருக்கும்
நேசமே உன்னைக் காண
தேரேறி வருவாய் தாயே
தேசங்கள் காப்பாய் தாயே.

ப.பார்த்திபன்
தரம் 8ஏ

### இன்பங்கள் ஓங்கிட அருள்வாயே

தேடி வரும் உன் அன்பருக்கெல்லாம்
தேவி துர்க்கை! அருள் புரிவாய்.
பக்தியுடன் பாடிப் பணிபவர்க்கு
பாரினில் நல்வரம் அளித்திடுவாய்.
துன்பங்கள் நீங்கிடத் துர்க்கா தாயே!
இன்பங்கள் ஓங்கிட அருள் வாயே.

சர்வகா செல்வக்குமாரன்
தரம் 6
கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை.

தேரேறும் தேவியின் அருள் எமது வாடிக்கையாளர்களுக்கு கிடைப்பதாக இன்று வடம் பிடிக்க வாருங்கள். வந்தால் மேல் வீட்டில் இடம் பிடித்தல் எளிது.
WESTERN UNION MONEY TRANSFER
@ CHUNNAKAM
NIETHINI APO
TEL : 94 21-2226267
துர்க்கா பொத்தகச்சோலை
புகழ்பெற்ற புத்தக வியாபாரிகளும் - புதினப்பத்திரிகைகளின் பிரதம முகவரும்
தரமான றபர் முத்திரைகள் (RUbber Stamps) தயாரிப்பாளர்களும்
பஸ்நிலையம் முன்பாக, சுன்னாகம்.
T.P: 222 6267

# செல்வச்சந்நிதி ஆலய சித்திரத்தேர் வெள்ளோட்ட சிறப்பிதழ்

## வருவாய் திருவாய் சிவ குருவே

## அருள்வாய் அனைவர் குறை தீர



ஈழவள நாட்டில் முத்தாகத் திகழும் வடபால் தொண்டைமானாற்றுப் பூவரசடி மகிமையில் கதிர்காமர் கருத்தில் கந்தன் வள்ளிக்கொடி முளைப்பதோடு கொடியேறும் திருவிழாப் பாரம் பரியத்தின் பஞ்வலில் பாரிலுளோர் பக்த அடியவர் சந்நிதிவேலவா முன் 1984 இல் சித்திரத் தேர்கண்டு சீர்பெற, சீர்கெட்ட போர்மூண்டு சீரழித்தும், தளிர்த்துத் துளிர்த்து வளர்ந்து 2004 இல் இந்தத் திருவிழாப் பட்சத்துள் சித்திரத் தேரிலே திருக்கோலம்காண, அண்ணன் ஐங்கரனுக்கும் தம்பி செல்வச் சந்நிதி வேலனுக்கும் ஒரு சேர சித்திரத்தேர்கள் செய்து, 27.08.2004 ஆம் ஆண்டில் சித்திரத்தேர் வெள்ளோட்டம் காண மக்கள் மனது மகேசன் திருவருள் பூந்து பாலித்திருப்பதால் 29.08.2004 ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணியளவில் வள்ளி, தேவயானையுடன் தங்க மயிலேறு பெருமான் தமையன் விக்ன விநாயகன் தன்னிகரில கொலுவான தன் சித்திரத்தேரில், தம்பி வேலாகப் பவனிவர ஐயா முருகா உனைப் பக்தர் சித்தி ரத்தேரி இருந்துவர வடம்பிடிக்க அரோகரா அரோகராவென ஆர்பபரித்துக் கடலலையாய் மனமகிழ்வு பெற்று மக்கள் குறை தீர்க்க

பல்லவி

வருவாய் திருவாய் சிவ குருவே
அருள்வாய் அனைவர் குறை தீர (வரு)

அனுபல்லவி

உருவ அருவ உருவருவாய்
உளது இலதின் உள்ளொளிர்வாய் (வரு)

சரணம் I

திருமால் மருகே இரு மாதுடனே தனிக்
குருவாய் வருவாய் குறைகள் பொறுத்தே
தருவாய் நலமும் கலை கல்வி வித்தை யெலாம்
முருகி யருளில் ஒளிர்நது பிறவியற (வரு)

சரணம் II

சரவண பவ குக சிவகுரு நாதா தவ
அரவணை பெறத் தங்க மயில் மீதேறிச்
சரச கோபாலமருக வள்ளி தேவயானை
அரவணைத்து அடியவர் முன் தோன்ற (வரு)

என வாழ்த்தி ஆசீர்வாதம் அவனருளால் மனம் வாக்குக் காயத்தால் தந்திறையை வாழ்த்தும்.

ஆறு.சிவசண்முகம் ஐயா
பிரதம குருக்கள் தலைவர்.

*ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம்*
*தொண்டைமானாறு.*



## புதுத் தேர்ப் பவனி கண்டு புதுத் தெம்பு பெற்றிடுவோம்



ஆற்றங்கரை ஓரத்திலே அமர்ந்திருந்து அருளளிக்கும்
அன்னதானக் கந்தனிவன் அருள்புரிய வருகின்றான்

அன்பர்களின் துயர்களைந்து ஆறுதலைத் தருகின்றான்
ஆறுதலை கொண்டவனின் ஆறுதலைப் பெற்றிடுவோம்

தந்தைக்கு உபதேசம் செய்த பெருமானை
வந்தனை செய்திடவே சந்நிதி சென்றிடுவோம்

வெற்றியைத் தருகின்ற வீரவேல் கையிற் கொண்டு
முத்தி தரும் நோக்கோடு முருகன் வலம் வருகின்றான்

வேண்டிய வரங்களை வேண்டியபடி அளிக்கும்
விண்ணோர் சிறைமீட்ட வடிவேலன் வருகின்றான்

விரும்பும் வரம் பெற்றிடவே வேலவனின் சந்நிதியில்
விருப்பமுடன் கூடிடுவோம் வெற்றி வேலைப் போற்றிடுவோம்

ஆணவம் கொண்டவரின் ஆணவம் அடக்கிடுவான்
சூரர்களை அழித்த குகன் சுகங்களைத் தந்திடுவான்

பாவங்கள் போக்குவதற்கு பவனிவரும் முருகவேளின்
புதுத் தேர்ப்பவனி காண்போமே புதுத்தெம்பு பெறுவோமே

## அனுசரணை


சியான் ரேடர்ஸ்
பிரதான வீதி,
அச்சுவேலி.

சுஜாத்தா
நகையகம்
பிரதான வீதி,
அச்சுவேலி.

கம்சிகா கூல் ஸ்பொட்
பஸ் நிலையம்,
அச்சுவேலி.

நடராஜா புடவையகம்
பஸ் நிலையம்,
அச்சுவேலி.

நாகதேவி ஸ்ரோர்ஸ்
பெற்றோல் செற் முன்பாக
சங்கானை வீதி,
அச்சுவேலி.

திலீர் ஸ்ரோர்ஸ்
சந்நிதி கோயில்,
தொண்டமனாறு.

பரமேஸ்வரன் ஸ்ரோர்ஸ்
பஸ் நிலையம்,
அச்சுவேலி.

தர்சினி எலக்ரிக்கல்ஸ்
பஸ் நிலையம்,
அச்சுவேலி.

சபா பல்பொருள் விற்பனை நிலையம்
அச்சுவேலி.

முத்துப் பிள்ளையார் பல்பொருள் வாணிபம்
பிரதான வீதி,
அச்சுவேலி.

விநாயகர் பல்பொருள் வாணிபம்
நவீன சந்தை,
அச்சுவேலி.

டாக்டர் கதிரவேலு
ஞாபகார்த்த மருத்துவமனை
வல்வை வீதி, அச்சுவேலி.
அஞ்சலா மெடிக்கல் சென்ரர்
இல.01 - நவீன சந்தை,
அச்சுவேலி.
T.P.0777 11075

நவம் ஹோட்டல்
சந்நிதி கோயில்,
தொண்டமனாறு.

சகல விதமான பட்டுப் புடவைகளுக்கும்,
ஆடைகளுக்கும்
செல்லமுத்து புடவை மாளிகை
பிரதான வீதி,
நெல்லியடி, கரவெட்டி. T.P. 021 - 226 3238

சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை
நெல்லியடி,
கரவெட்டி.

ஸ்ரீஜெய ரேட் சென்ரர்
நெல்லியடி, கரவெட்டி.

டினா ஓடியோ வீடியோ சென்ரர்
பருத்தித்துறை வீதி,
நெல்லியடி

பலசரக்குப் பொருட்கள், பிளாஸ்ரிக் கதிரைகள்,
பாடசாலை உபகரணங்களுக்கு
சுதன் பல்பொருள் வாணிபம்
பஸ்நிலையம், அச்சுவேலி.

லவ்லி ஒலிப் பதிவுக் கலையகம்

லவ்லி கூல் பார்
பிரதான வீதி,
நெல்லியடி, கரவெட்டி.

# செல்வச்சந்நிதி ஆலய சித்திரத்தேர்

# வெள்ளோட்ட சிறப்பிதழ்

## கொழும்பு ஜெனா சிற்பக்கலைக்கூடத்தின் பிரதம ஸ்தபதி

## திரு சரவணமுத்து ஜெயகாந்தன் அவர்களின் வாழ்த்துச் செய்தி.





எல்லா வளங்களும் அள்ளி வழங்கும் செல்வச் சந்நிதி வேல் முருகனுக்கு கோடி வணக்கங்கள். எம்மால் சுமார் பத்து மாதங்களுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட சித்திரப் பெருந்தேரின் பணிகள் யாவும் பூர்த்தியடைந்து இன்று வெள்ளோட்டம் விடப்படுவதையிட்டு பெரு மகிழ்ச்சி அடைகின்றோம். இருபது வருடங்களுக்கு முன்பு யுத்தத்தினால் அழிக்கப்பட்ட சித்திரப் பெருந்தேருக்கு இணையாக புதியதொரு சித்திரத்தேர் மிகக் குறுகியகால இடை வெளியில் அமைக்கப்பட்டு வரவிருக்கின்ற தேர் உற்சவத்தில் முருகப் பெருமான் புதிய தேரில் வலம்வர வேண்டும் என்பது எமது மாண்புமிகு அந்நாள் இந்து கலாசார அமைச்சர் தியாகராசா மகேஸ்வரன் அவர்களின் பெரு விருப்பம். அது சம்பந்தமாக அவர் முன்னாள் சுங்கப் பணிப்பாளர் கே.கே. சுப்பிரமணியம் அவர்கள் மூலமாக என்னைத் தொடர்புகொண்ட போது இப்பெரும் பொறுப்பை எனக்குக் கிடைத்த பெரும் பேறாகக் கருதி ஒப்புக்கொண்டேன். முருகன் அருட் கடாட்சத்தால் அப்பெரும் திருப்பணி எந்தவித இடையூறுமின்றி இனிதே நிறைவுபெற்று இன்று வெள்ளோட்டம் காணத்தயாராக இருக்கின்றது.

எண்கோண வடிவில் அமைந்த இந்தத் திருத்தேர் 32 அடிகள் உயரம் கொண்டது. நூற்றுக்கும் மேற்பட்ட சிற்பங்களை தன்னகத்தே கொண்டது. இவற்றில் தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தின் ஆரம்பகால வரலாறுகள் அருமையாகச் சித்திரிக்கப் பட்டிருக்கின்றன. தேரின் முன் பக்கத்தில் வீறு கொண்ட நான்கு குதிரைகள் தேரை இழுத்துக்கொண்டு பாயும் பாவனையில் அமைக்கப்பட்டிருக்கின்றன. பெரிய யாழிகள் இலங்கையில் மற்றைய தேர்களில் காணப்பட முடியாத வடிவில் செதுக்கப்பட் டுள்ளன.

மேல் விமானத்தில் 24கந்தர்வர் பொம்மைகள் பறக்கும் பாவனையில் அமைக்கப்பட்டிருக்கின்றன. சுமார் பத்துமாத கால இடைவெளியில் இப் பெருந்தேர் அமைக்கப்பட்டு முடிவடைந் திருப்பது எல்லாம் வல்ல அந்த முருகப் பெருமானின் செயலே அன்றி வேறு எதுவும் இல்லை.

இவ்வேளையில் இத்திருப்பணிக்கு வித்திட்ட மாண்புமிகு தியாகராசா மகேஸ்வரன் அவர்களுக்கும் திருப்பணிகளை மேற்பார்வை செய்த வல்லிபுர ஆழ்வார் கோயில் அறங்காவலர் சபையினருக்கும் ஆலயத் திருப்பணிச் சபையினருக்கும் மற்றும் எல்லா விதத்திலும் எமக்கு ஒத்துழைப்பு வழங்கிய எம் பெருமான் அடியவர்கள் அனைவருக்கும் எமது கலையகத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளையும் வாழ்த்தினையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

மேன்மைகொள் சைவ நீதி
விளங்குக உலக மெலாம்.

- சரவணமுத்து ஜெயகாந்தன்.






பிரதான அனுசரணை:
ஜெனா சிற்பக் கலைக்கூடம் கொழும்பு.

# தேவி தேர்த்திருவிழா சிறப்பிதழ்



PHOTO: SHANKO - CHUNNAKAM

### வேர் மீண்டும் ஊன்ற...

*தெல்லிப் பதியிலிருந்து தேசத்தையே காத்துத்*
*தொல்லை துயர் தீர்க்கும் துர்க்கையே – எல்லோரும்*
*வேர் மீண்டும் ஊன்றவே வேண்டித் தொழுகின்றார்*
*ஊர் தாட்டத் தேரிலே ஊர்.*

-சிற்பி

### கல்வி வித்தை தருகிறாள்

தெல்லிப்பளைப் பதியிலே தேவி துர்க்கை இருக்கிறாள்.
அல்லும் பகலும் எம்மையே அன்னை யவள் காக்கிறாள்.
கல்வி வித்தை தருகிறாள் கருணை மொழியும் பகர்கிறாள்.
பல்விதமாய் அருள்கிறாள் பாலர் நாமும் தொழுகிறோம்.

சதாசிவம் ஜலகா
தரம் 12
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி

### துர்க்கை அம்மன்

சக்திகளுள் வீரம் மிக்கவளும், வலிமை மிக்கவளும் துர்க்கை அம்மன் ஆவாள். இவளை மக்கள் தமக்கு வீரமும், வலிமையும் வேண்டும் எனத் துதித்து வணங்குவார்கள். நவராத்திரியில் முதல் மூன்று நாளும் துர்க்கையையே வழிபடுவர்.

அவள் சிங்கத்தின் மீது நின்றுகொண்டு மகிடாசுரனை வதம் செய்கிறாள். இவள் உலகம் முழுவதும் வியாபித்து இருக்கின்றாள். இவள் மஞ்சள் மேனி உடையவள். ஆயுதங்கள் பல கையில் வைத்திருப்பள். எட்டுத் திக்குகளும் இருப்பவள். அவளே ஆவாள்.

திருமாலின் சகோதரி துர்க்கை ஆவாள். இவள் சங்கு, சக்கரம், வில், அம்பு போன்றவற்றை ஏந்தி இருப்பாள். மன்னர்களும், வீரர்களும் துர்க்கையை வழிபடுவர். அவள் தன்னைச் சரணடைந்தவர்களின் இன்னலைத் துடைப்பாள். துன்பங்கள் போக்குவாள்.

இவள் யாழ்ப்பாணத்திலே தெல்லிப்பளை எனும் ஊரில் துர்க்கை அம்மன் வடிவம் தாங்கி மக்களுக்கு அருள் செய்கிறாள். இவளை நாமும் பணிந்து நன்மைகள் பெறுவோம்.

- நிலைக்ஷா
தரம் - 4
யா/ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாலயம்.

### சீருடனே விழாக்கோலம்

துர்க்கா புரத்தாளே துர்க்கை அம்மா
துயர் தீர்க்கும் தாய் நீயே துர்க்கை அம்மா
தேரேறி வலம் வருவாய் துர்க்கை அம்மா
தேடி வந்தோம் ஓடிவாராய் துர்க்கை அம்மா
சீருடனே விழாக்கோலம் கண்டு கொண்டே
சிறப்புடனே வாழ்ந்திடுவோம் துர்க்கையம்மா.

மனோகரன் மயூரன்
ஆண்டு 2பி
யா/ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலை.

**மலர் ஆக்கம்:**
துர்க்கா பொத்தகச்சோலை,
சுன்னாகம்.

### தெல்லிப்பழை துர்க்கை அம்மன்

அம்பிகையானவள் பல்வேறு வடிவங்களிலே எழுந்தருளி அடியார்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கிறாள். அந்த வகையிலே தெல்லிப்பழையிலே துர்க்கை அம்பாளாக சிங்க வாகனத்திலே எழுந்தருளி அடியார்களுக்கெல்லாம் அருள் பாலித்துக் கொண்டிருக்கிறாள்.

இந்த ஆலயம் அமைந்துள்ள இடம் எப்பொழுதுமே தூய்மையாக இருந்து தெய்வீக ஒளி வீசுகின்றது; வரும் அடியார்களை பக்தி வெள்ளத்தில் மூழ்கச் செய்கின்றது.

இந்த ஆலயத்திலே செவ்வாய்க்கிழமைகளில் விசேட வழிபாடுகள் இடம்பெறுகின்றன. அம்பாள் சிங்க வாகனத்திலே திருவுலா வரும் காட்சியும் இடம்பெறுகின்றது. அத்துடன் வருகின்ற அடியார்களுக்கெல்லாம் அன்னதானமும் வழங்கப்படு கிறது. இங்கு எந்நாளுமே எந்நேரமென்றில்லாது அடியார்கள் வந்து வழிபாடாற்றிச் செல்வதை அவதானிக்க முடிகிறது. இங்கு வரும் அடியவர்கள் சைவ ஆசாரமுறைப்படி வந்து வணங்குகின்றனர். அந்தணர்களின் வேத ஒலியும், வாத்தியக் கலைஞர்களின் வாத்திய ஒலிகளும் அம்பாள் அடியார்களைத் தெய்வீகச் சிந்தனையில் ஆழ்த்துகின்றன.

இத்தனை சிறப்புக்கள் பொருந்திய இந்த அம்பாள் ஆலயத்தை நல்ல முறையில் பேணிவரும் துர்க்கா துரந்தரியின் தெய்வீகப்பணி நீடுழி நிலைக்கவேண்டுமென அந்த அம்பாளின் மென்மலர்ப் பாதங்களை பணிந்து நிற்போமாக.

ச.தனுஷ்யா
தரம் 4பி
யா/ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாசாலை.

### திருவருள் தந்திடுவாய்

சித்திரத் தேரினிலே~அம்மா நீ
சிங்காரமாய் வந்திடுவாய்
அங்கயற்கண்ணியே வந்து நீ
அருள் மழை பொழிந்திடுவாய்.

இலுப்பை மர நிழலினிலே~நீ
இங்கிதமாய் உறைந்திடுவாய்
அன்பர் குறை தீர்த்திடவே~நீ
அருட்கண்ணைத் திறந்திடுவாய்.

நல்லவராய் வாழ்ந்திடவே~தாயே நீ
நல்வழியைக் காட்டிடுவாய்
வல்லவராய் இருந்திடவே~நீ
வல்லமையை தந்திடுவாய்.

வி.யலஜா
துர்க்காபுரம் மகளிர் இல்லம்.


தேவியைப் போற்றுவோம் தேறுதலடைவோம்.
முத்திரைகள், மணியோடர், பதிவுத்தபால், கடுகதி தபால், தமிழ் - ஆங்கில நூலக சேவை, றோணியோ, தமிழ் - ஆங்கில மொழிபெயர்ப்பு, கடிதம் தயாரிப்பு, தமிழ் - ஆங்கில தட்டச்சு சேவைகளுக்கு
WESTERN UNION | MONEY TRANSFER
வெளிநாட்டிலிருந்து வரும் உங்கள் பணத்தினை பத்து நிமிடத்தில் உங்களிடம் தருவோம்.
நிதினி முகவர் தபாலகம்
டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம். Tele &Fax: 222 6267

அன்னையின் கடைக்கண்கள் அகிலத்தைக் காக்கும்
ஸ்ரீ முருகன் நகைமாடம்
(நவீன நகைகளுக்கு நம்பிக்கையானவர்கள்)
25, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்

தேவியின் திருப்பாதம் சரணம் தாயே
ஜசுபி பழத்தொழிற்சாலை
சுன்னாகம் ப.நோ. கூ. சங்கம்
காங்கேசன்துறைச் சாலை,
சுன்னாகம்

துர்க்கையைத் துதிப்போம் தூய்மையடைவோம்
ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை
(புத்தக வியாபாரத்தில் புதுமை செய்வோர்)
235, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

துர்க்கையைத் துதிப்போர்க்குத் துன்பமேயில்லை
ராஜா மெடிக்கல்ஸ்
(மருந்துச் சரக்கு வியாபாரத்தில் முதன்மையானவர்கள்)
பிரதான வீதி, சுன்னாகம்.

தேம்பியழும் எம்மினத்தைத் தேற்றி வழிகாட்டும் தாயே
புகழ் பல்பொருள் களஞ்சியம்
(பலசரக்கு வியாபாரத்தில் புகழ்பெற்றவர்கள்)
இல.3, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.

தேரேறும் தேவியால் தேசம் சிறக்கட்டும்!
ஜெய கிருஷ்ணா
இரும்பு, பெயின்ற், கட்டடப்பொருள் விற்பனையாளர்கள்
20, காங்கேசன்துறைச் சாலை, சுன்னாகம்.

தேவியைப் போற்றுவோம் தூய்மையடைவோம்
தபோதரன்ஸ்
அலுமினியம் Fittings கண்ணாடிகள் மொத்த, சில்லறை விற்பனையாளர்கள்
(படம் பிறேம் போடுவதில் நிபுணர்கள்)
57, பிரதான வீதி, சுன்னாகம்.

தரமான போட்டோஸ்ரற் சேவைக்கு
கௌரி தொலைத்தொடர்பு சேவை
கே.கே.எஸ்.வீதி, மருதனார்மடம், T.P: 070 -212427 வெளிநாடு: 0094 0212424
கபிலன் தொலைத்தொடர்பு சேவை
கே.கே.எஸ்.வீதி, ஜொட்டியாலடி. T.P: 070 -212718 வெளிநாடு: 0094 70212718

தேவி தேரேற தேசம் சந்தோஷத்தில்
மங்கை சில்க்
(மங்கையர் மனங்கவர்ந்த ஜவுளி மாளிகை)
இல.8, நவீன சந்தை, சுன்னாகம். இல.15, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

சக்தியைப் போற்றுவோம் சகல பிணியுமகலும்
பொஸ்கோ BOSECO
(பாடசாலை உபகரண விற்பனை முன்னோடிகள்)
இல.3, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

எங்கும் மங்களம் பொங்க வழிகாட்டுமம்மா
வாணி விலாஸ்
(சிற்றுண்டிப் பிரியர்களின் சொர்க்கம்)
தலைசிறந்த சைவ உணவகம்
76, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.

வாழியவள் சித்திரத்தேர், வளர்க அவள் புகழ்
நாகம்ஸ் சினிமா & நாகம்ஸ் பாட்டா
(அங்கீகாரம் பெற்ற பாட்டா விற்பனையாளர்கள்)
நவீன சந்தை, சுன்னாகம்.

தேரிலே வாரும் எம் துயர் போக்கும் தாயே
போட்டோ சண்கோ
DIGITAL COLOUR LAB
(புகைப்படப்பிடிப்பில் முதன்மையானவர்கள்)
204, கண்டிவீதி, வவுனியா. 024 2221130
84, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.

# தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேர்த்திருவிழா சிறப்பிதழ்

## தேச நலன் காக்க தெல்லிப்பழையில் தேரேறி வருகிறாள் துர்க்கை

ஈழத்தின் வடபால் யாழ்ப்பாணத்தின் கண்ணே விளங்கும் தெல்லிப்பழையில் எழுந்தருளி அருள்பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ துர்க்கா தேவி அம்பாளின் தாரண வருஷத்துக்கான மஹோற்சவம் கடந்த 17.08.2004 செவ்வாய்க்கிழமையன்று கொடியேற்ற வைபவத்துடன் இனிதே ஆரம்பமாகித் தொடர்ந்து பன்னிரெண்டு தினங்கள் நடைபெற்று வருகின்றன. இன்றைய தினம் தேர்த் திருவிழா ஆகும். இன்று இலட்சோப இலட்ச மக்கள் துர்க்கை அம்பாளின் தேர்த் திருவிழாவைக் கண்டு களிப்பதற்காகத் தெல்லிப்பழையில் கூடுகின்றனர்.

பூத்தவளாக, பூத்தவண்ணம் புவனம் பதின்நான்கையும் காத்தவளாக விளங்கும் ஆதியும் அந்தமும் அற்ற அருட்பிராட்டி துர்க்கை அம்பாளின் பூர்வீக வரலாற்றுச் சிறப்பினை ஆராய்கின்றபொழுது தெல்லிப்பழை எனும் திருப்பதி, இந்தப் பதியில் உள்ள ஒரு பிரிவாகிய, பழுதற்ற உழவுத் தொழிலைக் கைக்கொண்டுள்ளோரும், கொடைப்பண்புகளாலும் செறிந்திலங்கும் உழுகுடைப்பதி வவுணாவத்தையில் "உடம்பினால் பெற்ற பயன் ஆவதெல்லாம் உடம்பினுள் உத்தமனைக் காணல்" என்னும் நெறிக்கேற்ப வாழ்ந்த சைவ மரபிலே வந்த பெரியார் கதிர்காமர் அவர்கள் அந்தக் காலத்தில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருந்தால் இங்குள்ளோர் தல யாத்திரையின் பொருட்டு இந்தியா செல்வதும், திரும்பி வருகையில் தெய்வ மூர்த்தங்களைக் கொண்டு வருவதும் அடிக்கடி நிகழ்வதாய் இருந்தன. இந்த வகையில் இந்தப் பெரியாரின் வாழ்வில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் இன்று நிகழ்காலத்தில் இந்தத் திருத்தலத்தின் நிலைக்கு அத்திவாரமாயின. இத்தகு பூர்வீக வரலாற்றுச் சிறப்போடு பன்னெடுங் காலமாக அருளாட்சி செய்து வருகின்ற துர்க்கை இன்று எல்லா அன்பர்களையும் அரவணைத்து நல்லருள் பாலிப்பதற்காகத் தேரேறி வருகின்ற திருக்காட்சி கண்கொள்ளாக் காட்சியாக அற்புத நிகழ்ச்சியாக அமைகின்றது.



பல்வேறு நாடுகளில் இருந்து வருகைதந்த அன்பர்கள் இன்றைய தினம் தேவி துர்க்கை தேரேறி வருகின்ற திருக்காட்சியைக் கண்டு களிக்கின்றனர். துர்க்காபுரத்துக்கு இருக்கின்ற சிறப்புக்களில் ஒன்று ஐந்து ஈஸ்வரங்களில் ஒன்றான மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் புராதன சிவத் தலமாக விளங்குகின்ற நகுலேஸ்வரத்துக்கும், (கீரிமலைச் சிவன் கோயில்) புகழ்மிக்க அபிஷேகக் கந்தனாக விளங்குகின்ற மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலுக்கும் அண்மையிலே தெல்லிப்பழை எனும் பேரூர் திவ்விய ஷேத்திரம் அமைந்துள்ளது. துர்க்காதேவி அன்னையின் ஆலயத்தைச் சிறந்த நிர்வாக ஆளுமைத் திறனுடன் பரிபாலித்து வருபவர் நாவலருக்குப் பின் நமது மண்ணிலே தோன்றிய அன்னை சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள். இவர்களின் ஆலயப் பணிகள் அனைத்தும் சமூகத்தை மையமாக வைத்து நிறைவேற்றும் திருப்பணிகள் ஆகும்.

தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலயம் சமூக நோக்கிலே 1979 ஆம் ஆண்டு துர்க்காதேவி பெண்கள் தொண்டர் சபையையும், வயது முதிர்ந்த பெண்களுக்கான அன்னையர் இல்லத்தையும், 1985 ஆம் ஆண்டு மகளிர் இல்லத்தையும், 2002 ஆம் ஆண்டு ஆய்வு நூலகம் ஒன்றையும், 2001 ஆம் ஆண்டில் அன்னதானப் பணிகளை நிறைவேற்ற அன்ன சத்திரத்தையும், அறநெறிப் பாடசாலையையும் மற்றும் யாத்திரை விடுதி, கல்யாண மண்டபம், மணி மண்டபம், அறக்கொடை நிதியம், பிறந்தநாள் அற நிதியம் ஆகியவற்றைச் செவ்வனே அமைத்து அளப்பெரிய பணிகள் ஆற்றி வருகின்றது.

ஏனைய ஆலயங்களுக்கும், சைவசமய வழிபாட்டு முறைகளுக்கும் முன்னுதாரணமாக அமைகின்ற துர்க்கை அம்மன் ஆலயத்தில் நடைபெறும் தேர்த்திருவிழா இந்திர விழாப்போல காட்சியளிக்கின்றது. தேரேறி வரும் அன்னை தேசநலன் காக்கவேண்டுமென அனைவரும் பிரார்த்திப்போமாக.




தொலைளகற்றி துன்பங்கள் தீர்க்க துர்க்கையம்மாள் தேரேறிவருகிறாள்
நவநாகரிக வனிதாம்பிகையின் மனம் கவரும் ஜவுளி வகைகளுக்கும், கண்கவர் புடவைகளுக்கும்
மங்கல நிகழ்வுகளுக்கும்
மகா ராசியான ஸ்தாபனம்
மகாராசி சில்க்ஸ்
59, நின சந்தை உட்புறம், யாழ்ப்பாணம்
T.P.No.0777 286247
(C/3006)

யாழ்.நகரில் புதிய உதயம்
K.K.போன் சேவிஸ்
இல.01, நவீன சந்தை மேல்மாடி,
மக்கள் வங்கிக்கிளைக்கு
அருகில், யாழ்ப்பாணம்
அனைத்துப் போன் வகைகளும் SIM காட், Kit காட் மற்றும் உதிரிப்பாகங்களை மலிவாகவும், தரமாகவும் பெற்றுக்கொள்வதோடு போன் பழுது, லொக் உடைத்தல், போன்றவற்றை துரித கதியில் பெற்றுக் கொள்ளவும்
உத்தரவாதத்துடன்
பற்றுறிகளைப் பெறவும்
நாடுங்கள்
K.K.போன் சேவிஸ்
(C/3007)



விசேஷம்
PURE GINGELLY OIL
சுத்தமான நல்லெண்ணெய்
தரமான எள்ளில் சுகாதார முறைப்படி தயாரிக்கப்பெற்றது
A PRODUCT OF MULTII - OIL INDUSTRIES LIMITED INUVIL Sri Lanka.
(C/2991)

தேரேறிவரும் துர்க்கையை தரிசித்து
நற்பயன் பெறுவோம்
புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள்,
வாழ்த்து மடல்கள், சஞ்சிகைகள்,
பத்திரிகைகள் அனைத்தையும்
பெற்றுக்கொள்ள நீங்கள்
நாடவேண்டிய இடம்
பூபாலசிங்கம் புத்தகசாலை
இல.04, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(C/3005)



தேரேறிவரும் துர்க்கையை தரிசித்து
நற்பயன் பெறுவோம்
நாகம்ஸ்
சினிமாவும்
சக நிறுவனங்களும்
கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.
(C/3003)

சகல விதமான கோடியல்,
ஊறுகாய் வகைகளுக்கும்
சூரியா நெல்லிரசம்
உற்பத்தி நிறுவனம்
ஏழாலை மேற்கு சுன்னாகம்
(C/3004)